# வைத்தியக் கைமுறைகள்

முதலியார்
சு. திருச்சிற்றம்பலவர்
தொகுத்தது.

தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம்

610

# வைத்தியக் கைமுறைகள்

முதலியார்

சு. திருச்சிற்றம்பலவர்

தொகுத்தது

9152 C.C

யாழ்ப்பாணம்

1938

திருமகள் அழுத்தகம்
சுன்னுகம்

[பதிப்புரிமை ஆசிரியர்க்கே]

# இந் நூலில் அடங்கியவை


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | உரிமையுரை | | iv |
| 2. | முகவுரை | | v |
| 3. | சிறப்புரைகள் | | xiii |
| 1. | விஷவைத்தியம் | .... | 1 |
| 2. | வயிற்றுளைவு | ... | 15 |
| 3. | மூத்திர ரோகங்கள் | .... | 24 |
| 4. | மூலரோகங்கள் | ... | 30 |
| 5. | தந்தரோகங்கள் | ... | 39 |
| 6. | தலையிடி | .... | 52 |
| 7. | ஜலதோஷம் (தடிமன்) | .... | 55 |
| 8. | நயன ரோகங்கள் | .... | 61 |
| 9. | காதுரோகங்கள் | .... | 71 |
| 10. | பீநச ரோகங்கள் | .... | 75 |
| 11. | வாத ரோகங்கள் | .... | 80 |
| 12. | பால ரோகங்கள் | .... | 85 |
| 13. | பெண்களுக்கு உண்டாகும் ரோகங்கள் | | 97 |
| 14. | பிரசவ வைத்தியம் | .... | 107 |
| 15. | இரண வைத்தியம் | ... | 110 |
| 16. | வேறுபல ரோகங்கள் | .... | 144 |
| 17. | பொதுவான வைத்திய விஷயங்கள் | | 171 |
| 18. | வைத்தியப் பழமொழிகள் | | 182 |
| 19. | நோய்களின் அகராதி | | 195 |

# உரிமையுரை

இந்நூற்பதிப்பை

நோயணுகா வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து,

அதனை யாவரும் மேற்கொண்டொழுகுமாறு வற்புறுத்திய

எனது அருமைத் தந்தையார்

**திரு. ஆறுமுகம் சுப்பிரமணியர் அவர்களுக்கு**

என் நன்றியின் அறிகுறியாக நின்று நிலவிடுமாறு

அன்புடன் உரிமைசெய்து

வெளியிடுகின்றேன்.

---

உ

கடவுள் துணை

# முகவுரை

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே."

—திருமூலர்.

இவ்வாறு திருமூலநாயனுர் தமது "திருமந்திரம்" என்னும் நூலின்கண் வற்புறுத்திக் கூறினமையால், உடலொடு சேர்ந்து, உடலைப்பற்றி வருகின்ற நோய்த் துன்பங்களை நுகர்கின்ற உயிர், நோய்கள் நீங்குங்கால், உண்டாகின்ற இன்பத்தை நுகர்ந்து, இவ்வுலகில் நீண்டகாலம் உடலொடு வாழ்வதற்கும், தன்னையும் கடவுளையும் அறிதற்கும் உடல்நலம் ஓம்பப்படுதல் வேண்டுமென்பது நன்கு அறியப்படுவதாகின்றது.

உடலினை ஓம்புவதற்கு உடலின் தொழில்கள், உடற் கூறுகளின் அமைப்புக்கள் என்னும் இவற்றைப் பற்றிக் கூறும் நூல்களில் பயிற்சியும் வேண்டும். இதனால் உடலின் நுட்பமும், உடலில் உள்ள உறுப்புக்களின் நிலைகளும், வாத பித்த கபமாகிய மூன்றின்

அளவுகளும், நோய்களுக்கு உட்காரணங்களும் தெரியப்படும். இத்தகைய கல்விப் பயிற்சியானது ஆண் பெண் மக்கள்பால் இருத்தலோடு, உடல் நலத்திற்குப் பொருந்திய உணவுகள், பானங்கள், ஒழுக்கங்கள், வழக்கங்கள், தட்ப வெப்ப நிலைமைகள், இவற்றின் அளவுகள் இன்ன இன்னவென்பதும், உடல் நலத்திற்கு மாறானவை இன்ன இன்ன வென்பதும் ஆகிய பகுத்தறிவும் இருப்பின், நோய்களுக்கு வெளிக் காரணங்களுஞ் செவ்விதின் தெரியப்படும். இத்தகைய கல்வி யறிவால் உடலில் நோய்கள் வாராவண்ணம் தடுக்கப்படுதலாகும். இஃதொன்று. நோய்கள் பல்வேறு காரணங்களால் வந்துற்றால், அவைகளைப் போக்குவதற்குரிய மருந்து வகைகளும், பத்திய முறைகளும் யாவருக்குந் தெரிந்திருத்தல் வேண்டும். இஃது இரண்டாவது.

இவ் விரண்டு வகையான உபாயங்களைப்பற்றி ஆசிரியர் திருவள்ளுவநாயனார் தம் "திருக்குறள்" நூலில் 'மருந்து' என்னும் அதிகாரத்தில் சுருங்கக் கூறினமையே யல்லாமல், அறிவாளர் பலர் தாம் தாம் முறையே வெளியிட்ட ஆயுள்வேத நூல்களின் முகவுரைகளிலும், சித்த மருத்துவ நூல்களின் முகவுரைகளிலும், தனித் தனிப் புத்தகங்களிலும் விரித்து விளக்கியிருக்கின்றமையால், இவைகளைப்பற்றித் திரும்பவும் நான் இப் புத்தகத்தில் விளக்க வேண்டியதில்லை.

நான் சென்ற பல வருடங்களாக வைத்தியத் துறையில் மிகுந்த மனவூக்கங் கொண்டு வந்ததன் பயனாக



இத் துறையில் அறிவும் அநுபவமும் வாய்க்கப்பெற்ற வைத்தியர்கள், சந்நியாசிகள் ஆகிய இவர்கள் தம் வாயிலாகக் கேட்டறிந்து, எனது அனுபவத்திலுஞ் சித்தியான கைவைத்திய முறைகள் சிலவற்றையும், ஆயுள்வேத பண்டிதர்களும், தனிச் சிறப்பு வாய்ந்த சித்தர் முறைகள் அறிந்த மருத்துவர்களும் வெளியிட்டுள்ள முக்கியமான நூல்கள் சிலவற்றைப் பலகால் ஆராய்ந்து, அவைகளிலிருந்து அறிந்தெடுக்கப்பட்ட கைவைத்திய முறைகள் சிலவற்றையுந் தொகுத்து எழுதிவைத்துக் கொண்டிருந்தேன்.

நான் இவ்வாறு முதலடியில் வைத்துக் கொண்டிருந்த வைத்தியக் கைமுறைகளுள் சிலவற்றைத் திருமகளார் மா. மங்களம்மையார் பெண்களின் முன்னேற்றத்திற்காக நடத்தும் "தமிழ்மகள்" என்னும் தம் மாத வெளியீட்டின் வாயிலாக வெளிப்படுத்திப் பலரும் அறியத் தெரிவிப்பாராயினர். அதன்பொருட்டு நான் அவ் அம்மையார்க்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவைகளைக் கண்ட என் ஆப்த நண்பர் சிலர், இத்தகைய அரிய வைத்தியக் கைமுறைகளையெல்லாம் ஒழுங்குபடத் திரட்டி ஒரு நூலாக எழுதிப் பதிப்பித்து வெளிப்படுத்தின், ஆங்காங்குள்ள தமிழர் பலர்க்கும் பயன்படுமென்று என்னைத் தூண்டினமையால், அன்னார் சொல்லை மறுக்காமல், நான் அரிதிற் சேர்த்து வைத்துக் கொண்டிருந்த இவைகளையெல்லாம் புத்தக வடிவில் கொண்டுவர வேண்டுமென்னும் மனவுறுதி கொண்டேன்.

இப் புத்தகத்தின்கண் விஷக் கடிகள், மூத்திர ரோகங்கள், மூல ரோகங்கள், தந்த ரோகங்கள், நேத்திர ரோகங்கள், காது ரோகங்கள், பீநச ரோகங்கள், வாத ரோகங்கள், பால ரோகங்கள், பெண்களுக்கு உண்டாகும் ரோகங்கள் முதலானவைகளுக்குரிய இலகுவான கை மருந்துகளும், வேறு பலவகையான சில ரோகங்களுக்குரிய முக்கியமான சில கை முறைகளும் எடுத்தெழுதப்பட் டிருப்பதுமன்றி, பிரசவ வைத்தியம், இரண வைத்தியம், பொதுவான வைத்திய விஷயங்கள் என்பனவும், சில சுகாதார விதிகளும், வைத்தியப் பழமொழிகளுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. பழமொழிகளுக்கு எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளுமாறு பொருளும் எழுதப்பட்டிருக்கின்றது.

கற்றவர், கல்லாதவர், செல்வர், வறியர் ஆகிய எல்லாரும் தத்தமக்கு உண்டாகுஞ் சிறு நோய்களுக்கு இந்நூலின் உதவியால் தாமாகவே சிகிச்சை செய்துகொண்டு, அவைகளை மாற்றி உடல் நலம் அடையக்கூடிய வகையில் எல்லாம் தெளிவாகவே எழுதப்பட்டிருக்கின்றன. சிகிச்சைகள் சிலவற்றிற்கு யாவரும் எளிதில் அறியும் வண்ணம் குறிப்புக்களுந் தெளிவுறக் காட்டப்பட்டிருக்கின்றன. நோயாளர் தமக்கு வேண்டிய சிகிச்சைகளுள் தம்மால் செய்துகொள்ளக் கூடிய தொன்றைத் தெரிந்தும் உவந்தும் எடுத்து, தம் வீட்டு நிலங்களிலும், அவற்றின் சுற்றிடங்களிலும் அகப்படக்கூடிய மூலிகைகளைக் கொண்டும், கடைச் சரக்குகளைக் கொண்டும் சொல்லப்பட்ட ஒழுங்குகளின்படி உள் மருந்துகளை



யும், வெளி மருந்துகளையும் நல்ல பாகமாக்கி, தம் நோய்க்குப் பரிகாரஞ் செய்துகொண்டு, அவைகளைப் போக்கிச் சுகம் அடையவேண்டுமென்பது எனது உண்மையான நோக்கமாகும். இவ்வாறு செய்துவந்தால், இந்திய இலங்கை நாடுகளின் உயர்வு கருதிப் பெருமுயற்சி செய்யப்படும் இந்நாட்களில், நமது இருநாடுகளின் வைத்தியமுறைகள் பெருஞ் சிறப்படைவனவாகும்.

இங்ஙனம் என்னால் மனக் கிளர்ச்சியுடன் செய்யப்பட்ட இத் தொகுப்பு நூலின்கண், குற்றங் குறைகள் உளவேல், அவைகளை வைத்தியங் கற்றுத் துறைபோய அறிஞர்கள் பொறுத்துக் கற்றுக்குட்டியாகிய எனக்கு நட்புரிமையில் எடுத்துக்காட்டி யருள்வரேல், அவைகள் சீர்ப்படுத்தப்படும்.

இவ்வாறு நான் மேற்கொண்ட நல்நோக்கம் நிறைவேறும்பொருட்டு இந்நூலின் பதிப்புக்குத் தமது அனுபவத்தால் நல்லனவென்று தாம் கண்ட வைத்தியக் கைமுறைகள் சிலவற்றையும் எனக்குத் தந்துதவிய ஆயுர்வேத ஆச்சாரிய பண்டிதர் எம். எஸ். முகிதீன் தம்பி அவர்கள், சிற்றானைக்குட்டிச் சுவாமியின் கைவைத்திய முறையில் மிகுந்த அனுபவம் பெற்ற வதுளை திரு. வ. ஞானபண்டிதர் அவர்கள், சுதுமலை ஆயுள்வேத வைத்தியர் திரு. ந. அண்ணாமலைப்பிள்ளை அவர்கள், வைத்தியத் துறையில் அனுபவம்பெற்ற எச். ரீ. பிள்ளை அவர்கள் முதலான நண்பர்களும், வைத்திய முறைகளில் நான் கொண்டிருந்த ஐயங்களைப் போக்கியருளி, இந்நூலின் கையெழுத்துக் கொப்பிகளைக் கூர்ந்து பரிசீலனைபண்ணி, இன்றியமை

யாத திருத்தங்கள் சிலவற்றையும் புகுத்தி, எனக்கு ஊக்கம் ஊட்டிய ஆயுள்வேத வைத்தியரும், சுதேச வைத்தியக் கலாசாலை ஆசிரியருமாகிய திரு. க. கந்தசாமி அவர்களும், சுதேச வைத்தியரும், "பரராஜசேகரம்" என்னும் வைத்தியநூற் பதிப்பாளருமாகிய திரு. ஐ. பொன்னையபிள்ளை அவர்களும், வைத்தியக் கலையில் வல்லவராகிய சிறும்பியடி திரு. த. கந்தையபிள்ளை அவர்களும் ஆகிய இப் பெருந்தகையாளர் எல்லாரையும்பற்றிய நினைவு என் நெஞ்சினின்றும் என்றும் நீங்காது.

ஸ்ரீ விவேகானந்த வித்தியாசாலை ஆசிரியரும், ஆயுள்வேத வைத்தியருமாகிய திரு. த. சுப்பிரமணியம் என்பார் என்னுடன் இருந்து, எழுதுதல், ஒப்பு நோக்குதல் முதலானவை செய்ததிலும், இந்நூலிலுள்ள கைமுறைகளை வகைப்படுத்தியவிடத்து, தக்க இடங்களில் தமது அனுபவ முறைகள் சிலவற்றையுஞ் செருகி, கையெழுத்துக் கொப்பிகளை ஆயத்தப்படுத்தியதிலும் எடுத்துக்கொண்ட பெரும் உழைப்பு மிகமிகப் பாராட்டத்தக்கது. கையெழுத்துக் கொப்பிகளுள் சிலவற்றைச் செவ்விதின் எழுதியுதவிய ஸ்ரீ விவேகானந்த வித்தியாசாலை ஆசிரியரும், பாலபண்டிதருமாகிய திரு. ச. கோபாலபிள்ளைக்கும் எனது நன்றி உரித்து.

தம்முடைய பிற கடமைகளை முற்றும் புறக்கணித்து, இந்நூலின் கையெழுத்துப் பிரதிகளையும், அச்சுத் தாள்களையும் பகலிலும் இரவிலும் பார்வையிட்டு, அவற்றின்கண் இருந்த பலவகையான குறைகளையும், பிழைகளையும் நீக்குதலால் தமது உடல்நலமும் உளநலமும் குன்றுதலை



யும் பொருட்படுத்தாது, மிக்க களைப்புடன் பல அரிய திருத்தங்கள் செய்து, இந்நூலில் நல்ல நடையையும், செந்தமிழ்ச் சுவையையும் அமைத்துத் தந்தவர்கள், தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியாளரும், இக்கால மேலைத்தேச சுகாதார முறைகளைத் தாம் நன்கு அறிந்தமையால், மக்கள் உடல் நலமும், உள நலமும் உடையோராய் வாழ்வதற்கு வேண்டப்படும் பல துறைகளில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் நீண்டகாலமாகத் தொண்டாற்றியவரும், தமிழ் மொழியில் சீரிய முறையில் புதிய நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்னும் பெரு விருப்பொடு தமிழ்த் தொண்டில் ஈடுபட்டுள்ளவரும், சைவப் பெரியாருமாகிய உயர்திருவாளர் சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்களே யாவார்கள். தமிழ் மொழிப்பற்றினாலும், பொதுநலப் பணியில் தாம் கொண்டுள்ள மனவெழுச்சியினாலும் இப்பெரியார் எனக்குச் செய்த இப்பேர் உதவிக்கு எனது மனமுவந்த வணக்கத்தையும், நன்றியையும் உரிமைப்படுத்துகின்றேன்.

இந்நூலினுக்குச் சிறப்புப்பாயிரச் செய்யுள் அன்போடு இயற்றித்தந்து, இதனைச் சிறப்பித்த நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களுக்கு எனது நன்றி உரியதாகுக.

இக் கைவைத்தியநூல் வெளிவந்து எங்கும் பரவித் தமிழ் மக்களுக்குப் பிரயோசனப்படுதல் வேண்டுமென்னும் நல் எண்ணத்துடன் முற்பட்டு, இது தன்னைத் தமது "திருமகள் அழுத்தகம்" என்னும் அச்சியந்திரசாலையில் மிகுந்த சிரத்தையுடன் அழகுற அச்சிட்டுக்

கொடுத்த “ஈழகேசரி” பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள்பால் நான் மிக்க நன்றியுடையேனாய் இருக்கின்றேன்.

“பிருந்தாவனம்,”
யாழ்ப்பாணம்,
21-9-1938.

இங்ஙனம்,
சு. திருச்சிற்றம்பலவன்,

# சிறப்புரைகள்

நவாலியூர்
**திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் இயற்றியது**

## நேரிசை ஆசிரியப்பா

நீல மேனி நெடுமா லுந்தியந்
தாமரை பயந்த நான்முகக் கடவுள்
ஆக்கிய வுலகத் தாருயிர் வாழ்க்கைக்
கின்றி யமையா விரும்பொரு ளொன்றிய
நல்லுண வென்றே சொல்லினர் புலவர்
விதிமுறை தெரிந்து சுவைபெறப் புரிந்த
சீரிய வுணவே யாரமிழ் தென்பர்
தூயநல் லுணவைச் சுவைபெற வாக்கும்
மேயநல் விதிகள் நான்முறை நாடி
மன்னிய பாகநூல் முன்னா ளியற்றினன்
முந்தைப் பிறவி முதிர்வினை யாலும்
இந்தப் பிறவியில் எதுவி னாலும்
வந்திடு நோய்களை மருத்துவ ரின்றியும்
தாமே யறிந்து தகுவன வுஞற்றி
நோய்தபு மின்ப வாழ்வினை யடையப்
பிணிகளின் மூலமும் அணைதரு குணங்களும்
மாற்றும் மருந்தும் பாற்பட வகுத்துப்
பன்னாட் பலபட முயன்றே யிந்நாள்
செய்முறை தெரிக்குங் கைமுறை வாகடம்
தொன்னூன் மரபிற் றொகுத்துயாத் திட்டனன்
மன்னிய விலங்கை மதிமுக மென்னும்

பொன்னியாழ் நகரிற் பொலிந்திடு சைவத்
திருக்குலம் விளக்கும் உருக்கிள ரொண்சுடர்
மெய்ப்புகழ் பரப்பிய சுப்பிர மணியன்
ஒப்பில் பெருந்தவத் துதித்திடு மைந்தன்
சீரர சளித்த சிறப்புறு முதலி
யாரெனும் மேன்மை யரும்பெறற் குரிசில்
இறையவன் சேவடி மறவா மனத்தன்
அடியவர்ப் பேணு மன்புடை யண்ணல்
மன்பதைக் கிரங்குஞ் செம்புலச் செம்மல்
கற்றவர் சிந்தையிற் கலந்த
சிற்றம் பலமெனுஞ் செய்தவத் தோனே.

---

ஆயுள்வேத வைத்தியரும், சுதேச வைத்தியக்
கலாசாலை ஆசிரியரும், இலங்கைத் தமிழ் வைத்திய
ஆலோசனைச் சங்க அங்கத்தினரும் ஆகிய

**திரு. க. கந்தசாமி அவர்கள் எழுதியது**

தேக தேச காலங்களுக் கேற்றபடி உடை, நடை, உணவு, மருந்துகள் என்பன ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால், மக்கள் அவைகளுக்கு முற்றும் மாறானவைகளைக் கொண்டு இடர்ப்படாதிருத்தல் வேண்டும். இவற்றுள் நல் உணவு முறைகளைப்பற்றி எவரும் எளிதில் விளங்கக்கூடியதாக முதலியார் சு. திருச்சிற்றம்பலவர் அவர்கள் **சுத்த போசந பாகசாத்திரம்** என்பதனை அரும் பாடுபட்டு முதலில் எழுதி அச்சிடுவித்தார்கள்,



இப்பொழுது முதலியார் அவர்கள் எழுதி முடித்து அச்சிடுவிக்கும் **வைத்தியக் கைமுறைகள்** என்னும் நூலின் கையெழுத்துப் பிரதியைக் கூர்ந்து வாசித்தேன். முற்காலங்களில் நாடுநகரங்களில் இருந்தவர்களுள் பலர் இவ்வித முறைகளையே கையாண்டு சுகதேகிகளாகி இருந்தார்கள். அத்தகையவர்களை இப்பொழுதும் அங்கங்கே காணலாம். இந்நூலில், ஏழைகளும் தங்கள் நோய் உபத்திரவங்களைப்பற்றி எளிதில் அறிந்து, அவைகளை உடனே தீர்க்கத் தகுந்த சிகிச்சை முறைகளும், அவைகளின் கைப்பாகம் செய்பாகங்களும் செவ்வையாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இக் கைவைத்திய முறைகள், ஒரு பெரிய நோய் உபத்திரவம் வந்து நேரிட்டபோதும், உத்தம வைத்தியரைக் காணும்வரையும் அவ்வுபத்திரவத்தைத் தணித்து வைக்குந் தன்மையன. இந்நூல் ஒரு தரும வைத்தியனுடைய உதவியைப்போன்ற ஓர் உதவியைத் தரும் என்பது நிச்சயம்.

இந்நூலானது, வைத்தியர்கள் அல்லாதவர்களுக்கேயன்றி, வைத்தியர்களும், வைத்திய முறைகளைக் கற்கும் மாணவர்களும் ஆகிய எல்லார்க்கும் பயன்படக் கூடியதேயாகும். அந்த **சுத்த போசந பாகசாத்திரமும்**, இந்த **வைத்தியக் கைமுறைகளும்** ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டியன என்பது எனது விருப்பம்.

நல்லூர்,
1-8-38.

**க. கந்தசாமி,**

---

சுதேச வைத்தியரும்,
'பரராச சேகர' நூற்பதிப்பாளருமாகிய

### திருவாளர் ஐ. பொன்னையா அவர்கள் எழுதியது

முதலியார் சு. திருச்சிற்றம்பலவர் அவர்களின் நீண்டகால உழைப்பின் பயனால் வெளிப்போந்தது இம் மருத்துவநூல். அவர்கள் பல வைத்திய நூல்களை ஆராய்ந்து, நோய்களின் குணங்களைத் தேர்ந்தெடுத்து எழுதியும், தம் அனுபவத்திலுள்ளனவும், தாம் சந்திக்க நேரும் பற்பல வைத்தியர்களின் அனுபவத்திலுள்ளனவுமாய மருந்து முறைகளுள் சாரமானவையும், வைத்தியரல்லாத பிறராலும் எளிதில் செய்யத்தக்கவையுமாயுள்ளவைகளைத் தொகுத்தும் இந்நூலை முடித்துள்ளார்கள். இதில் சிற்சில பகுதிகளை நாமும் மேற்பார்வையிட்டோம். இது பொதுவாக வைத்தியர்களுக்கும், முக்கியமாக அத்துறையிற் பயிலாத மற்றையோர்களுக்கும் பெரும்பயன் பயக்கும் அரியநூல் என்பதற்கு வழக்கில்லை.

முதலியார் அவர்கள் இதற்கு முன்னரும் இது போலவே **சுத்த போசந பாகசாத்திரம்** ஒன்று எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். பொதுநலத் தொண்டில் ஈடுபட்டுழைக்கும் அவர்களது இச்செயல் பெரிதும் பாராட்டற்குரியது.

ஏழாலை,
3-8-38.

**ஐ. பொன்னையா,**

---

# விஷ வைத்தியம்

### புலிமுகச்சிலந்தி

1. புலிமுகச்சிலந்தி கொட்டினால், பலாக்காயின் பாலைக் கொட்டினவாயிலில் வைத்து, தேங்காய் மட்டையில் நெருப்பு மூட்டி, அது சூடேறியபின், கொட்டின இடத்தின்மேல் பிடிக்கின் விஷம் நீங்கும்.

முற்காலத்திலே, ஒவ்வொரு வீட்டிலும் தாவாரத்திலுள்ள கைமரத்தில் பலாக்காயின் பாலை அப்பி வைத்திருந்தார்களென்று அநேகர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். ஆயினும், அது என்ன உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருந்ததென்பதைப் பிற்காலத்தில் பலர் அறிந்திலர். அவ்வறியாமை காரணமாக அந்தப் பழக்கம் இப்பொழுது கிடையாது. வீடுகளில் பலாக்காய், அல்லது பலாப்பழம் வெட்டும்பொழுது, அதன் பாலை எடுத்து வீட்டிலுள்ள ஒரு கைமரத்தில் திரட்டி வைத்தால், அது சிறிது காலத்தின் பின், நீர்ப்பிடிப்பில்லாமல் கட்டியாய் இறுகிவிடும். அதில் ஒரு கடலை அளவு எடுத்துத் தூளாக்கிப் புலிமுகச்சிலந்தி கொட்டிய இடத்தில் தூவி மேலே சொல்லிய பிரகாரம் சூடு காட்டின், கடுப்பு நீங்கிப் பூரணசுகம் உண்டாகும். இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னே காலஞ்சென்ற ஒரு விஷ வைத்தியரால் இம்முறையானது கையாளப்பட்டு வந்தது.

2. கடிவாயிலில் உப்பு, புளி, மிளகு, ஏலம் என்னும் இவற்றை ஒன்று சேர்த்து அரைத்துப் பூசிவிடுக.

இப்படி மூன்று நாட்கள் காலை மாலைகளில் இடைவிடாது பூசுதல்வேண்டும். மிளகு கஷாயத்தை முதல்நாள் வெறு வயிற்றில் சாப்பிடுதல் மிக அவசியம். அடுத்தநாள் பேதி மருந்து சாப்பிடல்வேண்டும். மறுநாளும் மிளகு கஷாயம் சாப்பிடல்வேண்டும். ஆகாரம் கறுத்தசாமிக் கஞ்சியொழிய வேறொன்று மாகாது.

3. தென்னோலையினது அடிமட்டையைத் துவைத்துப் பிழிந்து, ஒரு அவுன்சு சாறு கொடுத்தால் விரோசனமாகி விஷம் நீங்கிவிடும்.

4. இரண்டு அல்லது மூன்று ஈச்சமிலை கொண்டு வந்து நறுக்கித் துவைத்துப் பிழிந்து, அதில் ஒரு அவுன்சு பிரமாணம் குடித்தலால் விரோசனமாகும். சிலந்தி விஷம் நீங்கும்.

5. பழம்புளியையும் சுண்ணும்பையும் ஒன்று சேர்த்து மத்தித்துக் கடிவாயிலிற் பூசி, ஒரு பிடி துத்தியிலையை அரைத்துக் குழந்தைப் பிள்ளையின் சிறுநீரில் கலக்கிக் கொடுப்பதும் நன்றே.

## தேள் அல்லது கோடுக்கன்

இது சில சமயங்களில் வீடுகளின் சுவர்களிலும், கதிரை மேசைகளிலும், மற்றுமுள்ள இடங்களிலும் காணப்படும். இது ஒன்று முதல் மூன்று அங்குல நீளமுள்ளதாயும், விஷமுடைய ஒரு சிறிய வால் உடையதாயும் இருக்கும். இதன்மீது எங்கள் கைகால் பட்டவுடனே கொட்டிவிடும். அது கொட்டிய விஷமோ தாங்க முடியாத வேதனையைக் கொடுக்கும்.



1. இதற்கு உடனே ஒரு ஈரவெங்காயத்தை எடுத்து அந்தக் கடிவாயிலில் கொஞ்சநேரம் தேய்ப்பின் கடுப்புத் தீர்ந்துவிடும். இது கைகண்ட முறையாகும்.

2. நவச்சாரத்தில் கொஞ்சம் சுண்ணும்பை வைக்கின், அது தண்ணீராய்க் கரைந்துவிடும். அந்த நீரைத் தேள் கொட்டிய வாயிலில் விடின் விஷம் நீங்கும்.

## மட்டைத்தேள், நண்டுவாய்க்காலி, தேனீ, குளவி

1. இவைகளுள் ஒன்று கொட்டினுல், உடனே சுண்ணும்பைப் பூசி, பின்னர், ஒரு கத்தரிக்காயைச் சுட்டு அதன்மேல் வைத்துக் கட்டிவிடின் குணமுண்டாகும்.

2. நாயுருவிப் பூண்டின் கொழுந்தைக் கசக்கிக் கடிவாயிலில் தேய்ப்பின் குணம் வரும்.

3. சுண்ணும்பையும் ஒட்டறையையும் சேர்த்து மசித்துக் கடிவாயிலிற் போட்டாற் குணமாகும்.

4. உருளைக்கிழங்கைக் கத்தியால் சீவி, அதை அரைத்துக் கடிவாயிலில் போடுதலாலும் சுகங் காணும்.

5. பெருங்காயத்தை நீரில் உரைத்துக் கடிவாயிலில் பூசினும் குணம் உண்டாகும்.

6. ஒரு சீலையில் மண்ணெண்ணெயைத் தோய்த்துக் கடிவாயிலில் போட்டு, அதன்மேல் மண்ணெண்ணெயைச் சிறிது நேரம் விட்டுக்கொண்டிருந்தாலும் சுகங் காணும்.

7. கோழிக்காரத்தில் ஒரு நெல்லிடை எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்துச் சுருட்டி வாயில் போட்டுச் சப்பி அதன் ரசம் விழுங்குவதோடு, மேலே கூறப்பட்ட பூச்சு மருந்துகளில் ஒன்றைக் கடிவாயிலில் பிரயோகஞ் செய்வதும் நல்லதே.

**குறிப்பு.**— கோழிக்காரமாவது, கோழியின் மலத்தின் மேலே காணப்படும் வெண்மையான ஒருவகைச் சத்தாகும். அதைச் சேகரித்து ஒரு சீசாவில் வைத்துக் கொண்டால், அது வெகுகாலத்திற்குக் கெட்டுப்போகாம லிருக்கும்.

## எலிக்கடி

1. இதற்கு, இரு மேசைக் கரண்டிக் குப்பைமேனிச் சாறும், அவ்வளவு நல்லெண்ணெயும் ஒன்று சேர்த்து ஒரு முறை குடித்தல்வேண்டும். மூன்று நாட்கள் பச்சை அரிசிக் கஞ்சி மாத்திரம் குடிக்கலாம். நான்காம் நாள் ஸ்நானஞ்செய்க. அன்று உப்பை வறுத்துச் சேர்த்துக்கொள்க. புளிமட்டுஞ் சேர்க்கப்படாது. ஐந்தாம்நாள் முதல் பத்தியமில்லை.

2. ஒரு மஞ்சள் தேற்றை எடுத்து அதைநல்லெண்ணெயில் தோய்த்துக்கொள்க. பின்பு, ஒரு விளக்குத் திரியை எடுத்து அதையும் நல்லெண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி, எண்ணெயில் தோய்த்த மஞ்சள் தேற்றை அதிற் பிடித்தால், மஞ்சளிலிருந்து சுடர் விழும். அந்தச் சுடரில் ஒரு துளியை எடுத்துக் கடித்த இடத்தில் விட்டு, எரித்து நார்த்த மஞ்சள் துண்டால் சுட்டுவிடுக. அதனால் விஷம் நீங்கும்.



3. கடிவாயிலில் பலவனிலையும், 6 மிளகும் நசுக்கி வைத்துக் கட்டிக்கொண்டு, முருங்கையிலையை இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றில் 2 மேசைக் கரண்டியளவு உட்கொள்ளலாயின், எலி விஷம் தீர்ந்துவிடும்.

4. எலியின் மலத்தைத் தூள்செய்து வாழைப் பழத்தினுள் வைத்து மூடி, வாயிற் போட்டு மென்று தின்னுமாறு செய்தல்வேண்டும். இப்படி மூன்றுநாள் காலையில் உண்பித்துப் பத்தியங் காக்கும்படி செய்தால் குணமுண்டாகும்.

5. எலிக்கடிக்குப் பொன்னைக் காய்ச்சிச் சுடுவது நாட்டு வழக்கம்.

6. நன்னாரிவேரை அரைத்துப் பசுப்பாலில் கலக்கிக் கொடுப்பதும் நன்றே.

## நாய்க்கடி

1. கோழிமலத்தைக் கடிவாயிலில் வைத்துக் கட்டுக. இப்படி ஐந்துநாள் காலையில் செய்துவரின், நாய் விஷம் நீங்கும்.

2. இரதவாழைத் தண்டைக் கத்தியால் சுரண்டிக் கடிவாயிலில் வைத்துக் கட்டின் குணம் வரும். பிரண்டையிலையை மஞ்சளுடன் அரைத்து வைத்துக் கட்டினும் குணமுண்டாகும்.

**குறிப்பு.**— கடிவாயிலில் இரத்தம் வராவிடின், அக்கடிவாயிலில் ஒரு கத்தியால் கீறி, இரத்தம் வரச்செய்த பின்னரே, கோழி மலத்தை வைத்துக் கட்டுதல் வேண்டும்

3. வெடிபலவனிலை, உள்ளி, மிளகு ஆகிய மூன்றையும் அரைத்துக் கடிவாயிலில் வைத்துக் கட்டின் குணம் வரும். புண் ஆறும் வரையில் காலை தோறும் இப்படி வைத்துக் கட்டிவருதல் வேண்டும். கடிவாயிலில் சவ்வு வளர்ந்திருப்பின், நாகதாளியை அரைத்து அதன்மீது மூன்றுகாலை கட்டிவரின், சவ்வானது கரைந்துவிடும். அதன்பின், முன்போலப் பலவனிலையைப் புண் மாறும்வரையும் கட்டிவருக. 15 நாள் குளிப்பு முழுக்கு ஆகா.

4. நாய் கடித்தவுடன், ஒரு செப்புத் தகட்டை அல்லது ஒரு செப்புக்காசைக் கடிவாயிலில் வைத்து ஒரு நூலால் கட்டிவிட்டு, அதன்மீது பாவலிலையை அரைத்துவைத்துக் கட்டுக. புண் மாறும்வரையிலும் இப்படியே ஒவ்வொரு காலையுஞ் செய்துவரின் குணமுண்டாம். சவ்வு உண்டாயின், நாகதாளியை அரைத்து மூன்றுநாள் வைத்துக் கட்டியபின், பாவலிலையை முன்போல் வைத்துக் கட்டினால் குணங் காணும்.

## காணாக்கடி

ஒருவகையான சிலந்திப்பூச்சியானது மனிதர் நித்திரையில் இருக்கும்போது, கடித்துவிடும். ஆயினும், உடனே கடுப்பு உண்டாகாது. விடிந்தபின், எழும்பியவுடன், அச்சிலந்தி கொட்டியவிடத்தில் வீக்கங் காணப்படும். சிறுக வேதனையும் உண்டாம். இப்படிக் காணப்படுவதுதான் காணாக்கடியென்று சொல்லப்படும்.



1. இதற்குப் பொன்னாவரையின் சாற்றைப் பூசின் குணம் வரும்.

2. குப்பைமேனி இலை, மிளகு ஆகிய இரண்டையும் அரைத்து எடுத்து, சிறுபிள்ளையின் மூத்திரத்தில் குழப்பி வீக்கத்தில் பூசினால் குணங் காணும்.

3. அடுப்புச்சாம்பல் அல்லது திருநீறு பூசினுங் குணங் காணும்.

4. ஒரு குடம் நீரில் ஒரு பிடி அறுகம்புல்லைப் போட்டு, இரண்டுமணி நேரம் ஊறவைத்து அந்நீரில் ஸ்நானஞ் செய்தபின், ஏழு மிளகைச் சப்பி விழுங்கின் குணங் காணும்.

**குறிப்பு.**— சாதாரண நீரில் ஸ்நானஞ் செய்தபின்னர், கடைசியாக, மேற்சொல்லியபடி அறுகம்புல் ஊறிய நீரைத் தலையில் வார்த்துக்கொள்ளவேண்டியது.

## தாராவுண்ணிக்கடி

தாராவுண்ணி கடித்தால் தேங்காயெண்ணெயைப் பூசினால் வீக்கம் வற்றிவிடும்.

## மண்ணுணிப்பாம்புக்கடி

இது கடித்தால் நல்லெண்ணெயுங் குரக்கன்கூழுங் கலந்து ஒரு வாரம் வரையில் உள்ளுக்குக் கொடுப்பதுண்டு.

“மண்ணுணிப்பாம்பு கடித்தால் மலையிலும் மருந்தில்லை” என்றும், “அதற்கு மருந்து மடியிலிருக்கின்

றது" என்றும், "அம்மருந்து சுண்ணாம்பு" என்றுஞ் சொல்லப்படும்.

## ஒணான்கடி

ஒணான் கடித்த இடத்தில் பிறையைப்போன்ற காயம் உண்டாகும். அப்போது வீக்கம், நமைச்சல், குத்தல், நோவு, சோருதல், மலத்தில் பல நிறந் தோன்றல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு இரண்டு மேசைக் கரண்டியளவு மூங்கிற்குருத்தின் ரசம் எடுத்து, அதில் வெருகடி யளவு மிளகுப் பொடி சேர்த்து, ஐந்து நாள் இரண்டு வேளையுங் குடித்தால் இவ்விஷந் தீரும்.

## அறணைக்கடி

இது கடித்தால் சரீரம் முழுவதும் நடுங்கல், வாயிலிருந்து நுரை வீழ்தல், நாவு தடித்தல் என்னும் இக்குறிகள் காணப்படும். அறணை கடிக்கவே கடிக்காது என்றும், கடித்தால் மரணந்தான் என்றுஞ் சொல்லுகின்றனர். "அட்டை கடித்தாற் குட்டை, அறணை கடித்தால் மரணம்" என்று ஒரு பழமொழி உண்டு. "அறணைக்கடியை யாற்றுஞ் சிறு குறிஞ்சான்" என்று இன்னொரு பழமொழியும் உண்டு. ஆகவே, அறணைக் கடிக்கு இம்மூலிகையை உபயோகிக்கில் குணங் காணும் என்க.

இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் நம் நாட்டிலே ஒருவரை அறணை நக்கினதென்றும், அவர் 3, 4 வருடங்களாக மிகக் கஷ்டப்பட்டு அநேக வைத்தியங்கள் செய்வித்துக்கொண்ட பின்புதான் குணமடைந்தார் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றோம்.



## சில்விஷங்கள் சகலவற்றிற்கும் சிகிச்சை

தயிர்வேளை, குப்பைமேனி, கறிமுருங்கையிலை ஆகிய இவற்றுள் ஒன்றின் சாற்றை, வலதுபக்கம் விஷம் தீண்டியிருந்தால் இடது காதிலும், இடது பக்கம் விஷந் தீண்டியிருந்தால் வலது காதிலும் பிழியின் விஷம் நீங்கும்.

## விஷக்கடிவாயிலில் உண்டாகும் வீக்கம், குத்து, வலிகளுக்கு ஒற்றடம்

அவுரிவேர், எருக்கின்வேர், அமுக்கராய், கறிமஞ்சள், மிளகு, முருங்கைப்பட்டை, நொச்சிப்பட்டை ஆகிய எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து இடித்து வறுத்து, வேப்பெண்ணெய் விட்டுக் குழைத்துப் பொட்டணங் கட்டி வலியுள்ள இடத்தில் ஒற்றடங் கொடுத்து அதைக் கடிவாயிலிலும் வைத்துக் கட்டிவிடுக.

## மயிர்க்கோட்டி

மயிர்க்கொட்டிப்பூச்சி உடம்பில் பட்டுவிட்டால் அதன் மயிர் பட்டவிடத்தில் நல்லெண்ணெயைத் தடவி, மயிரை ஒரு கூரிய கத்தியினால் வழித்து நீக்கிவிட்டு, பின்னும், நல்லெண்ணெயைத் தடவினால் வீக்கமும் அரிப்பும் நீங்கும்.

## மயிர்க்கோட்டியின் மயிர் கண்ணில்பட்டுக் கண்ணை வீங்கச்செய்து கொடுக்கும் வேதனைக்குக் கைமுறை

நன்றாகப் பழுத்த தேன்கதலி வாழைப்பழத்தை எடுத்துத் தோலை நீக்கிவிட்டு, அதை நல்லெண்ணெயில் அமுக்கி எடுத்துக் கண்ணில் வைத்துக் கட்டிக்கொண்டு

படுத்துறங்கின் குணங் காணும். இது காலஞ் சென்ற பிரபல வைத்தியர் கஸ்தூரி வேலுப்பிள்ளை அவர்களது கைமுறையாகும்.

## பாம்புக்கடி

பாம்பு கடித்தவுடனே, கடித்த இடத்திற்கு நாலு அங்குலத்திற்குமேல் ஒரு கயிற்றால், அல்லது ஒரு சீலைத் துணியால் நன்றாக இறுகக் கட்டிவிடுக. பின்னர், ஒரு சிறிய கூரிய கத்தி முனையால் கடிவாயிலைச் சொற்பமாகக் கீறி இரத்தம் வரும்படி செய்தல்வேண்டும். அதன் பிறகு, அக் கடிவாயிலின்மீது இரண்டுபடி சுடுநீரை மெதுவாக ஊற்றிக்கொண்டிருத்தல்வேண்டும். இப் பரிகாரங்கள் இவ்வாறு நடந்துகொண்டிருக்கும்பொழுதே, ஒருவர் விஷவைத்தியரைத் தேடிச் செல்லுதல்வேண்டும்.

விஷவைத்தியர் அகப்படாவிட்டால், மேற்கூறியவாறு செய்து, பின்னர், ஒரு அவுன்சு நிறைகொண்ட கருந்துளசி அல்லது வெண்துளசிச் சாறு குடிக்கக் கொடுத்தல்வேண்டும். அல்லது ஒரு அவுன்சு வாழைத் தண்டின் சாற்றைக் குடிக்கினும் குணம் உண்டாம். பாம்புக் கடிக்குக் கையாட்சியான சில முறைகளை இங்கே எடுத்துக் காட்டுவாம்.

1. கடிவாயிலை ஒரு கூரிய கத்தியால் கீறி இரத்தம் வடியச் செய்துவிட்டு, ஒரு கோழியைக் கொண்டுவந்து அதன் மலவாசலைக் கடிவாயிலில் வைத்துப் பிடித்துக் கொண்டிருக்கின், விஷம் அக்கோழியில் ஏறுவதால் அது மரணமடையும். அதை எடுத்துவிட்டு, பின்னும், பல



கோழிகளை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துப் பிடிக்கவேண்டியது. கடைசியாகப் பிடிக்கும் கோழி சாகாதிருந்தால், தேகத்தில் விஷமில்லையென்றே கொள்ளல் வேண்டும். இம் முறை சீனதேசத்தில் முக்கியமாகக் கையாளப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அடைக்கோழியே இதற்கு உத்தமமாகும்.

2. பப்பாஇலைத் துளிரும் சுண்ணாம்பும் சேர்த்துக் கசக்கிக் கடிவாயிலில் வைத்துக் கட்டிவிடின் விஷந்தீரும். இது ஒரு சிங்கள விஷவைத்தியருடைய கையாட்சியான முறையாகும்.

3. பாம்பு கடித்தவுடனே, கடிபட்டபகுதியை மண்ணெண்ணெயில் அமிழ்த்திவைத்தால், புகை புறப்படுவது போல் கடிவாயிலிலிருந்து பச்சையாக ஆவிபோன்ற தொன்று வெளிப்படும். அதன் மூலமாய் விஷம் வெளிப்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

பாம்பு கடித்து விஷந் தலைக்கேறி அறிவுமயங்கியிருந்தால், மயிலிறகை நெருப்பில் கொளுத்தி, அதை ஒரு தென்னோலைக்குழலில் செலுத்தி நசியமிடின் விஷமிறங்கி அறிவு தெளியும்.

4. உத்தாமணி வேரைச் சந்தனக்கல்லின்மீது சலம் விட்டுச் சந்தனம்போல் அரைத்துக் கலிக்கம் போடுக. பின்னர், அதில் ஒன்றரைக் கழஞ்சு அளவு உள்ளுக்குக் கொடுப்பின், விஷமிறங்கி உடனே சரீர ஆரோக்கியமுண்டாகும்.

5. அழுஞ்சில்வேரினது பட்டையைக் காடியிலரைத்துக் காடியில் கலக்கிக் கொடுத்தால் விஷம் நீங்கும்.

6. 31 மிளகு, 4 உள்ளிப்பல்லு ஆகிய இரண்டையும் தேன்விட்டரைத்து எடுத்து உட்கொள்ளக்கொடுத்தால் விஷம் நீங்கும். பின்பு, ஒரு சட்டியில் வேப்பெண்ணெயை விட்டு, அது நன்றாகக் கொதித்தபின், அதன்மேல் ஒரு கரண்டி உத்தாமணிச் சாறு விடுக. அந்த எண்ணெயிலிருந்து வரும் ஆவியைப் பாம்பு கடித்த வாயிலில் பிடிக்கின் விஷக்கடுப்பு நீங்கும்.

7. "மண்ணில் வேந்தும் மலையில் முனிவனும்
உண்ணுஞ் சோற்றுக்கு உருசியு மானதும்
கண்ணில் மூக்கில் காதில் பிழிந்திடில்
விண்ணில் நிற்கும் விஷங்குதித் தோடுமே."

[பூவரசம்பட்டை, சிற்றகத்திவேர்ப்பட்டை, கறியுப்பு ஆகியவற்றைச் சம எடையாக எடுத்துச் சாறெடுத்து வடிகட்டி, கண் காது நாசிகளில் பிழிந்திடில் எல்லா விஷங்களும் இறங்கும்.]

8. ஒரு நெருப்புக் குச்சியைத் தட்டிக் கடிவாயிலிற் பிடிப்பதாலும் விஷம் நீங்கும்.

9. கஞ்சாங்கோரையைச் சமூலமாக எடுத்துத் துவைத்துச் சாறுபிழிந்து, $\frac{1}{2}$ அவுன்சு முதல் $1\frac{1}{2}$ அவுன்சு வரையில் ஒருநாளில் இருமுறை கொடுக்கின் அட்டநாக விஷமும் தீரும்.



10. ஆடுதின்னாப்பாளையினது சமூலம், அல்லது ஐவிரலிச் சமூலம் என்ற இவற்றில் ஒன்றைத் துவைத்துப் பிழிந்தெடுத்த சாற்றில் ஒரு அவுன்சுவீதம் மூன்றுநாள் காலைநேரத்தில் கொடுத்துவரின், சர்ப்பவிஷம் தீரும்.

11. பஞ்சபாண்டவர்முல்லை என்பதன் வேர், அல்லது பெருமருந்துக் கொடியின் வேரில் ஒருபிடி எடுத்து, நீர்விட்டு அவித்து எடுத்த கஷாயத்தைக் கொடுக்கின் சர்ப்பவிஷம் தீரும்.

**குறிப்பு.**—கடிவாயிலைப் பற்றிக்கொண்டு விஷமேறினால், அவ்விடத்தில் நோவும், தினவும், வீக்கமும், எரிச்சலும் உண்டாகும். இக்குணங்களில் ஒன்றேனும் இல்லாவிடில், விஷம் ஏறவில்லையென்றே அறிய வேண்டியது.

சர்ப்பங் கடித்தவுடன் கசப்பு வஸ்துக்களைத் தின்றால், அச்சுவை மாறுபடுகின்றமையாலும், தலைமயிரைப் பிடித்திழுத்தால் நோவு தெரியாமையாலும் விஷம் தலைக்கேறிவிட்டதென்றே அறியவேண்டியது.

9152 C.C

விஷத்தினால் மூர்ச்சையுடன் கிடக்கும் ஒருவர் தேகத்தில் எங்கேனும் ஒரு பேனாக்கத்தியால் கீறுவதனால் அதிலிருந்து இரத்தம் வரின், அவரது உயிர் நீங்கவில்லையென்றும், கீறியவிடத்தில் இரத்தத்திற்குப் பதிலாக நீர் பொசியினும், கைகால்விரல்களைப் பிடித்திழுக்கின் நெட்டி முறியாதிருக்கினும் உயிர் நீங்கிவிட்டதென்றும் அறிதல்வேண்டும்.

கடிவாயிலில் ஒரு செப்பு அல்லது பித்தளைப் பாத்திரத்தை வைத்துப் பிடிக்கும்பொழுது, அது சுடுமாயின் கடியுண்டவன் உடலில் விஷமேறியிருக்கின்றதென்றும், அது குளிர்ச்சியை யுடையதாயின் விஷமில்லை யென்றும் அறிக.

விஷத்தால் உயிர் அடங்கிய சவத்தை 36 மணி நேரம்வரைக்கும் தகனஞ் செய்யக்கூடா தென்பது வைத்தியநூல் கருத்தாகும்.

"நம்பிக்கை யுண்டேல் தும்பிக்கை துணைசெய்யும்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

# வயிற்றுளைவு

இது பெருங்குடலில் உண்டாகின்ற ஒரு வியாதி. இதைத் தொற்றுநோய்களி லொன்றாகக் கூறுவர்.

தேகத்திலே அதிகசூடு ஏற்படுங்காலத்திலும், உண்ட உணவு சீரணிக்காமல் சிக்கல்படுங் காலத்திலும், இன்னும் பலகாரணங்களினாலும் இந்நோய் உண்டாகின்றது. மலக்கட்டு, சீதம், சூடு, வாய்வு, ஒருவகைப்பூச்சி ஆகிய இவைகள் இவ்வியாதியில் முக்கியமாகச் சம்பந்தப்படுகின்றன. ஆகவே, இதற்குரிய பரிகாரங்கள் மலத்தை நீக்கவும், சீதக்கட்டை வெளிப்படுத்தவும், சூட்டை ஆற்றவும், வாயுவைக் கண்டிக்கவும், பூச்சிகளை நாசஞ் செய்யவுங் கூடியனவாய் இருத்தல்வேண்டும்.

வயிற்றுக்கடுப்புக் கண்டால், அதாவது, வயிறு கடுத்துக் கொஞ்சங்கொஞ்சமாக அடிக்கடி வயிற்றிலிருந்து மலம் போய்க்கொண்டிருந்தால், அதுவே வயிற்றுளைவுக்கு ஆரம்பமென நாங்கள் எண்ணவேண்டியது. உடனே, ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணெயைக் கொடுத்து அடுத்த நாள் தொடக்கம் கீழே காணப்படும் கைமுறைகளில் ஒன்றை உபயோகித்தால் வியாதி குணமடைவதாகும்.

புளித்த தயிரைச் சுடுசாதத்தில் விட்டு ஊட்டுவதும்; வெங்காயத்தை நெய்யிற் பொரித்து சோற்றிலிட்டுக் கொடுப்பதும்; நெல்லி வற்றல், மாதுளம்பழத்தோல், மாங்காய்ப்பருப்பு, சுண்டங்காய் வற்றல், கருவேப்பிலை, வெங்

தயம் ஆகிய இவைகளைச் சமவெடையாகக் கூட்டியரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் நாளொன்றுக்கு மூன்றுதரங் கொடுப்பதும்; அத்திப்பிஞ்சு, மாங்கொட்டைப் பருப்பு, துத்தியிலை ஆய இவை முதலியவைகளைச் சமைத்துச் சாப்பிடச்செய்வதும் என்ற இவையெல்லாம் வீட்டுவைத்தியமுறைகளாகும். ஆரம்பத்தில், இவைகள் ரோகத்தைக் கண்டிக்கும். ஆயினும், வியாதி முதிர்ந்துவிட்டால் வேறு மருந்துகளையே பிரயோகித்தல்வேண்டும்.

இவ்வியாதிக்கு நம் நாட்டிலே கையாளப்பட்டு வரும் முறைகளில் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டுவாம். நோய்க்குத் தகுந்தபடி இவற்றுள் ஒன்றைத்தெரிந்து எடுத்து உபயோகிப்பது, நோயாளிகள் அல்லது நோயாளிகளைப் பராமரிப்போர் கடனாகும்.

மேலே சொல்லியவாறு ஆமணக்கெண்ணெய் கொடுத்து, வயிற்றிலிருந்து மலத்தைக் கழற்றியதன் பின்புதான் இக்கைமுறைகளுள் ஒன்று கொள்ளப்படுதல் வேண்டும்.

1. எருமைத்தயிரில் மிளகுத்தக்காளியின் இலைச்சாறு, அல்லது எலுமிச்சம்பழரசம் விட்டு 2, 3 நேரம் குடிக்கின் குணம் உண்டாகும்.

2. மங்குஸ்தான் பழத்தின் ஓட்டை நீர்விட்டு அவித்து இறுத்து எடுத்து ஒரு அவுன்சுவீதம் 3 நேரம் குடிக்கின் குணம் உண்டாகும்.

3. எருமைப்பாலைக் கறந்தவுடனே எலுமிச்சம்பழரசம் விட்டு 3 காலையில் குடித்துவரின் குணம் உண்டாகும்.



4. தென்னங்கள்ளில் எலுமிச்சம்பழ ரசம் விட்டு, 3 காலையில் குடித்துவரின் குணம் உண்டாகும்.

5. சாதிக்காய் 1 பாதி, வெள்ளைக்கசகசா 3 கழஞ்சு, சாம்பல்மொந்தன் வாழைக்காய் ஒருதுண்டு, கொட்டைப்பாக்குப் பிரமாணமுள்ள மாதுளம்பிஞ்சு ஒன்று ஆகிய இவற்றை எடுத்துக்கொள்க. இவற்றுள் மாதுளம்பிஞ்சைத் தணலில் சுட்டெடுத்து, மற்றைய மூன்று பொருள்களோடு சேர்த்தரைத் தெடுத்து உண்க. இப்படி 3 நேரம் உட்கொள்ளின் வயிற்றுளைவு தீரும்.

6. அதிகாலையில் ஸ்நானஞ் செய்துவிட்டு, ஆட்டுப்பாலைக் கறந்தவுடன், அப்பாலில் அரைக்காற்படி எடுத்து, பழம்பாக்குப் பிரமாணமுள்ள ஒரு மாதுளம்பிஞ்சை அதில் அரைத்துப் போட்டுக் கலக்கிக் குடித்தல்வேண்டும். இப்படி மூன்று காலை செய்துவந்தால் குணங் காணப்படும்.

7. அரைமுற்றலாயுள்ள விளாங்காய் ஒன்றை நன்றாகத் துருவி எடுத்துக்கொண்டு, அதற்கு இருமடங்கான தேங்காய்த்துருவல் சேர்த்துக் கசக்கிப் பிழிந்து வடிகட்டிய சாற்றைக் குடித்துவிடுக. இப்படி 3 முறை குடிக்கின் வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

8. வெந்தயத்தை நீர்விட்டு அவித்து, அக் கஷாயத்தை இறுத்துச் சமனெடையான தேன்விட்டு 3 வேளை குடிக்கின் வயிற்றுமுறுக்கு, பேதி என்னும் இவை குணம் அடையும்.

9. வில்வப்பழத்தின் தசையைத் தண்ணீரிற் கரைத்து, துப்புரவான மெல்லிய சீலையில் வடித்து, சீனியும் எலுமிச்சம்புளியுங் கலந்து குடித்தால் நல்ல குணம் வரும்.

10. சாதிக்காயைத் துண்டுகளாக நறுக்கிச் சிவக்க வறுத்துத் தூள்செய்து வைத்துக்கொள்க. வெந்தயம், கராம்பு, கறுவாப்பட்டை ஆகியவற்றைச் சமன் எடையாகக்கொண்டு, வெந்தயத்தை வறுத்து அதில் போதிய நீர்விட்டு, முன்சொன்ன மற்றச் சரக்குகளையும் போட்டுக் கஷாயஞ் செய்து, அக்கஷாயத்தில் ஒரு அவுன்சு அளவு இறுத்து, அதில் சாதிக்காய்த்தூளில் ஒரு பேன்பிடி எடுத்துச் சேர்த்து, 6 சொட்டுத் தேனுங்கூட்டி, 7 நாள் இரு வேளை குடித்துவரின் வயிற்றுளைவு சாந்தமாகும்.

11. முற்றிப்பழுத்த மாதுளம்பழங்களைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, ஒரு பழத்தின் சாற்றை எடுத்து, அதில் ஒருகரண்டி கற்கண்டுப்பொடி போட்டுக் குடிக்க. இப்படிக் காலை மாலைகளில் 2 நாள் நாலுமுறை குடித்துவரின் வியாதி குணமடையும்.

**குறிப்பு.**—2-ம் முறை பழச்சாறு குடிக்கும்பொழுது, கற்கண்டுக்குப் பதிலாக 10 சொட்டுத் தேன்விட்டுக் கொள்க.

3-ம் முறை பழச்சாறு குடிக்கும்பொழுது, தேனுக்குப் பதிலாகச் சீனிசேர்க்கவேண்டியது. இதனுடன் வியாதி குணமடைந்துவிடும். ஆயினும், இன்னும் ஒருமுறை வெல்லம் சேர்த்து நாலாவது பழத்தின் சாற்றையும் குடித்துவிடின் பூரணசுகம் காணப்படும்.



12. மேற்புரணி போக்கிய சுக்கை இடித்து அரித்துக்கொள்க. அரித்த மாவைப் பின்னும் இடித்து மிக மெல்லிய கண்ணுள்ள துணியால் திரும்பவும் அரித்துக்கொள்க. மறுபடியும், ஒருமுறை இடித்து அரித்து எடுத்துக்கொள்க. இந்த மாவில் ஒருபழம்பாக்குப் பிரமாணம் பொட்டணங்கட்டி, அதை எருமைப் பாலிலாவது, பசுப்பாலிலாவது அவித்தெடுத்து உட்கொள்ளுக. இப்படி மூன்றுநேரம் உட்கொண்டுவரலாயின், எப்படிப்பட்ட வயிற்றுளைவும் நிவர்த்தியாகும்.

**குறிப்பு.**—மாவானது பாலொடு சேர்ந்து கரைந்து விடாதபடி துணியை இரட்டைப்பட்டையாக்கிக் கட்டிக் கொள்வது நன்று. உள்ளிருக்கும் மாவானது நன்ருக அவியவேண்டும்.

## வேறுமுறைகள் (ஆரம்ப சிகிச்சைகள்)

1. பிஞ்சுக்கடுக்காய், கற்கடகசிங்கி, ஈரவெங்காயம், வெந்தயம், நற்சீரகம் ஆகியவற்றில் ஒருவகைக்குக் கழஞ்சு நான்காக எடுத்து, அவற்றை ஒருபடி நீரில் போட்டு, நாலிலொன்ருக வற்றக்காய்ச்சிக் கற்கண்டும் சேர்த்து, 3, 4 வேளை குடிக்கின் எப்படிப்பட்ட வயிற்றுளைவும் விலகிவிடும்.

2. கடுக்காயவித்த கஷாயத்தோடு ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணெயைச் சேர்த்துக் குடிக்க. இரண்டுமணி நேரஞ் சென்றபின், கஞ்சித்தெளிவு குடிக்கவேண்டும். வயிற்றில் பழையமல மில்லாமல் தண்ணீர்போல் போகத் தொடங்கியபின், கோதுமை ரொட்டி உண்டு காப்பி

குடிக்கவேண்டியது. இந்த ரோகம் 5 நாள் வரையில் நின்று, பின்னரே குணமாகும்.

3. நெல்லிவற்றல், பிஞ்சுக்கடுக்காய், சீந்திற்கொடி ஆகியவற்றை வகைக்குக் கழஞ்சு 2 வீதமாக எடுத்து அரைப்படி நீர்விட்டு, நாலிலொன்றாக வற்றக்காய்ச்சி எடுத்த கஷாயத்தில் ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணெயை விட்டுக் கலக்கி ஒருகாலையில் கொடுக்கவேண்டியது. பிறகு, அதே கஷாயத்தில் 10 சொட்டுத் தேன்விட்டுக் காலை மாலை 7 நாளைக்குக் கொடுத்துவரின் சுகங் காணப்படும்.

## குழந்தைகளுக்கு வயிற்றுளைவு கண்டால் சிகிச்சை

ஆரம்பத்தில் மலமானது கொஞ்சங் கொஞ்சமாய் அடிக்கடி போய்க்கொண்டிருக்கும். உடனே, ஆறிய வெந்நீரில் எலுமிச்சம்பழரசம் விட்டுக் குடிக்கக் கொடுத்தல் வேண்டும். பின்னர், உலையில் அரிசிபோட்டு அது இரண்டொரு கொதி கொதித்தவுடன், அக்கொதிநீரில் கொஞ்சம் இறுத்து ஆறவைத்து, அதில் எலுமிச்சம்பழரசம் விட்டுக் கொடுத்தல்வேண்டியது. மற்ற நேரங்களில் தேநீரில் எலுமிச்சம்பழ ரசம் விட்டுக் கொடுக்கவேண்டும். அவற்றினால் நோய் தணியாவிட்டால், ஆறிய வெந்நீரில் எலுமிச்சம்புளிரசமும், ஒரு தேக்கரண்டி தேனும் விட்டுக் கொடுக்கின் குணம்வரும்.

சீதமும் இரத்தமும் போகத் தொடங்கிவிட்டால், முற்றிய தேங்காயின் நீர் அரைப்படி எடுத்து, அதில் ஊர் எலுமிச்சம்பழங்களுள் பெரியதாகிய ஒன்றைப் பிழிந்து விட்டு, ஒரு இரவு பனியில்வைத்து மறுநாட்



காலை எடுத்து வெறும் வயிற்றில் கொடுத்துவிடுக. 3 காலை இப்படிக் கொடுத்துவந்தால் வியாதி குணமடையும்.

உணவு: குழையற்சாதத்தில் ஆறிய வெந்நீர்விட்டு அதில் எலுமிச்சம்பழரசம், ஈரவெங்காயம், உப்பு, கருவேப்பிலை ஆகியவைபோட்டு நன்றாகப் பிசைந்து கொடுக்க வேண்டும். கொஞ்சம் சுகந்தோன்றியபின், வெந்நீருக்குப் பதில் பசுமோர் சேர்த்துக் கொடுக்கலாம்.

## ஆரம்பத்தில் வயிறுளைந்து மலம்போகாது, சீதமாய்ப் பேதியாயின் சிகிச்சை

மூன்று கழஞ்சு வெந்தயத்தை முதல்நாள் இரவு ஊறப்போட்டுவைத்து மறுநாள்காலை நன்றாக அரைத்து வைத்துக்கொள்க. காலையில் எழும்பினவுடன், வெறுந் தலையுடன் தோய்ந்து வந்து, அரைத்து வைத்திருக்கும் வெந்தயத்தை 4 அவுன்சு எருமைத்தயிரில் கரைத்துக் குடித்துவிடவேண்டும். அரைமணிநேரம் பொறுத்து விசுக்கோத்தும் காப்பியும் புசிக்கவேண்டும். இப்படி 3 அல்லது 5 நாள் செய்துவரின் நோய் குணமாகும்.

## அதிசாரமும் அதன் குறிகளும்

வயிறு புண்ணாகிப் பொருமிப் பலவிதமாய்க் கழியும்; இடுப்பு, அடிவயிறு, நீர்வாயில், மலவாயில் ஆகிய இடங்கள் கடுத்து உளையும்; விலா, முதுகு, இடுப்பு முதலிய இடங்களில் தாங்கமுடியாத வேதனைகாணும்; மயக்கம், நாவரட்சி, தாகம், காய்ச்சல் முதலியனவும் தோன்றும்.

## காய்ச்சலோடு கூடிய அதிசாரம்

ஒரு கழஞ்சு இஞ்சியை மேல்தோல் நீக்கி மெல்லிய வில்லைகளாக வெட்டி எடுத்து, அந்த நிறைக்கு ஏற்க வெந்தயம், மிளகு ஆகிய இரண்டையும் தனித்தனியே சம எடையாக எடுத்து, சட்டியில் போட்டு வறுக்கின், மிளகுவெடிக்கும், இஞ்சிபொன்னிறமாகும். அத்தருணம் 2 கழஞ்சு ஓமம், 2 கழஞ்சு நற்சீரகம் ஆகிய இரண்டையும் போட்டுக் கருகவிடாமல் வறுக்கின் வாசனையுண்டாகும். அப்போது, ஒரு அவுன்சு தேனைவிடின் அது பொங்கி யெழும்பும். உடனே, ஒருபடி தண்ணீர் விட்டு, கால்படியாக வற்றவைத்து இறக்கிச் சீலையில் வடிகட்டிப் போத்தலில் விட்டு, காற்றுப்போகாமல் கெட்டியாய் அடைத்துவைத்துக்கொள்க.

இதை நான்கு பங்குகளாகப் பிரித்து ஒரு நாளைக்கு 4 மணிக்கொருதரம் மூன்றுநாட்கள் தொடர்ச்சியாகக் குடித்துவரின் காய்ச்சல் நீங்கும். வறுத்த அரிசிக் கஞ்சித் தெளிவு, நெற்பொரிக்கஞ்சி, அரோரூட்டுமாக்கஞ்சி குடிக்கலாம். காய்ச்சல் விட்டபின், வயிற்றுளைவுக்குச் சொல்லப்பட்டிருக்கிற சிகிச்சைகளில் ஒன்றைச் செய்யின் அது குணமாகும்.

## கழிச்சலும் வாந்தியும்

2 கரண்டி தேனை ஒரு அகண்ட பாத்திரத்தில்விட்டு, அதன்மேல் 4 யப்பான் கற்பூரவில்லைகளைப் போட்டுக் கொளுத்திவிடுக. கற்பூரம் முற்றிலும் எரிந்துமுடிந்தபின், பாத்திரத்திலுள்ள தேனை எடுத்து ஒரு பருக்கன்



துணி அல்லது பன்னாடையில் வடித்தெடுத்துக் குடிக்கக் கொடுத்தல்வேண்டும். இப்படி 2 நேரங்கொடுத்தால், வயிற்றுப்போக்கும் வாந்தியும் நின்றுவிடும். அன்று கரைகஞ்சிமாத்திரம் குடிக்கலாம். அடுத்தநாள் கரையல் புக்கையும், மிளகும் பூடும் சேர்ந்த கறியும் புசிக்கலாகும். மிளகாயையும் புளியையுந் தள்ளிவிடுக.

## உவாந்திபேதி அல்லது கோதாரிக்கழிச்சல்

கால் இறுத்தல் செத்தல் மிளகாயைக் கருக வறுத்து, புகை கிளம்பும்பொழுது, ஒருபடி நீர்விட்டுக் கால் படியாக வற்ற எடுத்த கஷாயத்தில் அரைப்பாகத்தைக் குடிக்கக் கொடுத்தல்வேண்டும். இதனால் நோய் நீங்காவிட்டால், ஒரு அவுன்சு பிரண்டியும் அவ்வளவு மேற்படி மிளகாய்க் கஷாயமும் சேர்த்துக் கொடுத்தால் குணம் வரும். கழிச்சலுக்கு மேலே சொல்லப்பட்ட தேன் கஷாயத்தையும், இடையிடையே, கொடுத்து வருதல் நன்று.

# மூத்திரரோகங்கள்

நீர்வியாதிகளாவன சலக்கடுப்பு, சலஎரிவு, சலங் கடுத்து இரத்தம் விழுதல், சலஅடைப்பு, நீர்ச்சுருக்கு, சொட்டுமூத்திரம், மண்டிபடிதல், சலதாரையில்புண், குண்டிக்காயில் வீக்கம், சலப்பை சலதாரையில் அழற்சி, எரிவந்தம், கல்லுகளிருக்கும் பாகங்களில் தாங்கமுடியாத வேதனை, சலம் விடும்போது கடுமையான நோவு என்பனவாம்.

## சலக்கடுப்பு, எரிவு என்பவற்றின் குறிகள்

சலம் விடும்பொழுது கடுத்து வேதனையோடு இறங்கும். சலதாரையில் எரிவு தோன்றுவதுமுண்டு. கடுத்துச் சொட்டுச் சொட்டாகவும் சலம் இறங்கும். இக்கடுப்புச் சிலசமயங்களில் அற்பமானதாயும், சிலசமயங்களில் தாங்கமுடியாததாயு மிருக்கும்.

## அவற்றிற்குரிய சிகிச்சைகள்

1. துத்திவேர் 8 கழஞ்சு, திராக்ஷைப்பழம் 4 கழஞ்சு ஆகிய இவைகளை ஒருபடிநீரில் கஷாயமிட்டுக் கால்படி சலமாக வற்றும்படி செய்தெடுத்து, 3 வேளை கொடுக்கின் குணந்தோன்றும்.

2. ஆட்டுச்செவியின் பதமுள்ள வழுக்கல் பிடித்த ஒரு குரும்பையை மணலால்மூடி மேலுக்குத் தீக்கொளுத்திவிடவேண்டியது. மறுநாட்காலையில் அதை எடுத்து



வெட்டி, அந்த இளநீரில் எலுமிச்சம் புளியும் சர்க்கரையுஞ் சேர்த்து, வழுக்கலையுங் கலக்கிக் குடித்துவிடுக. இப்படி 3 காலை குடிப்பின் சல எரிவு நிற்கும். இதற்குச் செவ்விளநீரே சிறந்ததாகும்.

3. ஒரு மேசைக்கரண்டி நல்லெண்ணெயில் 2 கரண்டித் தண்ணீர்விட்டுக் கலக்கிக் கொடுக்கலாம். இப்படி மூன்றுவேளை கொடுப்பின் குணந்தெரியும். தண்ணீருக்குப் பதிலாக நீராகாரத்தையும் உபயோகிக்கலாகும்.

4. ஒரு சிறங்கை வெள்ளரிவிதையைப் பசுப்பால் விட்டு விழுதுபட அரைத்துக்கொண்டு, அதில் அரைத்த கல்லக்காரம் ஒரு சிறங்கை, பசுப்பால் கால்படி ஆகிய இரண்டையுஞ் சேர்த்துக் கலக்கி வடிகட்டிக் குடிக்கின் நல்ல குணந் தரும்.

5. வெள்ளரி விதையை முலைப்பால் விட்டரைத்துத் தொப்புளைச் சுற்றிப் பூசினும் நல்ல குணமுண்டாகும்.

6. பருத்திக்கொட்டையை அரைத்து வடிகட்டி எடுத்த சாற்றில், 4 தேக்கரண்டி அளவை ஒரு அவுன்சு பசுப்பாலில் கலந்துகொடுத்தால் சலக்கடுப்பு நீங்கும்.

7. ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணமுள்ள பழப்புளியைக் கரைத்துக் குடிக்கின் நீர்க்கடுப்பு, எரிவு, சொட்டு மூத்திரம் என்பன நீங்கும்.

8. ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணமுள்ள புற்றும்பழஞ்சோற்றை எடுத்தரைத்து, அதை ஒரு சிறங்கைப்

பசுப்பாலில் கலக்கிப் பருகின் நீர்க்கடுப்பும், எரிவும் உடனே நீங்கும்.

### சலங்கடுத்து இரத்தம் விழுதலுக்கு

1. அரைக்கால் இருத்தல் பெருஞ்சீரகத்தைக் கருக வறுத்து, அதில் அரைப்படிநீர்விட்டு, அரைக்காற் படியாக வற்றக் காய்ச்சி எடுத்து, அக்கஷாயத்தில் ஒரு தேக்கரண்டி பனங்கற்கண்டையும், அவ்வளவு பசுநெய் யையும் சேர்த்துக் கலக்கிக் குடித்தல்வேண்டும். இப்படி 3 நேரங் குடித்தால் வியாதி சாந்தமடையும்.

2. நெருஞ்சிவிரை ஒருபிடியெடுத்துச் செவ்விளநீரி லூறவைத்து அரைத்து அவ்விளநீரில் கரைத்து, நாள் ஒன்றுக்கு இருவேளையாக 5 நாள் உட்கொள்ளின் இவ் வியாதி குணமடையும்.

### சல அடைப்பு

1. எலிப்புழுக்கை, வெள்ளரிவிதை ஆகிய இவை யிரண்டையும் எலுமிச்சம்புளி விட்டரைத்துத் தொப்பு ளைச் சுற்றிப் பூசலாயின், ஒருமணிநேரத்தில் சலம் இறங்கும்.

2. இரண்டு கற்றாழைமடலை எடுத்துத் துண்டுகளாக நறுக்கிக்கொண்டு, அவற்றுடன் நான்கு கடுக்காய் தட்டிப் போட்டு, இரண்டு பனங்கட்டியும், ஒரு கழஞ்சு நவச்சார முஞ் சேர்த்து, ஒரு சட்டியில் எல்லாவற்றையும்போட்டு அடுப்பேற்றி, சூடானபின், இறக்கிக் கசக்கி வடித்தெடுத்த கஷாயத்தை ஒருமுறை குடிப்பின், ஒருமணிநேரத்துக் குள் மலமும் சலமும் வெளிவரும்.



3. கொடிக்கள்ளியைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பொட்டணஞ் செய்து அவித்து வேடுகட்டித் தொப்பு ளின் கீழ்ப்பாகத்தில் ஒற்றடம் கொடுத்தால் மலசலம் இறங்கும்.

4. பிரமியிலை, கடுக்காய் என்னும் இவையிரண் டையும் முதல் நாள் இரவு அவியவைத்து, மறுநாள் காலையில் கசக்கிப் பிழிந்து வடிகட்டிய கஷாயத்தில் பனங் கட்டி சேர்த்துக் குடிக்கின் மலசலம் இறங்கும்.

5. வீசப்படி பசு நெய்யை ஒரு பாத்திரத்தில் விட்டு, அதில் ஒரு சிறங்கைப் புங்கம்பூவைப் போட்டு, அது நன்றாகப் பொரிந்தபின், சட்டியைக் கீழேயிறக்கி ஆறவைத்தல்வேண்டும். பின்பு, பொரிந்த பூவை நெய் யிலே கசக்கி வடிகட்டி எடுத்துக்கொள்ளல்வேண்டும். காலை மாலை ஒரு தேக்கரண்டிவீதம் இந்நெய்யை உட் கொண்டுவரலால் சலக்கட்டு உடையும்.

6. சந்தனம், கற்றாழஞ்சோறு ஆகிய இரண்டை யும் அரைத்துத் தொப்புளின் கீழ்ப்பாகத்தில் பூசினும் நீர் இறங்கும்.

### கல்லடைப்பு, தசையடைப்பு, நீர்க்கட்டு

1. சுறாமீன் தலையில் இருக்கும் கற்களில் இரண்டை எடுத்துலர்த்தி இள வெந்நீரிலுரைத்துக் கலக்கிக் கொடுக்க லாயின், கல் தெறித்து நீர் இறங்கும்.

2. செம்முருங்கையிலைக் காம்பும் மிளகும் சமபங்கு எடுத்து அவித்துக் குடிக்கினும் நீர் இறங்கும்.

## சலஎரிவு, அடைப்பு, சலதாரையில் புண்

1. வெள்ளைக் குங்கிலியத்தை நுணுக்கி வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு, அதில் வெருகடிப் பிரமாணம் எடுத்து வெந்நீரில் போட்டுக் குடிக்கலாம். இப்படி 3 வேளை குடிக்கின் குணம் உண்டாகும்.

2. ஓரிதழ்த்தாமரை, ஆனைநெருஞ்சி, வால்மிளகு, நற்சீரகம் என்னும் இவற்றையெல்லாம் சமனாக எடுத்துக் கொண்டு, வால்மிளகையும் சீரகத்தையும் அரைத்து, நெருஞ்சியிலை, ஓரிதழ்த்தாமரை ஆகிய இவற்றின் சாற்றுடன் கலந்து, ஒரு இளந்தேங்காயின் மூளை வெட்டி அதில் மேற்படி கரையலை ஊற்றி மூடி, ஒரு இரவு ஊறவைத்து அடுத்தநாட்காலை யெடுத்து வழுக்கலுடன் கலக்கிக் குடித்திடுக. இதுவே காலை உணவாகக் கொள்ளப்படுதல் வேண்டும். இப்படி 7 நாட் காலையில் குடிக்கப்படுமாயின் மேற்கண்ட வியாதிகள் குணமடையும்.

## நீரடைப்பு, கல்லடைப்பு, தசையடைப்பு, வேட்டை, நீர்ச்சுருக்கு, கடுப்பு என்பவைகளுக்கு

1. வெங்காரம், கற்பூரசலாசத்து ஆகிய இவற்றில் வகைக்குப் பலம் ஒன்று எடுத்து, எலுமிச்சம்பழ ரசத்தில் அரைத்து வட்டமாகத் தட்டிக் காயவைத் தெடுத்துச் சுண்ணாம்புக் குகையில் வைத்து, 25 வறட்டியில் புடம் போட்டு எடுத்துக்கொள்க. இதில் ஒரு நெல்லிடைப் பற்பம் எடுத்துத் தேனிற் குழைத்துச் சில தினங்கள் கொடுக்கப்படுமாயின் பூரண சுகமுண்டாகும்.



2. நிலவேர் என்று சொல்லப்படும் நாக்குளிப்பூச்சிகளைப் போதிய அளவு கொண்டுவந்து, மோரில் போட்டுச் சிறிதுநேரம் வைத்திருந்தால், அவை மண்ணைக் கக்கிவிடும். அவற்றைச் சலத்தில் போட்டு நன்றாக அலம்பி உலர்த்திச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. ஒரு மேசைக்கரண்டி திராக்ஷைப்பழச்சாற்றில், 2 கழஞ்சு நிறையுள்ள நிலவேர்ச் சூரணத்தைச் சேர்த்துக் குடிக்கின், நீர்த்துவாரத்தில் உள்ள கல்லடைப்பு, சதையடைப்பு முதலியனவெல்லாம் உடனே நிவர்த்தியாகித் தாராளமாய் நீர் இறங்கும்.

## மூத்திரக் குண்டிக்காயின் வீக்கம், வலி, நீர்த்துவாரத்தில் கல்லடைப்பு, நீர் அடைப்பு என்பவைகளுக்கு

வெந்நீரை இடுப்பின்மேலும், நீர்ப்பையுள்ள இடத்தின்மேலும் விடுவதனால் குணமுண்டாகும்.

## மேகத்தினால் சுண்ணாம்பினது கற்களைப்போலவும், சிறுமணலைப்போலவும் மூத்திரப்பையில் உண்டாகும் கற்களுக்கு

முள்ளங்கி விதைகளை விதைத்து, 2, 3 இலைகள் உண்டானவுடன், அவற்றில் ஒருபிடி யிலைகளையும், அரைத் தேக்கரண்டி கறியுப்பையும் சேர்த்துக் காலை மாலை உண்டு வரின், அது கற்களைக் கரையச் செய்யும்.

# மூலரோகங்கள்

## உற்பத்தி

அதிக காரமுள்ள பண்டங்களை யுண்ணுதலாலும், அகால போசனத்தாலும், மிகுந்த சையோகத்தாலும், கற்பழித்தலாலும், மூத்தோரை வைதலாலும், அதிதிகளை மனம்நோகச் செய்தலாலும், பசித்தோரிருக்க உண்ணுதலாலும், வாக்கிலொன்றும் மனத்திலொன்றுமாக வஞ்சனை செய்தலாலும் இந்த ரோகம் வந்தெய்துமென்பர்.

இம் மூலரோகமானது 21 வகைப்படும். சீழ் இரத்தம் நீர் என்ற இவை கசியும் மூலங்களை ஒருவகையாகவும், கடுப்பு வலி குத்து என்ற இந்நோவுகளைத் தரும் மற்றைய மூலங்களை வேறொருவகையாகவும் வகுக்கலாம். தந்தை தாயர் வாயிலாகப் பிறவிமுதற்கொண்டே காணப்படும் மூலங்கள் கர்மமூலம் என்றும், சொந்தச்செய்கையால் தேகம் அதிக சூடுகொள்வதால் தோன்றுகிற மூலங்கள் செயற்கைமூலம் என்றும் தமிழ் வைத்தியநூல்கள் பிரித்துக் கூறுகின்றன.

## உள்மூலத்தின் குறிகள்

“மலத்தை யிறுக்கும் மந்தித்து
வரண்டே யிரத்தம் மலத்தில்விழும்
உலர்த்து முடம்பை நாடோறும்
ஊடே வயிறு வலித்திருக்கும்



அலத்தி வெளியில் காணும
லலையு முளையு மபானமதில்
பெலத்தைக் குறைக்கும் உடல்வெளுக்கும்
பேசு மிவையுள் மூலமிதே.”

## சிகிச்சை

செந்நாயுருவியின் சாறு ஒரு மேசைக்கரண்டியளவு எடுத்து, அரைக்காற்படி பச்சைப்பாலில் விட்டுக் காலையில் குடித்துவரின் குணம் காணும். அவ்விலையை நறுக்கி அதனுடன் வெங்காயம், நற்சீரகம், உப்பு என்னும் இவற்றை சேர்த்துத் தேங்காய்ப்பாலில் அவித்துச் சோற்றுடன் கலந்து உண்டு வருதலாலும் நல்ல பயன் உண்டாகும்.

## புறமூலத்தின் குறிகள்

“உண்டசோறு உடல்கொளாது
ஓங்கியபுளித் தேப்ப முண்டாம்
மண்டியே தண்ணீர் வாங்கும்
வயிறது பொருமிக் கொள்ளும்
கொண்டெழும் உடம் பழற்சி
கோதித்துமே மலத்தைக் கட்டும்
திண்டிறல் அபான வாயில்
சேர்புற மூலந் தானே.”

## சிகிச்சை

1. பசுமாட்டுச் சாணியை எடுத்து வறட்டியாகத் தட்டிக் காயவைத்து உமியிட்டுச் சுட்டெடுத்த சாம்பலை வெள்ளெருக்கம்பாலிற் குழைத்துக் காயவைத்துக்கொள்க. இதில் கொஞ்சம் எடுத்து உமிழ்நீர் விட்டுக் குழப்பி ஒரு

சீலைத்துண்டில் பூசி மூலத்தில் போடுக. மூலம் அதிகமாக வெளியே வந்திருந்தால், கால் கழஞ்சு குங்குமப்பூவை ஒரு கோழிமுட்டையின் மஞ்சட்கரு விட்டரைத்து மூலத்தின்மேல் பூசி, 12 மணிநேரஞ் சென்றபின், சுடுநீரால் கழுவிவிடுக. நீர் உலர்ந்தபின், மேற்கூறிய சாம்பல் சேர்வையை மூலத்தின்மீது மறுபடியும் அப்புதல் வேண்டும்.

2. ஈரவெங்காயத்தைச் சுட்டெடுத்து அரைத்து, அதனுடன் பச்சைவெண்ணெய் சேர்த்து, மூலத்தில் வைத்துக் கட்டின் குணம் காணும்.

## இரத்தமூலத்தின் குறிகள்

"தொப்புளும் வலித்து நொந்து தளர்ந்திட இரத்தம் வீழ்ந்து
அப்பொழு தந்த மூல மறியவே வெளியில் தள்ளும்
தப்பலா மெனவே வற்றித் தளர்வுடன் துயரம் தோன்றும்
இப்படிக் குண மிரத்த மூலமென் றியம்ப லாமே."

## சிகிச்சை

1. இருபிடி துத்தியிலையைத் தண்ணீரில் ஓர் இரவு ஊறவைத்து எடுத்துப் பிசைந்து வடிகட்டிய நீரால் காலை, உச்சி, மாலைகளில், ஆசன வாயிலை அலம்பியவுடனே, கொஞ்சம் துத்தியிலையை ஆமணக்கெண்ணெயில் வதக்கி ஆசனத்தில் வைத்துக் கட்டிக்கொள்க. இஃதேயன்றி, கொஞ்சம் பிரண்டைக் கொழுந்தை நெய்யில் வதக்கி அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் காலை மாலைகளில் சிறிதுகாலம் உண்டுவரின் ஆசனத்தினவும் இரத்தமூலமும் ஒழியும்.



## மூலமுளைக்குச் சிகிச்சை

வேப்பம் பருப்பை அரைத்து அதில் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்து வட்டமாகத் தட்டி, அதற்குச் சிறிது சூடுகாட்டி முளையில் வைத்துக் கட்டிவிடுக. இப்படி 3 நாட்கள் கட்டிவரின், கிருமிகள் மடிவதேயல்லாமல் முளையுங் கரைந்துவிடும்.

பின்னர், துத்தி இலையைத் தண்ணீர் விட்டு இடித்துச் சாறு பிழிந்து, அதில் ஒரு மேசைக் கரண்டி அளவு எடுத்து, அதனுடன் அவ்வளவு நல்லெண்ணெயுங் கலந்து, 3 நாள் காலை வேளைகளில் குடித்துவரின் முளையின்வேர் அற்றுப்போகும்.

## மூலக்கழிச்சல், கடுத்தல் என்பனவற்றிற்கு சிகிச்சை

கருஞ்சீரகம், கழற்சிப்பருப்பு என்ற இவைகளைச் சம எடையாக எடுத்து, எருமைத்தயிர்விட்டரைத்து, ஒரு கழற்சிக்காய்ப் பிரமாணம் எடுத்து அவ்வெருமைத் தயிரிலேயே கலக்கி, 7 நாள் காலையில் குடிக்கில், மூலக் கழிச்சல் முதலாயின நீங்கும்.

## மூலத்தின் குத்துக்கு

தேங்காய்ப்பூக் கீரையை அரைத்து மூன்று தடவை மூலத்தில் வைத்துக் கட்டினால் குத்து நிற்கும்.

## மூலக்கடுப்பு வலிகளுக்கு

1. முருங்கையின் பூ, இலை, ஈர்க்கு என்பவைகளையும், சீரகம் வெந்தயம் ஆகிய இவைகளையும் ஓரேநிறை

யாக எடுத்துத் துவைத்து, துணியில் வைத்துச் சிறிய பொட்டணமாகக் கட்டி, பசுவெண்ணெயை இரும்புக் கரண்டியில் வைத்து, அதன்மேல் பொட்டணத்தையும் வைத்து, நெருப்பில் உருக்கின், வெண்ணெய் உருகிப் பொட்டணத்தில் சூடேறும். தாங்கக்கூடிய சூட்டுடன் அதை எடுத்து அபானத்தில் ஒற்றடம் இடின், கடுப்பும் வலியும் உடனே தீரும்.

2. காற்படி பசுப்பாலில் 3 எலுமிச்சம்பழம் பிழிந்து விட்டு, ஒரு சிறு குச்சியால் கலக்கிக் கொஞ்சநேரம் வைக்கவேண்டும். தெளிந்த நீரை எடுத்துக் குடிக்கில் கடுப்பு நீங்கும்.

3. ஒன்பது துத்தியிலைக் கொழுந்தைக் காலைதோறும் வெறுவயிற்றில் ஒரு மண்டலம் தின்று வரலாயின் மூலக்கடுப்பு நீங்கும்.

## மூலக்கோதிப்பு, கடுப்பு, அழற்சி என்னும் இவைகளுக்கு

1. பொற்றகரை விரையில் அரைச்சிறங்கை எடுத்துக் காலையில் வெறுவயிற்றில் மென்று விழுங்குக. இப்படி 3 காலை செய்தால், கடுப்பு முதலியன நீங்கும்.

2. நற்சீந்தில் இலையைக் குறுணலாக நறுக்கி, மிளகு, சீரகம், உப்பு ஆகியவற்றை அதனுடன் சேர்த்து நெய்யில் வதக்கிச் சோற்றுடன் உண்ணுதலால் நல்ல குணம் உண்டாகும்.



3. மாங்காயின் பித்தை எடுத்து நறுக்கி வெய்யிலில் காயவைத்து இடித்தெடுத்து, வெண்ணெயொடு சில தினங்கள் புசித்துவரின் குணம் உண்டாகும்.

4. வாழைப்பூவைத் துவைத்துக் காற்படி சாறு பிழிந்து, அதில் சீரகத்தைப் பாக்களவு அரைத்துப் போட்டுக் கலக்கிக் கொடுக்கின் மூலக்காடுப்பு உடனே நிற்கும்.

## மூல வீக்கத்துக்கு

துத்தியிலையை ஆமணக்கெண்ணெய் விட்டு வதக்கி, இளஞ்சூட்டுடன் ஆசனத்திலும் அதன் பக்கங்களிலும் ஒற்றடங் கொடுத்து, அந்த இலையை ஆசனத்தில் வைத்துக் கட்டினால் வீக்கம் நீங்கும்.

## மூலரோக வேகத்துக்கு

துத்திக்கீரையுடன் பச்சைப்பயறு, வெங்காயம், 2 காய்மிளகாய், தேங்காய்ப்பால், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கறியாகக் காய்ச்சிச் சோற்றுடன் பகலில் உண்டுவந்தால் அவ்வேகம் தணியும்.

## மூலமுளை விழுதற்கு

ஒருபடி ஆவின்பாலில் ஒரு பலம் கொடிவேலியின் வேரை நையத் தட்டிப் போட்டுச் சிவக்கக் காய்ச்சிப் புரைகுத்திவைத்திருந்து, மறுநாள் கடைந்து எடுத்து, அதன் வெண்ணெயையும், மோரையும் அன்னத்துடன்

உபயோகித்து, அந்த மோரைத்தானே தாகத்துக்குங் குடிக்கவேண்டும். இந்தப்படியே சிலநாட்கள் செய்துவரின், மூலமுளையானது வேரோடே அழுகி விழுந்துவிடும்.

## இரத்தமூலம், மூலச்சூடு என்பவைகளுக்கு

காற்படி ஆட்டுப்பாலைக் காய்ச்சி, அதன் இளஞ்சூட்டில் ஒரு எலுமிச்சம்பழப் பிரமாணம் பழம்பாசியை அரைத்து அதில் போட்டு வைக்கவேண்டும். அரைச்சிறங்கைப் பாசிப்பயறு, ஒருபிடி பழம்பாசி ஆகிய இரண்டையும் தேங்காய்ப்பால்விட்டு அரைத்து எடுத்துத் தலையில் தப்பி, அரைமணிநேரஞ் சென்றபின், பழங் கஞ்சியைத் தப்பித் தோயவேண்டும். தண்ணீரில் முழுகியவுடன், முன்னரே ஆயத்தஞ் செய்துவைத்த ஆட்டுத் தயிரைக் கடைந்து குடித்துவிடுக. இப்படி 7 நாள் குடித்துவந்தால் குணம் வரும். பனம்பண்டங்கள் எண்ணெய்ப் பதார்த்தங்கள் முதலாயினவற்றைத் தள்ளல் வேண்டும்.

## மூலரோகத்துக்குக் கஞ்சி

சீனட்டிநெல்லைப் பச்சையாகக் குற்றி எடுத்த அரிசியுடன் வல்லாரல், பால், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கஞ்சிகாய்ச்சிக் குடித்துவருக. இப்படி 40 நாள் குடித்துவரக்கூடுமேல் அக்கஞ்சி பெருநன்மை அளிக்கும்.



## மூல அழற்சி, எரிவு, குத்து என்பவைகளுக்கு

‘ஜாம்பெக்’ என்ற மருந்தை வாங்கிக் குத்து, எரிவு உள்ள இடங்களில் பூசுதலாலும் குணமுண்டாம்.

## மூலவாய்வுக்கு மருத்தெண்ணெய்

நல்லெண்ணெய் படி 1, நெய் படி 1, வல்லாரைச் சாறு படி 1, பழம்பாசிச்சாறு படி 1, ஒருபடி மிளகை இடித்து 8 படி நீரில் காய்ச்சி எடுத்த நீர் படி 1 ஆகிய இவை எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்தெடுத்து வைத்துக்கொண்டு, தலைக்கு வைத்து வந்தால், மூலவாய்வு சூடு என்ற இவை நீங்கும்.

## மூலவியாதிக்குப் பொதுவான சிகிச்சை

ஒருசிறிய பிஞ்சுப் பலாக்காயை எடுத்து அதிலுள்ள முட்களை நீக்கிவிட்டு அரைத்து, அதில் நீர் விட்டுக் கலக்கி வடிகட்டி எடுத்து, அதைக் காற்படி ஆட்டுப்பாலில் விட்டுக் காலையில் குடித்துவரலாம்.

கோகிலங் தண்டைத் துவைத்துப் பிழிந்து, 2 மேசைக்கரண்டியளவு சாறு எடுத்து, அதைக் கால்படி ஆட்டுப்பாலில் விட்டுக் காலையில் குடித்துவரலாம். சக்கரையைத் தேங்காய்ப்பால் முதலியவை சேர்த்து அதிக உறைப்பு இல்லாமல் கறியாக்கி உண்ணலாகும். இப்படியெல்லாஞ் செய்துவரின் மூலவியாதி சாந்தியாகும்.

## மூலவாய்வு, ஏப்பவாய்வு, அசீரணம், பசியின்மை என்னும் இவற்றிற்கு அரையல்

பிரண்டையின் கொழுந்துகளைக் கொண்டுவந்து விளிம்புகளை நீக்கிவிட்டுச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொண்டு, செத்தல் மிளகாய், சீரகம் என்பவற்றையும், சாரணைக்கிழங்கு அகப்படுமாயின், அதனையும் அக்கொழுந்துகளோடு சேர்த்து நெய்யில் வதக்கி எடுத்து, கணக்கான பழப்புளியும் உப்புங் கூட்டி, மைபோல் அரைத்தெடுத்துச் சோற்றுடன் சிலநாட்கள் உண்டு வந்தால், வயிற்றிலுள்ள வாய்வு நீங்கிச் சீரணசக்தி யுண்டாகும்.

# தந்தரோகங்கள்

நம் வாயிலிருந்து ஊறும் நீரானது நாம் உண்ணும் உணவுகள் சீரணித்தற்கு இன்றியமையாத ஒரு துணைக் கருவியாய் இருக்கின்றது 'அமிர்தம்' எனச் சொல்லப்படும் இந்த நீரை உள்ளே விழுங்கிக்கொண்டிராது, வெளியே உமிழ்ந்துவிட்டால் சீரணசக்தி குறைந்துவிடும்.

தந்த அடிப்படைகளில் ரோகங்கள் ஏற்படின், அவை காரணமாகத் துர்நீர் உண்டாகின்றது. அத் துர்நீரானது அடிநாக்கிலிருந்து ஊறுகின்ற சுத்தநீருடன் கலந்து நாம் உண்ணும் உணவுகளுடனும், அருந்தும் பானங்களுடனும் உட்செல்லுகின்றது. உட்செல்லவே, படிப்படியாகப் பலவித நோய்கள் உடம்பில் ஏற்படுகின்றன. பசியின்மை, போசன வெறுப்பு முதலியன முதலில் காணப்படும். ஆதலால், தந்தங்கள் நோய்வாய்ப்படாவண்ணம் ஏற்கெனவே வேண்டிய நடைபடிகளை எடுத்துக்கொள்ளல் தகுதியாகும்.

பின்னே சொல்லப்படும் தூள், இலை, கொம்பு என்னும் இவற்றால் பல் விளக்கினால் பற்களுக்கு ஊனமில்லை. வாத பித்த கபங்களால் பல்லினிடத்தும், அதன் வேரினிடத்தும் பிறக்கின்ற இருபத்துமூன்று ரோகங்களும் விருத்தியடையா. அத் தூளும், இலையும் கொம்பும் இயல்பிலேயே துவர் உள்ளனவாய் இருந்தால், இறுதி

நாள் வரைக்கும் பற்கள் மலையைப்போல் அசைவின்றி இறுகி நிற்கும்.

பல்விளக்கும் குச்சிகளும், அவற்றினுலுண்டாகும் பயன்களும் வருமாறு: ஆலால் சரஸ்வதி கடாட்சம் உண்டாகும்; நாயுருவியினுல் வசீகரமுண்டாகும்; பூலாவினுல் போகம் பொழியும்; வேம்பினுல் பல் துலங்கும்; வேலால் பல்லிறுகும்.

செங்கல்மா, மணல், கரி, தென்னம்பாளை ஆகிய இவைகளால் தினமும் பல் துலக்குபவரிடத்தில் இலட்சுமி நீங்கி மூதேவி சேர்வள் என்பர். அன்றியும், சிதாதம், கிருமிதந்தம், தந்தசர்க்கரை முதலிய பல ரோகங்களும் ஏற்படும்.

## சிதாதம்

சிதாதம் அல்லது சீழ்முரசு என்பது, பற்களின் முரசுகளிலிருந்து சீழும் இரத்தமும் கசிவதாகும். இந்நோய் பற்களின் அடித்தசைகள் அழற்புண்ணையும், வீக்கத்தையும், பஞ்சுபோன்ற மென்மைத்தன்மையையும், துர்நாற்றத்தையும் அடையுமாறு செய்து, பற்களின் சீரைக் குலைக்கும். கபதோஷத்தினுலும், இரத்ததோஷத்தினுலும் இந்நோய் உண்டாகின்றதென்ப. இது ஆங்கில பாஷையில் 'பைரியா' என்று சொல்லப்படும்.

## கிருமி தந்தம்

கிருமிதந்தம் என்பது பற் சூத்தையாகும். வாத கோபத்தினுல் பல்லானது கறுப்பான துவாரமுள்ளதாகவும், சில சமயங்களில் ஆட்டங்கொண்டு நீர்க்கசிவுள்ளதாகவும், நோவுள்ளதாகவும், சிற்சில வேளைகளில், திடீரென்று பொறுக்கமுடியாத வேதனையுண்டுபண்ணுவதாகவும் இருந்து, கடைசியில், கேடுறும்.



## தந்த சர்க்கரை

தந்த சர்க்கரை என்பது பற்சிராய் என்றுஞ் சொல்லப்படும். பற்களிற் சேர்ந்த அழுக்கானது வாதத்தினுலும், பித்தத்தினுலும் பாதிக்கப்பட்டுச் சுண்ணக் கல்லைப்போல் பரிசிப்பதற்கு கடினமாகி இருக்கும்.

## சிகிச்சைகள்

### சிதாதம்

மேசை உப்பு, அல்லது நம்மால் சுத்திசெய்யப்பட்ட கறிஉப்பைக்கொண்டு காலையில் பல்துலக்கிவரல்வேண்டும். ஒரு போத்தலில் நீர்விட்டுப் போதிய கறியுப்பை அதில் போட்டுவைத்துக்கொண்டு, நித்திரைக்குப் போகும்போது, அந்த நீரால் வாயை நன்முக அலம்பிவிட்டு நித்திரை செய்யவேண்டும். நித்திரைவிட்டு எழுந்தவுடனும், அந்த உப்புநீராலேயே வாய்கொப்புளித்துவிட்டு, அதன் பின்னரே பல் துலக்கல்வேண்டும். இப்படித் தினந்தோறும் செய்துவந்தால், வாயினின்று வரும் துர்நாற்றத்தை நீக்குவது மன்றி, இவ்வியாதி மேற்கொள்ளாதபடி ஒருவாறு தடுக்கும். இவ்வாறு செய்வதுடன், பின் சொல்லப்படும் முறையையும் வழக்கத்துக்குக் கொண்டுவருதல்வேண்டும்.

ஹைறெருஜன் பெரெக்சைட் (Hydrogin peroxide) என்னும் மருந்துடன் சரிபங்கு தண்ணீர்

கலந்து, காலே உச்சி இரவு ஆகிய மூன்றுவேளைகளிலும் வாயை நன்முகக் கொப்புளித்து விடல்வேண்டும். அதன் பின், ஒரு குச்சியில் பருத்திப் பஞ்சைச் சுற்றிக்கொண்டு ரிங்ஷர் அயோடின் (Tincture iodine) என்னும் மருந்தில் அப்பஞ்சைத் தோய்த்துப் பற்களுக்கிடையே அழுத்தமாகப் பூசிவிடுக. 5 நிமிஷநேரஞ் சென்றபின், வாயை அலம்பிவிட்டு நித்திரைக்குப் போகவேண்டும். இப்படி அரைமண்டலஞ் செய்துவரின் இவ்வியாதி குண மடையும்.

### கிருமி தந்தம்

1. முள்முருக்கமிலேச்சாறும், நல்லெண்ணெயும் சமனுகக் கலந்து, அவற்றுடன் ஒரு சிறுதுண்டு கற்பூரமுஞ் சேர்த்து வாயில்விட்டு, பதினைந்து நிமிஷம்வரையில் அடக்கிவைத்திருந்து, பின்பு கொப்புளித்துவிடுக. இப்படிக் காலே உச்சி மாலே மூன்றுநேரத்திலும் கொப்புளித்துவரின் பல்லே அரிக்குங் கிருமிகள் நாசமாகும்; வலி நீங்கும்.

2. கண்டங்கத்தரி விதைகளே வேப்பெண்ணெயில் எரித்துப் புகையின் ஆவியைப் பூச்சிகள் அரித்த பல்லில் பிடிக்கின் பூச்சிகள் சாகும்; பல்வலி நீங்கும். இப்படி இரண்டு மூன்று தடவை செய்யின் பூச்சிகள் அற்றுப்போகும்.

3. கிராம்புத் தைலத்தில் பஞ்சை நனைத்து வலிக்கின்ற பல்துவாரத்தில் செருகின் உடனே பல்வலி நீங்கும்.



4. எருக்கலம்பாலேப் பஞ்சில் துவட்டி, கொதிக்கும் பல்லின்மேல் வைக்கின் வலி நீங்கும்.

5. வெடிபலவனிலே, அரப்பு, ஓட்டறை ஆகிய இம்மூன்று பொருட்களேயும் ஒன்றுசேர்த்து நன்முக அரைத்தெடுத்துச் சிறுகுளிகையாக உருட்டிச் சூத்தைப் பல்லில் அடசிவிடின், 15 நிமிஷநேரத்தில் பற்கிருமிகள் வெளிவரும்.

### தந்த சர்க்கரை

படுக்கைக்குப் போகும்போது, கொஞ்சம் எள்ளே வாயில்போட்டு நன்முகச் சப்பித் துப்பிவிட்டு வாயை அலம்பாது உறங்கிவிடுக. மறுநாட்காலே பல் துலக்கி வாயலம்பல்வேண்டும். இப்படிச் சிலநாட்கள் தொடர்ந்து செய்துவரின், பற்களே ஒட்டிய சிராயானது நாளுக்கு நாள் எடுபட்டுப்போகும்.

### பற்கோதி

இது அசீரணம், மலபந்தம் என்ற இவை காரணமாகச் சூடு அதிகரிப்பதால் உண்டாவதாகும். இதற்குத் தலையில் எண்ணெயைத் தேய்த்து முழுகி, அடுத்த நாள் பேதி மருந்து உட்கொள்ளின் குணங் காணும்.

### ஈறு கோதிப்பு

பரிசநரம்பின் வியாதி, வாதரோகம், பல்லின் வேர்த் தடிப்பு ஆகிய இக்காரணங்களினுல் இந்நோய் பிறக்கின்றது.

## ஈறு கோதிப்பினால் பல்வலி காணின் சிகிச்சை

1. குப்பைமேனி சமூலங் கொண்டுவந்து அதனுடன் கறி உப்பும் சேர்த்து அரைத்தெடுத்து, வாயிலடக்கிக் கொதிவலி நீங்கும் வரையும் வைத்திருந்து எடுத்துவிடின் குணமுண்டாம்.

2. சுக்கை இழைத்து வலிக்கிற பற்களிற் பூசின் குணங் காணும்.

3. காசுக்கட்டியை வாயில் போட்டு மென்றால் ஈறு வீக்கம், பல்லரணை, பல்வலி என்னும் இவை நீங்கும்.

4. சிவனார் வேம்பின் வேரை வாயிலிட்டு மெல்லின், பல்வலி வாய்ப்புண் ஆகிய இவைக்குக் குணம் காணும்.

5. புகையிலை சுட்ட சாம்பல், அல்லது சுருட்டின் சாம்பலால் பல் துலக்கிவரின் பல்வலி தீரும். வாய், முரசு, பல் ஆகிய இவை சுத்தியடையும்.

6. தாளிசபத்திரி இலையைப் பொடிசெய்து பல் விளக்கின் பல்வலி நீங்கும்.

7. ஒற்றைப்பூவுள்ள நந்தியாவட்டமரத்தின் வேரை வாயிலிட்டு மெல்லின் பல்வலி நீங்கும்.

8. கொடிவேலியை அரைத்து வலது உள்ளங் காலிற் றடவின், இடதுபக்கத்திலுள்ள பல்வலி நீங்கும். இடது உள்ளங்காலில் தடவின், வலதுபக்கத்துப் பல்வலி மாறும்.



9. ஒரு இலந்தைக்காய்ப் பிரமாணமாகப் பஞ்சைத் திரட்டி, அதில் கருவாத்தயிலத்தில் ஐந்துசொட்டு விட்டு, வலியுள்ள பாகத்தில் கால்மணிநேரம் வைத்திருந்து, சுடவைத்து ஆறிய வெந்நீரினால் வாயலம்பிவந்தால் பற்புழு, பற்குத்து, பல்வலி, பல்லறணை, பல்லெழுச்சி முதலியன சுகமாகும். காலை, மாலை இருபொழுதும் மூன்று நாளைக்கு இப்படிச் செய்துவரின் எத்தகைய தந்த ரோகமும் நீங்கும்.

10. ரசபாஷாணங்களினாலாவது, அல்லது மற்றும் எவ்வித ரோகங்களினாலாவது வாயவிந்து, பல்பழுத்து வேதனைகண்டால், காலை உச்சி மாலை ஆகிய மூன்றுநேரமும் காட்டாமணக்கின்பாலை முரசுக்குப் பூசிக் குளிர்ந்த சலத்தால் வாயைக் கொப்புளித்தல் வேண்டும். இப்படி மூன்றுநாள் செய்துவரின் சுகம்வரும்.

## முரசு வீக்கம்

சீனக்காரத்தையும், கறியுப்பையும் பொடிபண்ணிப் பொட்டணங்கட்டி, வீக்கம் உள்ள இடத்தில் அடக்கி வைத்திருப்பின் நீர் வடிந்து வீக்கம் வற்றும்.

## பற்பேத்தை

பழப்புளியும் கறியுப்பும் சேர்த்து, முரசு வீக்கத்தின் மீது வைக்கின் அது கரைந்து நீராகி வடியும்; வீக்கம் வற்றிவிடும்; அடுத்தநாள் எண்ணெய் ஸ்நானஞ் செய்யின் பூரணசுகம் உண்டாம்.

**பல்லிலிருந்து இரத்தம் வருதல்**

காட்டாமணக்கம்பால் போதிய அளவு கொண்டு வந்து, வாயில் விட்டுப் பதினைந்துநிமிஷநேரம் வரையில் வைத்திருந்து கொப்புளித்துவிடவேண்டும். இப்படியாக மூன்றுகாலை செய்துவரின் இரத்தம் வருதல் நின்று விடும்.

**பற்காயம்**

அடிகாயத்தால் அல்லது விழுகாயத்தால் பற்களில் நோவு அல்லது அசைவு கண்டால் உடனே பராயம்பால் தடவுதல்வேண்டும். அஃது கிடையாவிடில், ஆலம்பால் தடவலாம். நோவு அல்லது அசைவு கடுமையாகவிருந் தால், மேற்சொல்லிய பால்களுள் ஒன்றை அரைமணி நேரம் இடைவிடாமல் உபயோகிக்கவேண்டியது. இப்படி இரண்டு மூன்று முறை செய்துவரின் நோவு நீங்கும். சிறிதுகாலம் தொடர்ந்து மேற்கூறிய இருவகைப் பால்க ளுள் ஒன்றனைத் தடவிவந்தால் பல் உறுதியாகிவிடும்.

**பற்காவி**

1. தாம்பூலம், காசுக்கட்டி, புகையிலை முதலிய வற்றை உபயோகப்படுத்துவதால் ஒருவகையான காவி பற்களில் படிகின்றது. ஒரு எலுமிச்சம்பழத் துண் டால் பற்களை நன்றாகத் தேய்த்துவிட்டு, எலுமிச்சை மரக்குச்சியால் பற்களை நன்றாக விளக்கி வாயலம்பி விடின், அவைகளைப் பிடித்த காவி நீங்கிவிடும்.

2. சீனக்காரம், சுத்திசெய்த துரிசு ஆகிய இரண் டையும் சேர்த்துப் பல்விளக்கின் காவி எடுபட்டுப்போகும்.



**குறிப்பு.**—துரிசு என்பதனைக் கற்றாழை மடலிற் புதைத்து, நாலுமணிநேரம் சென்றபின் எடுத்து, மண்வெட்டி யைச் சுடவைத்து அதில் போட்டுப் பொரியவிடின் அது சுத்தியாகிவிடும்.

**பற்கூச்சம்**

சூத்தை உள்ள பல் துவாரத்தினுள்ளே, அதாவது, பற்குழியினுள்ளே ஒரு வீக்கம் உண்டாகிறது. பல்வியாதி களில் அது மிகக் கொடுமையானது. அப்படியான வீக்கம் வந்துவிட்டால், தண்ணீராயினும், வெந்நீராயினும் வாயில் விட்டால் தாங்கமுடியாத வேதனை காணும். ஒருவகை யான ஆகாரத்தையும் வாயில் போட்டு மென்று தின்ன முடியாது. இப்படியான நிலைமையில் சிலர் நாட்கணக் காக அவஸ்தைப்படுவதைக் காணலாம். சிராம்புத் தைலத்தை எடுத்துப் பஞ்சில் தோய்த்துப் பல்லின் துவாரத்தில் செருகிவிடின் கூச்சம் தணியும். பின்னர், அப்பஞ்சினை எடுக்காமல் எதையும் உண்ணலாம். இப் படி மூன்றுநாலு தடவைகள் செய்துவரின், வீக்கம் வற்றிக் கூச்சம் முற்றிலும் மாறிவிடும். கராம்புத் தைலம் அகப்படாவிடில், 25 கிராம்பை எடுத்து அரைப் படி தண்ணீரில் அவித்து, காற்படியாக வற்றியபின், அக்கஷாயத்தால் வாய் கொப்புளித்துவிடுக.

உணவுகள் அருந்திய பின்னர், பற்களிலும் ஈறுகளி லும் அழுக்குப்பிடியாதவண்ணம் வாயை நன்றாக அலம் பிக்கொண்டு வருவதாலும், சிறந்த பற்பொடிகளால் பல் துலக்கி வருவதாலும் இப்படியான நோய் திரும்ப வராது.

உண்டபின் 16 தரம் நீர் விட்டு வாயை நன்றாகக் கொப்புளிக்கவேண்டும் என்பது சுகாதார விதியாகும்.

### குழந்தைகளுக்குப் பல்முளைக்கும்பொழுது உண்டாகும் வேதனை

குழந்தைகளுக்குப் புதுப் பல் முளைக்கும்போது ஈறு வீங்கி அதிக வேதனையைப் பிறப்பித்தால், ஒரு நெல் முனையால் ஈற்றினை இரத்தம் வரக் கீறிவிடின் வேதனை நிற்கும். பின்பு பல் வெளிவரும்.

### கருவேலன் பற்பொடி

கருவேலம் பட்டையை எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து இளவறுவலாக வறுத்து அரைத்து வைத்துக் கொள்க. ஊர்காவத்துறை இந்துப்பு எடுத்து, எருக்கலம் பால் விட்டுக் காயவைக்க வேண்டும். பின்னர், அதை அவ் எருக்கலம்பாலையே விட்டு அரைத்து வில்லையாகத்தட்டிக் காயச் செய்து ஒரு ஓட்டில்வைத்து மண்சீலைசெய்து புடமிட்டு எடுத்துத் தூளாக்கி, முன்னரே தயாரிக்கப்பட்டிருக்கும் வேலம்பட்டைத் தூளுடன் சேர்த்துக்கொண்டு, பல் துலக்கிவரின் சகல பல்ரோகங்களும் நீங்கும்.

### முரசுவளர்ப்புப் பற்பொடி

1. 25 அல்லது 50 கயர்ப்பாக்குகளை எடுத்துச் சீவிப் பொடிபண்ணிக்கொண்டு, அதில் போதிய காட்டாமணக்கம்பால்விட்டுக் குழைத்து வில்லையாகத் தட்டிக் காயவைக்கவேண்டும். இப்படிப் பத்துமுறை செய்த பின்னர், வில்லையை எடுத்து, அதனுடன் கறியுப்பும், சீனக்காரமும் அளவாகக் கூட்டிப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு பல் துலக்கிவரின் தப்பாது முரசு வளரும்.



2. போதிய இலுப்பையிலை கொண்டுவந்து, உப்பு நீர் தெளித்துச் சட்டியிலிட்டுக் கருக வறுத்து எடுத்தபின், அரைத்துக்கொண்டு, பல் துலக்கிவரின் பல்லின் முரசு வளரும்.

### தந்தரோக நிவாரணப் பற்பொடி

1. கருவேப்பிலை, எலுமிச்சமிலை, நாரத்தையிலை, வில்வ இலை, மகிழமிலை ஆகிய இவற்றைச் சமபங்காக எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து உமிச்சாம்பலுடன் கலந்துவைத்துக்கொண்டு, பல் துலக்கிவரின் பற்கள் ரோகமின்றி உறுதியாகும்.

2. ஒருமுட்டியில் மகிழமிலையை ஒருபடையாக அடுக்கி அதன்மேல் ஒருபடை கறியுப்புப் பரப்பவேண்டும். இப்படியாகப் படைக்குப்படை இலையும் உப்புமாக முட்டி நிரம்பும் வரையில் அடுக்கிவிட்டு, முட்டியை மண்சீலை செய்து 50 வறட்டியில் புடம்போட்டு எடுத்து, முட்டிக்குள் இருப்பனவற்றை எடுத்து அரைத்துவைத்துக்கொண்டு, காலை மாலையில் பல்துலக்கிவரின் சகல பல் ரோகங்களும் நீங்கும்.

### உதிர நிவாரணப் பற்பொடி

இந்துப்பு, வேர்க்கொம்பு, கடுக்காய், களிப்பாக்கு, காசுக்கட்டி, கிராம்பு என்னுமிவைகளை எடைக் கெடையாக எடுத்து, ஓர் ஓட்டை அடுப்பின்மீ தேற்றி, அது நன்றாகக் காய்ந்தபின் கீழே இறக்கி, மேற்சொல்லிய

*சரக்குகளை இட்டு வறுத்து இடித்துவைத்துக்கொண்டு, பல் துலக்கிவரின் முரசிலிருந்து இரத்தம் வருதல் நின்றுவிடும்.*

## இருவாலைச் செட்டியார் பற்போடி

எருக்கம்பா லொருபங் காகு
 மிருபங்காம் பராய் மரத்தின்
உருக்கும்பா லிவற்றி னாலே
 யுவர்க்கட லுப்ப ரைத்துப்
பெருத்திடும் *ஆத பத்திற்
 பேணியே காய வைத்துக்
கருத்துறப் பழத்தேங் காயிற்
 கண்ணுடைத் திளநீர் தள்ளே.

அதற்குமுன் அரைத்த வுப்பை
 யள்ளியிட் டாப்ப டைத்து
விதித்தமண் சீலை செய்து
 விளம்பிய புடத்திற் போட்டுப்
பதித்தவச் சிரட்டை நீறும்
 பதத்தினி லெடுத்த ரைத்து
மதித்துவைத் தெடுத்துக் காலை
 வளர்தந்த சுத்தி செய்ய.

பல்வலி குத்தி னோடு
 பகர்தரு முளையே யின்னும்
சொல்லிய முரசு தன்னிற்
 றுகளூறு கரைவு தானும்
புல்லுபல் லலைவே யாதி
 போகுமிம் மருந்து போலப்
பல்லினோய் வெல்ல வேறு
 பக்குவ மருந்தொன் றில்லை.

---

* *ஆதபம் — வெயில்.*



**குறிப்பு.—** 1. *சூடுள்ள பதார்த்தங்களைப் புசித்தவுடன், அல்லது சூடுள்ள பானங்களைக் குடித்தவுடன், குளிர்ந்த சலத்தைக் குடித்தல் அல்லது அதைக்கொண்டு வாய் அலம்புதல் ஆகிய இவைகள் பற்களைப் பலவீனப்படுத்தும் என்று அறிக.*

**குறிப்பு.—** 2. *வாய் நாற்றமுள்ளவர்கள் எலுமிச்சம் பழத்தினால் பல்லைத் தேய்த்து வாய்கொப்புளித்தால், அது துர்நாற்றத்தை நீக்கி சுகந்தத்தை உண்டாக்கும்.*

# தலையிடி

தலையிடி உண்டாவதற்கு அநேக காரணங்களுண்டு. அது மலபந்தத்தினாலும், பித்தக் கொதிப்பினாலும், மண்டையில் நீர் பிடிப்பதாலும், கண்பார்வைக் குறைவினாலும், கண்மண்டல நரம்புகள் சூடேறப்பெற்றுத் தளர்ச்சியடைவதனாலும், அதிகயோசனையினாலும், சூதக அக்கிரமத்தினாலும், அதிக சூட்டினாலும் உண்டாகும். இக்காரணங்களின்றியும் சுரம், கயம், காதுவலி, பல்வலி முதலிய வியாதிகளில் தலையிடி தொடர்புற்றிருப்பதும் உண்டு.

## மலபந்தத்தினால் உண்டாகும் தலையிடி

இதன் குறிகள்: சரியாக மலங்கழியாமலிருத்தல், வயிறு மந்தமாயிருத்தல், பசி தோன்றாமலிருத்தல், தேகப் பொருத்துக்களில் உளைவு காணுதல் முதலியனவாம்.

இதற்குச் சிகிச்சை: சூரத்தாவரையிலை, கடுக்காய்த் தோல், ரோசாமொட்டு ஆகியவற்றை வகைக்குக் கழஞ்சு இரண்டு வீதமாக எடுத்து, அரைப்படி நீர்விட்டு நாலிலொன்றாக வற்றக் காய்ச்சி எடுத்த கஷாயத்தை வடி கட்டி, கணக்கான பனங்கட்டியுஞ் சேர்த்து, அதிகாலையில் வெறும் வயிற்றில் குடிக்கின் மூன்று நான்கு முறை விரோசனமாகும். அதனால் இத்தலையிடி நீங்கும்.

## பித்தக் கோதிப்பால் உண்டாகும் தலையிடி

இதன் குறிகள்: வாயூறல், வாய் கசத்தல், வாய் உவட்டல், தலைகுனியின் தலையில் பாரம் இருப்பது போலத் தோன்றல், தலைவலித்தல் என்பனவாம்.



சிகிச்சை: ஒரு வாய்கொள்ளக்கூடிய கீழ்க்காய் நெல்லியிலையை வாயில் இட்டு மென்று, அதன் சாற்றை விழுங்கின், இத்தலையிடி உடனே விலகும்.

## மண்டையில் நீர்ப்பிடிப்பால் உண்டாகுந் தலையிடி

இதன் குறிகள்: தலையில் அழுக்கு அல்லது எண்ணெய் இருக்கும்பொழுது தலைவேர்த்து, அவ்வேர்வையானது உள்ளடங்குவதனால் மண்டையில் நீர்க்கொதிப்பு உண்டாகும். அக்காரணத்தால் நாசிவழியாய் நீரோடும்; தும்மல் காணும்; தலை கனக்கும்; தலை வலிக்கும்.

## சிகிச்சை

1. ஒரு மஞ்சள் தேற்றை வேப்பெண்ணெயில் தோய்த்து நெருப்பில் கொளுத்திப் புகையை நாசியால் இழுக்கின், நீர்க் கொதிப்பும் அதனால் உண்டாகிய தலையிடியும் நீங்கும்.

2. ஓமத்தை அரைத்துத் தலையில் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்யினும் இத்தலையிடி நீங்கும்.

3. தயிர்வேளையும் சுண்ணாம்பும் சேர்த்துக் கசக்கி, அதைக் கன்னச்சுழிகளில் வைத்துச் சிறிதுநேரம் பிடித்துக்கொண்டிருப்பின் தலையிலுள்ள நீர் அதில் இறங்கும். அதை எடுத்துப் பிழிந்துவிட்டு மறுபடியும் வைத்துப் பிடிக்கவேண்டியது. இப்படி 3, 4 தடவை வைத்துப் பிடிக்கின் தலையிடி சுகமாகும்.

## கண்மண்டலத்திலுள்ள நரம்புகள் சூடேறப்பெற்றுத் தளர்ச்சியடைவதனுல் உண்டாகும் தலையிடி

இதன் குறிகள் : இது மேக சம்பந்தத்தால் உண் டாவது. கண் குத்தல், கண்மடலின் உள்பாகம் அவிந் திருத்தல், கண்ணிலிருந்து நீரும், பூளையும் வடிதல் ஆகிய இவை காரணமாக இத்தலையிடி உண்டாகும்.

சிகிச்சை : செஞ்சந்தனக் கட்டையை முலைப்பாலில் இழைத்து இரு கன்னச் சுழிகளிலும் பூசின், இத்தலை யிடி சாந்தமடையும்.

## கண்பார்வைக் குறைவால் உண்டாகுந் தலையிடி

இதன் குறிகள் : கண்ணுனது ஒரு பொருளை அதிக நேரம் பார்க்கமுடியாமல் நோவு கொள்ளும், அல் லது ஒரு புத்தகத்தைச் சிறிதுநேரம் வாசித்தவுடன் மேலும் வாசிக்க இயலாமல் சோர்வடையும்; கண் கலங்கி நீர்வடிக்கும். இக்குறிகள் உடையவர்களுக்கு சாதா ரணமாகத் தலையிடி இருந்துகொண்டேதான் இருக்கும்.

சிகிச்சை : கண்களைப் பரிசோதிப்பித்துப் பொருத்த மான கண்ணுடிபெற்று அணிந்துகொண்டிருத்தலே இதற் கேற்ற சிகிச்சையென்பர்.

## அதிக யோசனையால் வரும் தலையிடி

இதன் குறிகள் : மூளை மழுக்கமும், மேல்மேலும் யோசிக்கும் ஆற்றலின்மையுமாம்.



சிகிச்சை : நல்லகாற்றுள்ள இடத்தில் சிறிதுநேரம் உலாவிவரின், இத்தலையிடி ஒதுங்கும்.

## சூதக அக்கிரமத்தால் காணுந் தலையிடி

சிகிச்சை : இதற்கு அயம் அல்லது அயம் சேர்ந்த மருந்துகள் நலந்தரும்.

## சூட்டினுலுண்டாகுந் தலையிடி

சிகிச்சை : கொத்தமல்லிவிதையையும் சந்தனத்தை யும் அரைத்துக் கன்னச் சுழிகளில் பூசின் குணம் வரும்.

## அதிகாலையில் உண்டாகுந் தலையிடி

இத்தலையிடி உண்டாவதற்குக் காரணம் யாதெனின், இரவில் நித்திரை செய்யும்பொழுது, தூய்மையான காற் றைச் சுவாசிக்காமையே யாகும். ஆதலால், நல்ல சுகதேகிகளாக இருக்க விரும்புவோர்கள் சுத்தமான காற்று உலாவுகின்ற இடங்களிலேயே நித்திரை செய்தல் அவசியமாகும்.

### சிகிச்சை

1. கொஞ்சம் அறுகம் புல்லைப் பச்சைப்பாலில் சேர்த்து, அதை உச்சியில் சிறிது நேரம் பொருத்தி வைத்துக்கொண்டிருக்கின் நல்ல குணமுண்டாகும்.

2. சுக்கை முலைப்பாலில் இழைத்துத் துணியில் தடவி உச்சியில் போட்டுக்கொண்டிருப்பினும் சுகங் காணும்.

**குறிப்பு.**—மேலே எடுத்துக் கூறப்பட்ட பலவிதமான தலையிடிகளும் ஔஷதங்களால் மாறுவிட்டால், நோயாளரை நல்லகாற்றும் சுத்த ஜலமுமுள்ள ஓர் ஊருக்கு அனுப்பி, அங்குச் சில நாட்கள் வசிக்கும் படி செய்தால் நல்ல சுகம்பெறுவர்.

### மண்டைக் குத்து

இது ஒரு தனிப்பட்ட நோய். இது, மூளையில் வாய்வு சேர்வதால் உண்டாகக்கூடியது. அப்பொழுது, தலையின் எல்லாப் பக்கங்களிலும் வலிகாணும். இதற்குக் கொதிநீரில் கம்பளியை அவித்துப் பிழிந்து தாங்கக் கூடிய சூட்டோடு ஒற்றடம் பிடிக்கின் குணம் காணும்.

### நீர்க்கோவை, வாய்வு என்னும் இவற்றின் சம்பந்த மான தலையிடி

இஞ்சிச்சாற்றை மூக்கில் நசியமிடின் இத்தலையிடி குணமடையும்.

### நீர்க்கோவை, கபால இடி

கொஞ்சம் பால்சாம்பிராணியையும், அதிற்பாதியளவு மிளகையும் அரைத்து, சீலையில் தடவிச் சுருட்டி, நெய்யிற் தோய்த்துக் கொளுத்தி, நாசியால் புகை இழுக்கின் இவை தீரும்.

---

# ஜலதோஷம்

## [இதுவே தடிமன் என வழங்குகின்றது]

### ஜலதோஷத்தின் காரணம்

நாசி, நாசிக்குழல் என்னும் இவைகளில் இருக்கிற சளிஊறும் ஜவ்வுக்கு வெப்பம் உண்டானால், அதை ஜல தோஷம் என்றும், சுவாசக் குழலினும் அதன் கிளை களினும் வெப்பம் உண்டானால், அதை இருமல், அல் லது ஆங்கிலத்தில் 'புறங்கைறீஸ்' என்றும் சொல்லு வர். இந்நோயானது, குளிர்ச்சி, காற்றின் வித்தியாசம், ஈரத்தில் நடத்தல் ஆகிய இவைகளால் விளைகின்றது.

### ஜலதோஷத்தின் குறிகள்

நாசி, நேத்திரங்களிலிருந்து நீர் வடிதல், குரல் கம் மல், தொண்டையில் புண்போன்ற வேதனை சேர்தல், நாக்கின் மேற்புறத்தில் மாவு படிந்திருத்தல், சரீரத்தில் சுரமும், தாகமும், தீவிரநாடியும் இருத்தல் ஆகிய இவைக ளோடு, அன்னத் துவேஷத்தையும் இது தன்து உருவ மாகக் கொண்டிருக்கும். இக்குறிகள் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் வரையிலிருந்து போய்விடும்.

### சிகிச்சைகள்

1. சுத்த லங்கணமாயிருந்து, பருத்தியிலையை அல் லது எலுமிச்சமிலையை அவித்து, அதன் ஆவியால் வேது பிடிக்கின், இந்நோய் நீங்கிவிடும்.

2. இராத்திரியில் பாதங்களை வெந்நீர்ப் பாத்திரத்தில் கொஞ்சநேரம் வைத்திருந்து துடைத்துவிட்டு, பிறகு, காரமாகச் செய்த மிளகுநீர் ரசம் விட்டுப் போசனம் செய்து, கம்பளிப் போர்வையிட்டுப் படுத்துக் கொண்டால் வேர்வையுண்டாகும். அதனால் ஜலதோஷம் காணாது ஓடலும் ஓடும்.

3. ஒடியற் கூழை நீர்ப்பதமாகக் காய்ச்சிச் சுடச் சுடக் குடித்துவிட்டால், ஜலதோஷத்தை மிகுதியாக விடாது தடுத்துவிடலாகும். இது நமது நாட்டு வழக்கம்.

4. ஊதுமாக்கூழைக் காய்ச்சி இராப்போசனத்தின்மேல் சுடச்சுடக் குடிப்பதும் நன்று.

5. நெஞ்சில் கபங்கட்டி, இருமல் சளி என்ற இவை காணப்பட்டால், வீசம் இருத்தல் ஈரவெங்காயம், வீசம் ருத்தல் பனங்கற்கண்டு, அரைப்படி பசுப்பால், அரைக்காற்படி சுத்தசலம் ஆகிய இவைகளை ஒரு பாண்டத்திலிட்டுத் தண்ணீர் வற்றும்வரை எரித்தெடுத்து, போசனத்தின்பின், 15 நிமிஷமானவுடன், குடித்துவிட்டுப் படுக்கைக்குப் போகவேண்டும். இப்படியே ஒருநாளைக்கு இரண்டு முறையாக மூன்றுநாள் குடித்துவரின் எத்தகைய கபங்கட்டிய நெஞ்சுத் தடிமனும் சுகமாகும்.

### ஜலதோஷத்தோடு சுரமும் இருமலும் நேர்ந்தால் சிகிச்சை

சுக்கு, மிளகு, சிற்றரத்தை, அதிமதுரம் ஆகிய இவற்றைச் சமமாக எடுத்துக் கஷாயஞ் செய்து, 3 நேரம்



குடிக்கின் குணங் காணும். இன்னும், மஞ்சள் சுட்டு அதன் புகையை நாசியால் இழுப்பதும் நல்லதே.

### ஜலதோஷமும் ஜலக்கடுப்பும்

வீசம் இருத்தல் கற்கண்டை அரைப்படி நீரில் போட்டு நாலொன்றாக வற்றச்செய்து எடுத்து, சூடு ஆறிய பின், அதில் பாதி எலுமிச்சம் பழத்தைப் பிழிந்துவிட்டுக் குடித்துவிடின், ஜலதோஷம் ஜலக்கடுப்பு என்பன உடனே தீரும். வியர்வை உண்டாகும், அல்லது நீர் இறங்கும்.

### ஜலதோஷம், நீரேற்றம், தலைப்பாரம் முதலிய வற்றிற்கு

விபூதி, புழுங்கலரிசி, குரக்கன், வேப்பந்தூள் ஆகிய இவற்றுள் ஒன்றைப் பொட்டணம் செய்து, அதன் மீது ஓர் இரவு தலைவைத்துப் படுக்கின், தலைப்பாரம் முதலியன நீங்கும்.

### தலைவலி, மண்டையிடி, கபாலவலி முதலியவற்றிற்கு எண்ணெய்

நல்லெண்ணெய், குப்பைமேனிச்சாறு ஆகிய இவற்றை வகைக்கு ஒருபடியாக எடுத்து ஒன்றுசேர்த்துக் காய்ச்சி வடித்து முழுகிவருதலால் நல்ல குணங் காணும்.

### தலைவலிக்கு நசியம்

ஒருதலைப்பூண்டும், முருங்கையிலையும் சமஎடையாக எடுத்துப் பஞ்சுபோல் இடித்து, வலதுபக்கத் தலை

வலித்தால் இடது மூக்கினுலும், இடதுபக்கத் தலை வலித்தால் வலது மூக்கினுலும் 3, 4 துளிகளை உறிஞ்சின் தலைவலி குணமாகும்.

## தலைவலிக்குப் பற்று

மிளகை முலைப்பாலில் அரைத்துக் கொதிக்க வைத்துப் பூசின் மாறும்.

## தலையிடி, தலைப்பாரம், மூக்கில் நீர்ப்பாய்ச்சல் என்பவற்றிற்குச் கிசிச்சை

சந்தனம், விலாமிச்சம் வேர், பெருங்காயம் ஆகிய இவற்றைச் சமஎடையாக எடுத்து, முலைப்பால் விட்டரைத்துப் பழைய சீலையில் தடவித் திரிபோல் திரித்து நல்லெண்ணெயில் தோய்த்துத் தீபத்தில் கொளுத்தி ஆற்றி, அந்தப் புகையை மூக்கினுல் இழுக்கின் 2, 3 வேளைகளுள் மேற்படி வியாதிகள் குணமடையும்.

## ஒருபக்கக் கபால இடி

குப்பைமேனிச் சாறும் நல்லெண்ணெயும் சமமாகச் சேர்த்துக் காய்ச்சி, தலைக்கு வைத்துக்கொண்டுவரின் சுகங் காணும்.

## இருபக்கக் கபால இடி

மூன்று எலுமிச்சம் பழத்தை எடுத்து, ஒவ்வொன்றையும் நாலுநாலாகக் கீறி, அவற்றினிடையில் சுக்குத்தூள் செலுத்தி, ஒவ்வொன்றையும் ஏழு ஏழு ஆமணக்கிலையால் சுற்றிக்கட்டி, ஒருதேங்காயின் முழுமட்டையைக் கொளுத்தி அவற்றின்மேலே வைத்துவிடுக. மறுநாட்காலை



அவற்றை எடுத்துக்கொள்க. இவ்வாறு சுட்டுவைத்திருக்கும் ஒருபழத்தை எடுத்துப் பழங்கஞ்சியில் கசக்கிப் பிழிந்து, அதைத் தலையில் தேய்த்து ஊறவிட்டுத் தண்ணீரில் ஸ்நானஞ் செய்க. இதைத் தலையில் தேய்க்குமுன் நல்லெண்ணெயில் கொஞ்சம் தலையில் தேய்த்துக்கொள்ளல்வேண்டும். மற்றைய இரண்டு பழங்களையும் அடுத்த 2 நாளும் முன்போலவே தேய்த்து ஸ்நானம் செய்யின், பூரணசுகம் உண்டாகும்.

## ஒருபக்க இருபக்கக் கபால இடிக்குப் போதுத் தைலம்

பெருமருந்து வேர், மஞ்சள், வெள்ளைப்பூடு, மிளகு, மிளகாய் ஆகியவற்றை வகைக்கு இரண்டுகழஞ்சுவீதம் எடுத்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிய தைலத்தைத் தலையில் புரட்டிக்கொண்டு நாசியிலும் விட்டுக்கொள்க. பின்னர், தலையைச் சிகைக்காயால் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்து, சாம்பிராணிப் புகையால் வேதுபிடிக்கவேண்டும். இங்ஙனம் இரண்டு மூன்று முறை முழுகிவரின் நல்லகுணம் ஏற்படும்.

## ஒருபக்க, இருபக்க சூரிய, சந்திர கபால இடிகள்

9152 c.c

அரைக்கால்படி நல்லெண்ணெயிலே வெருகங் கிழங்கின் நாலு சிறுதுண்டுகளைப் போட்டுப் பொரிக்கவேண்டியது. கிழங்கில் நீர்ப்பிடிப்பில்லாதபடி அது பொரிந்த பின், கீழே இறக்கிவைத்து, சூடாறியவுடன், கிழங்குப் பொரியலை எடுத்துவிட்டு, எண்ணெயைத் தலையில்தேய்த்து

இளவெந்நீரில் ஸ்நானஞ் செய்து வந்தவுடன், அப் பொரியலைப் புசிக்கவேண்டும். அரைமணிநேரத்துக்குப்பின், புளிசேராத இரசத்துடன் சோறு உண்க. மத்தியானத்துக்குமேல் பத்தியமில்லை. இப்படியாக 3, 4 வாரங்கள் அடுத்து முழுகிவரின் மேற்சொல்லிய கபால இடிகள் மாறிவிடும்.

### மண்டையிடி, கபாலசூலை, பீநசம், நாசிப்புண், என்னுமிவைகளுக்குத் தைலம்

எலுமிச்சம்பழச் சாறு, நல்லெண்ணெய் ஆகிய இவற்றில் வகைக்குப் படியொன்ருக எடுத்து, $1\frac{1}{2}$ பலம் [$4\frac{1}{2}$ ரூபாய் எடை] நத்தைச் சூரிவேரை ஆவின்பாலில் அரைத்து, அவற்றில் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரின் மேற்கூறப்பட்ட வியாதிகள் தீரும்.

# நயன ரோகங்கள்

### நயன ரோக உற்பத்தி

வாதகோபத்தால் கருவிழியினிடத்து 45 வகையான ரோகங்களும், சிலேத்தும கோபத்தால் வெள்ளை விழியினிடத்து 20 வகையான ரோகங்களும், பித்த கோபத்தால் இமையோரத்தில் 16 வகையான ரோகங்களும், கடைக்கண்ணில் 15 வகையான ரோகங்களுமாகக் கண்ணில் 96 வித ரோகங்கள் தோன்றுகின்றன.

### நயன ரோகம் வருதற்குக் காரணம்

மூலத்தில் அக்கினி அதிகரிப்பதனுலும், எண்ணெய் முழுக்குத் தவறுவதனுலும், மலசல விகற்பத்தினுலும், தலைவரட்சியினுலும், அதிக விசனத்தாலும், கடுவெய்யிலில் நடப்பதனுலும், அதிக சுமை எடுப்பதனுலும், மழையிலுங் காற்றிலும் அலைந்து திரிவதனுலும், கடும் வெய்யிலில் பாதரக்ஷையின்றித் தார்பூசிய ரோட்டில் நடப்பதனுலும், தாம்பூலம் அடக்கி நித்திரை செய்வதனுலும், கூர்ந்த பார்வையினுலும், இன்னும் பலகாரணங்களினுலும் கண்ணில் அநேக ரோகங்கள் பிறக்கின்றன. அன்றியும், மாதர்களை யுற்றுப் பார்த்து மோகிப்பதாலும், உயிர்வதை செய்யப்படுவதைக் கண்ணுற்றும் அதை விலக்காதிருப்பதாலும், பசுக்களின் பால் கறக்கப்படுகையில் விழியால் நோக்கிப் பிரமிப்பதாலும், இவைபோன்ற வேறு பலவித குற்றங்களாலும் கண்ணேய்கள் சம்பவிக்கின்றன என்று கூறுவாரும் உளர்.

### கண்ணில் மருந்திடற்குப் பொருந்தாத காலம்

### கண்ரோகமுள்ளவர்கள் கருத்தூன்றி அறியவேண்டியது.

வெய்யிலில் நடந்து அலுத்திருக்கும்போதும், லாகிரி வஸ்துக்களைப் புசித்திருக்கும்போதும், எண்ணெய் முழுக்காடியவுடனும், கண்ணில் வலி தொடங்கிய நேரங்களிலும் கண்ணில் மருந்திடலாகாது.

### கண்ணில் மருந்திட்டபின் மேற்கொள்ள வேண்டிய முறை

காற்று, வெய்யில், லாகிரிவஸ்துக்கள், குளிர்ந்த சலம், கைப்பு, புளிப்பு, கரப்பான் பதார்த்தங்கள், காரமுள்ள வஸ்துக்கள் ஆகிய இவை முதலியன கண்ரோகத்தை விருத்தி செய்வதால் இவைகளை நீக்கிவைப்பது மிகவும் உத்தமமாகும்.

### கண்ரோகமுடையவர்கள் தந்தசுத்தி செய்யவேண்டிய முறை

ஆலம் விழுது, நாயுருவி வேர், காட்டாமணக்கங் குச்சு, வேம்பு, புல்லாந்தி என்ற இவைகளுள் ஒன்றால் காலை மாலை பல்துலக்கி வெந்நீரில் முகங் கழுவிவரின் நன்மையுண்டாகும்.

### கண்ணோவு

இது கண்கள் சிவத்தல், நீர்முட்டல், வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாமை என்னும் குணங்களை உண்டாக்கும்.



### சிகிச்சைகள்

1. தென்னங்குரும்பையை எடுத்துத் துவைத்துப் பிழிந்து, அதன் சாற்றைக் கண்ணில் விடுக. இப்படிக் காலை மாலை ஆறுநேரம் விட்டுவரின் கண்ணோவு நீங்கும்.

2. முலைப்பால், ஆமணக்கெண்ணெய் ஆகிய இரண்டையும் கலந்து இருகண்களிலும் விட்டுக்கொண்டு நித்திரைக்குப் போய்விடுக. இப்படியே கண்சிவப்பு எடுபடும் வரையில் செய்துவருக.

3. ஒரு கோழியின் காலைக் கீறி இரத்தம் எடுத்து, அதில் 2 துளிகள் கண்களில் விடின் குணங் காணும்.

4. சுடுசோற்றைப் பொட்டணங்கட்டி நல்லெண்ணெயில் தோய்த்து, இளஞ்சூடாயிருக்கும்பொழுது, கண்களில் ஒற்றடம் கொடுக்கின் கண்நோவு, கண்சிவப்பு முதலியன குணமாகும்.

5. ஒரு கோழிமுட்டையைக் காலையில் அவித்துக் கறியுப்பில் அமுக்கிவைத்து, அன்றிரவு படுக்கைக்குச் செல்லும்பொழுது, உப்புக்குள்ளிருக்கும் கோழிமுட்டையை எடுத்து, மேற்கோதை நீக்கி, நீளப்பக்கத்திலே பாதியாக வெட்டி, மஞ்சட்கருவை நீக்கிவிட்டு, சுத்த சலத்தில் கழுவி, அவற்றை இருகண்களிலும் உட்புறத்தைக் கவிழ்த்துமூடிச் சீலையாற் கட்டிக்கொண்டு படுத்து, விடிந்தபின் எழும்பிக் கட்டை அவிழ்க்கின், கண்ணெரிவு நீங்கிக் கண்கள் குளிர்ச்சியடைந்திருக்கும். இப்படி மூன்றிரவு செய்துவரின் பூரணசுகங் காணும். பகற்காலத்தில் நந்தியாவர்த்தம்பூவைச் சுத்தசலத்தின்கண் தோய்த்து,

பூவிலிருந்துவரும் சலத்தைக் கண்ணுக்குள் விட்டு வருவதும் நல்லது.

6. புள்ளிக்கற் றுழை தன்னிற்
புறந்தோலைப் போக்கி யேபின்
தெள்ளிதாய்க் கழுவி வெள்ளைச்
சீலையி லிட்டு நல்ல
வெள்ளிய சீனக் கார
மேம்படப் பொடித்துப் போட்டே
உள்ள * பொட் டளியா லொற்ற
வொழிந்திடுங் கண்ணோ வன்றே.

## கண்கட்டிக்குச் செய்யப்படும் சிகிச்சைகள்

1. கறிமிளகை சுடுநீர்விட்டு அரைத்துக் கட்டியிற் பூசிவிடின் குணமாகும்.

2. முலைப்பாலில் சங்கை உரைத்துப் பூசின் கட்டி கரைந்துவிடும்.

3. பூனைவாலால் கட்டியைத் தடவின் கட்டி அமரும்.

4. ஒரு மிளகுப் பிரமாணம் புனுகெடுத்துக் கட்டியின்மேல் பூசிவரின் குணமாகும்.

5. செஞ்சந்தனத்தை முலைப்பாலில் உரைத்துப் பூசின் கட்டி அமர்ந்துவிடும்.

## கண்சிவப்பு, கண்ணீர் வடிதல், கண்வலி என்னும் இவைகளுக்கு

குருக்கத்தியின் பாலில் ஒருதுளி, இரண்டுதுளி கண்ணில் விடின் சாந்தமாகும்.

* பொட்டளி—பொட்டணம்.



## கண் எரிவு

மாதுளங் துளிரைத் தண்ணீரில் அவித்து, அந்த நீரால் காலை மாலை கண் கழுவிவரின் எரிவு நீங்கும்.

## கண்ணில் சிவப்புப்படர்தல், கண் எழுச்சி, கண்குத்து என்பவைகளுக்கு

இரு கழஞ்சு ஊர்காவற்றுறை இந்துப்பில், 3 எலுமிச்சம்பழம் பிழிந்துவிட்டு, அதில் ஒரு மிளகுப் பிரமாணம் துரிசைப் பொடித்துப் போட்டு, இம்மூன்று பொருள்களையும் நன்றாகக் கரைத்து வடித்து, அரை அடிச் சதுரமுள்ள ஒரு வெள்ளைத் துணியை அதில் தோய்த்து, ஒரு செப்புத் தட்டில் விரித்து வெய்யிலில் காயவைக்க வேண்டும். மாலைப்பொழுதில் அத்துணியை எடுத்து எஞ்சிய சாற்றில் தோய்த்து வைக்கவேண்டும். மறுநாட் காலையில் அத்துணியை எடுத்து முற்கூறிய பிரகாரம் காய வைக்கவேண்டும். இவ்வாறு 3 நாள் காயவைத்து எடுத்துப் பத்திரமாக வைத்துக்கொள்க.

தேவையானபொழுது, அத்துணியில் ஓர் அங்குலப் பிரமாணமான ஒரு துண்டை நறுக்கி முலைப்பால் விட்டுப் பிழிந்து, அதில் 2, 3 துளிகள் கண்ணில் விடுக. இப்படியாக வியாதி மாறும் வரையிலும் கண்ணில் விட்டுவரின் பூரண சுகமுண்டாகும். இது ஒரு புகழ்பெற்ற கண்வைத்தியருடைய முறையாகும்.

**குறிப்பு.**—1. கண் எழுச்சியாவது, வெள்விழியில் தேமலைப் போல் தட்டையாகத் தசை வளர்ந்து பரவுவது.

2. துரிசைத் தயிரில் 4 மணிநேரம் ஊறவைத்தால் அது சுத்தியாகும்.

### கண்ணில் தூசி, துரும்பு ஆகியவைகள் விழுந்துவிட்டால்

1. இரண்டு நிமிஷம் வரையில் கண்ணை மூடிக் கொண்டிருக்கின், அப்போது உண்டாகும் கண்ணீரானது தூசியை ஒரு பக்கத்தில் கொண்டுபோய் ஒதுக்கிவிடும்.

2. ஈனுத எருமையின் சாணிப்பாலில் சிற்று மணக்குப் பருப்பை யிழைத்துக் கண்ணில் தடவின், நீர் வடிந்து மாசு நீங்கிவிடும். நேத்திரம் சுத்தியாகும்.

### கண்பூவிற்கு

1. தேட்கொடுக்கியிலையையும், நந்தியாவட்டைப் பூவையும் சமநிறையாகவெடுத்து நன்ருகக் கசக்கிப் பிழிந்து, அந்த ரசத்தைக் கண்ணில் விட்டு வந்தால் 4, 5 வேளைகளில் கண்பூ கரைந்துவிடும்.

2. முசுமுசுக்கையிலையும் சீரகமும் சரி எடையாக எடுத்துச் சிதைத்துத் துணியில் முடிந்து முலைப்பாலில் தோய்த்துக் கண்ணில் பிழிந்து வந்தால், கண்பூ மாறி விடும். ஒருவேளைக்கு மூன்றுதரம் பிழியவேண்டும்.

### கண் கலங்கல்

ஒரு பிள்ளையினது சிறுநீரைத் தெளிய வைத்து, மூன்றுநாள் காலைமாலையில் கண்கழுவிவரின் கண்கலங்கல் நீங்கும்.

### கண் அரிப்பு

புளியமிலையை அவித்தெடுத்த நீரால் காலையில் கண்களைக் கழுவிவரின் அரிப்பு நீங்கும்.



### கண் புகைச்சல்

புளியாரையிலை, வெங்காயம், சீரகம் ஆகிய இவற்றை இடித்துச் சாறு பிழிந்து கண்ணில் விட்டுவரின் கண் புகைச்சல் தீரும்.

### கண் குளிர்ச்சிக்கு

1. சிற்றுமணக்கம் வேர் 6 ரூபா எடை எடுத்து அரைத்து, அதை அரைப்படிப் பசுப்பாலில் கரைத்து, அப்பாலைக் காய்ச்சி இளஞ்சூட்டில் புரைகுத்தி, மறுநாள் கடைந்து எடுத்த வெண்ணெயை வைத்துக்கொண்டு, கண்களில் தீட்டிவரின், கண் குளிர்ச்சி யுண்டாகும்.

2. வில்வைப்பழத்தின் விரைபோக்கி, அதன் சதையை நல்லெண்ணெயிற் கலக்கி, அதற்குச் சமனுகப் பசுப்பாலும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடி கட்டி, ஒருவாரத்தில் இரு முறை தலைமுழுகிவரின், கண் குளிர்ச்சியாவதுடன் தேக அழலுந் தீரும்.

### கண்வலி, கண்வீக்கம் முதலியவைகளுக்கு

கறியுப்பைக் கரைத்த நீரால் அடிக்கடி கண்ணைக் கழுவிவரின், இவ்வியாதிகள் நீங்கிப் பார்வை தெளிவாகும்.

### கண் சிவந்து குத்து நோவெடுத்தால்

1. மாதுளந்துளிர், கோவ்வையிலை ஆகிய இரண்டையும் அரைத்து, அதனுடன் பச்சைவெண்ணெய்ச் சேர்த்து, புறவளையம் போடின் சுகமாகும்.

2. மண்வெட்டியைச் சிவக்கக் காய்ச்சி, அதில் எலுமிச்சம்பழரசம் விட்டுக் கடுக்காயையும் சுக்கையும் அதில் உரைத்து, கண்ணில் வளையம்போடின் குணங் காணும்.

### சிறுபிள்ளைகளின் கண் சிவந்திருத்தல், நீர்வடிதல்

மாதுளங் துளிரை அவித்து, அதன் நீரால் கண்களைக் கழுவிவரின் குணங் காணும்.

### மாலைக்கண்

[இவ்வியாதியானது பாண்டு ரோகத்தால் உண்டாவதாகும்.]

1. கிருஷ்ண துளசியின் சாற்றில் 2, 3 துளிகள் கண்களில் விட்டுவருதல் நலம். நல்ல இரத்தம் உண்டாவதற்கு 'கொட்லிவர் ஓயில்' முதலிய மருந்துகளை உட்கொண்டு வருதலாலும் நன்மை உண்டாகும்.

2. இலுப்பைப் பூவையாவது, காட்டாமணக்கின் முத்தையாவது, மகிழின் வித்தையாவது மூலைப்பாலில் உரைத்துப் போடினும் மாலைக்கண் மாறும்.

பத்தியம்: உப்பு, கைப்பு, புளிப்பு என்பனவற்றைத் தவிர்த்தல் வேண்டும். சோறும் வெந்நீரும் கொள்க.

# காது ரோகங்கள்

### காதுரோகம் உண்டாவதற்குக் காரணம்

இது, காதில் குளிர் சம்பந்தப்படுவதால் பரிச நரம்பும், தொனிச் சவ்வும் விறைத்து மதர்த்துத் தடித்தலாலும், மற்றும் பலவிதமான காரணங்களினாலும் உற்பத்தியாகும்.

### காது மந்தத்துக்கு

1. முட்பன்றிமுள்ளை நறுக்கி புங்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து, காதில் விட்டடைத்து, காற்றுப்படாமல், மூன்றுநாள்வரையி லிருக்கின் அது தீரும்.

2. வெள்ளைப்பூண்டைப் பஞ்சுபோல் இடித்துப் பொட்டணங் கட்டித் தீபத்திற் பிடிக்கின் தைலம் இறங்கும். அதில் 4, 5 துளி காதில் விட்டுவந்தால் குணம் வரும்.

3. குதிரைலத்திச் சாறு, இஞ்சிச்சாறு என்பவற்றைச் சம எடையாகக் கலந்து வடிகட்டி 4, 5 துளி காதில் விட்டு அடைத்துவரின் காது மந்தம் நீங்கும்.

### வாயுவினாலுண்டாகுங் காதுக் குத்துக்கு

1. ஒரு சிறு பெருங்காயத்துண்டை ஒரு சீலைத் துண்டால் சுற்றிக் காதின் துவாரத்தில் அடைத்து வைக்கில் குணங் காணும்.

2. ஒரு உள்ளிப்பல்லைக் காதில் வைத்து அடைத்து விட்டாலும் அது வாயுவைக் கண்டிக்கும்.

3. ஒரு செத்தல் மிளகாயை எடுத்து அதன் நுனியைக் கிள்ளி விரைகளை நீக்கி விட்டு, அதில் வேப்பெண்ணெயாவது, நல்லெண்ணெயாவது, முலைப்பாலாவது விட்டுச் சூடுகாட்டி, காதில் 4, 5 துளிகள் விட்டுப் பஞ்சால் அடைக்கின் குத்து நீங்கும்.

4. நல்லெண்ணெயில் பெருங்காயம் போட்டுக் கொதிப்பித்துக் காதில்விட்டு அடைத்தாலுங் குத்து நீங்கும்.

### காதில் குறும்பி (அழுக்கு) இருக்கின், அதனுல் உண்டாகுங் குத்துக்கு

தயிர்வேளைச்சாறும் நல்லெண்ணெயும் சமனுக எடுத்து ஒன்றுசேர்த்து 4, 5 துளிகள் காதில் விட்டடைக்கின் குணமாகும்.

### உள்காதில் புண்ணிருக்கின், அதனுல் உண்டாகுங் குத்துக்கு

ஒரு பூமத்தங்காயை எடுத்து, அதனுள்ளிருக்கும் விதைகளை நீக்கிவிட்டு, பட்டுப்போல் அரைத்த மிளகுதூளை அதிற்போட்டு, சொற்ப வேப்பெண்ணெயும் விட்டுக் கொதிப்பித்து வடிகட்டி இளஞ் சூட்டில் 4, 5 துளிகள் காதில் விட்டடைக்கின், குணங் காணும்.



### காதிரைச்சல்

நல்லெண்ணெயையும் தயிர்வேளைச் சாற்றையும் சமபாகமாக எடுத்துக் காய்ச்சி வடித்து 4, 5 துளிகள் காதில் விடின் இரைச்சல் நீங்கும்.

### காதில் கட்டு, சீதல், வலி ஆகிய இவற்றிற்கு

பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, வசம்பு ஆகிய இவைகளை ஒருநிறைப்பட எடுத்துச் சிதைத்து, வேப்பெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து, காதில் விட்டு அடைத்தால், கட்டு, சீதல் வருதல் முதலாயின குணமாகும்.

### காதில் வரும் அசுகுணிக்கு

1. வடலிக் குருத்திலுள்ள பூஞ்சை (பஞ்சை) எடுத்து, அவ்வடலிமட்டைச் சாற்றிலேயே குழைத்து, அசுகுணிமீது பூசின் குணங் காணும்.

2. குப்பைமேனியும் உப்பும் சேர்த்தரைத்து நீரில் கரைத்து, அதன்மீது பூசினும் குணம் வரும்.

3. சந்தனக்கட்டை எண்ணெயை அதன்மேல் பூசுவதனுலும் குணம் வரும்.

### காதில் ஈ முதலாயின புகுந்தால்

1. குப்பைமேனிச் சாற்றில் சிறுநீர் சேர்த்துக் காதினுள் விடின், ஈ முதலாயின வெளிவரும்.

2. வெள்ளெருக்கிலைச் சாற்றில் 4, 5 துளிகள் காதினுள் விட்டாலும், உட்புகுந்த ஈ முதலாயின வெளிவரும்.

### காதுநோய்கள் பலவற்றிற்கும் போது சிகிச்சைகள்

1. சிறுநீரின் 4, 5 துளிகள் காதினுள் விடின், காது நோய்கள் பலவும் நீங்கும். இப்படி 3, 4 முறை செய்ய வேண்டும்.

**குறிப்பு.**—ஆடவர்களுக்குச் சிறு பெண்பிள்ளையின் மூத்திரமும், ஸ்திரீகளுக்குச் சிறு ஆண்பிள்ளையின் மூத்திரமும் உபயோகிக்கவேண்டியது.

2. மருட்செடியின் மடலில் ஒருதுண்டு நறுக்கி எடுத்து நெருப்பில் வாட்டிப் பிழிந்து 4, 5 துளிகள் காதினுள் விடுக. இப்படி 3, 4 முறை விட்டுவரின், காது நோய்கள் யாவுங் குணமடையும்.

### காதுநோய்கள் பலவற்றிற்கும் வேறு போதுவான சிகிச்சைகள்

1. காற்படி வேப்பெண்ணெயில், மஞ்சள் 6 கழஞ்சும், வசம்பு உள்ளி என்ற இவற்றில் வகைக்கு 9 கழஞ்சும் ஆகிய இவற்றையெல்லாஞ் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, காதில்விட்டு அடைத்து, உச்சியிலும் தேய்த்துவரின், காது நோய்கள் எல்லாம் தீரும்.

2. காற்படி நல்லெண்ணெயில், 2 கழஞ்சு நிலப் பனைக்கிழங்கை யரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரினும், காதுநோய்கள் எல்லாம் தீரும்.

## பீநச ரோகங்கள்

மூலத்தில் கனல் அதிகப்பட்டுச் சிரசில் நீர் தங்குவதனுல் நாசியிலுண்டாகும் பீநசரோகம் பலவகைப்படும். அவை பின்வருவன :

### வாத பீநசம்

இதன்குணம் : நாசிவரளும், நீர்வடிந்து சளி நாற்றமில்லாமல் வரும்.

### பித்த பீநசம்

இதன்குணம் : நாசிவழியாக மஞ்சள் நிறமாய்ச் சளி வடியும் ; புலால் நாற்றம் வீசும்.

### சிலேட்டும பீநசம்

இதன்குணம் : நாசியை மாறிமாறி அடைத்து முத்துப்போல நீர்வடிந்து நாறும் ; துணுக்காகச் சளி விழும், நாசியில் ஊசிபோல் குத்தும் ; கண்ணில் பீளை சாறும்.

### இரத்த பீநசம்

இதன்குணம் : கபாலத்தில் வட்டம் வட்டமாய்ப் புண்ணுகி நாசிவழியாய் உதிரம் வரும் ; தலை வலிக்கும்.

## சிராய்ப் பீநசம்

இதன்குணம்: நாசியில் ஈருள்ளிக்கூடுபோல் சீழ் திரண்டுவரும்; மணங்தெரியாது; ஓயாமல் தலை வலிக்கும்.

## நீர்ப் பீநசம்

இதன்குணம்: நாசியில் நீர்வடியும்; மழை காலத்தில் பிடரியிலும் முகத்திலும் ஊறலுண்டாகும்; அடிக்கடித் தும்மல் வரும். கழுத்து வலிக்கும்.

## சீழ்ப் பீநசம்

இதன்குணம்: கபாலம் அதிக வெப்பங்கொண்டு, கபாலம் முதல் நாசிவரையில் புண்ணாகி, சீழ்வடியும், தலைவலிக்கும்.

## மூல பீநசம் அல்லது நாசிகாபீடம்

இதன்குணம்: நாசியில் கோழிச்சதைபோலும் அதன் சூடுபோலும் தசை வளரும். இது அல்லாமலும், நாசியில் சுண்டைக்காய்போல் சதை வளர்ந்து அடைக்கும். சிரசுநீர் நெஞ்சிலிறங்கிக் கபங்கட்டும். இது கண்ட பீநசம் எனப்படும். இவை இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை.

## பீநசம் சகலத்திற்கும் பொதுவான சிகிச்சை

அதிகாலையில் வாத்துமுட்டை ஒன்றை உடைத்துத் தலையில் தப்பிக்கொள்ளல்வேண்டும். ஒருசிறங்கைப் புளியங்கொட்டையை 24 மணிநேரம் ஊறவைத்து



எடுத்து நன்றாகத் தோல்போகக் கழுவி, அதனுடன் பாதித்தேங்காயைத் துருவிய பூச்சேர்த்து இடித்துப் பிழிதல் வேண்டும். அதில் ஒரு மேசைக்கரண்டியளவு ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, மிகுதியைத் தலைக்குத் தப்பித் தண்ணீரில் தோய்தல்வேண்டும். தோய்ந்தவுடன், முன்னமே எடுத்துவைத்திருக்கும் ரசத்தைக் குடித்துவிடுக. வியாதி முற்றாக மாறும்வரையில், இப்படித் தினமும் செய்துவரவேண்டியது.

## மூலபீநசம், கண்டபீநசம் என்னும் இவற்றின் சிகிச்சைகள்

1. நசியம்: வாழைச்சருகு, வாழைப்பழத்தோல், சுரையோடு, உலர்ந்த சுண்ணாம்பு ஆகிய இவற்றையெல்லாம் சமனெடையாகக் கூட்டிப் பொடிசெய்து தண்ணீரிற் கரைத்து நசியமிடின், மூலபீநசம் கரையும். வாழைச் சருகையும், வாழைப்பழத்தோலையும் தனித்தனிச் சுட்டுச் சாம்பலாக்கிச் சேர்ப்பதுமுண்டு.

2. புகை: ஆயிற்பட்டை, மலாக்காச் சந்தனம் என்பனவற்றில் வகைக்குக் கழஞ்சு $1\frac{1}{2}$ வீதமும், மட்டிப்பால், சாம்பிராணி என்பனவற்றில் வகைக்குக் கழஞ்சு 1 வீதமும், மிருதார்சிங்கி, சாதிலிங்கம், அரிதாரம் என்பனவற்றில் வகைக்கு $\frac{3}{4}$ வீதமும், இலுப்பைப் பிண்ணாக்கில் கழஞ்சு $\frac{1}{8}$ உம் ஆக எடுத்து, ஊமத்தையிலைச் சாற்றால் அரைத்து, எருக்கம்பாலும் சதுரக்கள்ளிப்பாலும் ஒரு துணியிலூற்றி உலர்த்தி, மேற்படி மருந்தை அதிற்பூசிக் காயவைத்து எடுத்துக்கொண்டு, அதில்

கொஞ்சம் கத்தரித்து சுங்கானில் வைத்துப் புகையை விழுங்கி நாசியால் விடில், மூலபீநசம், கண்டபீநசம், சிராய்ப்பீநசம், கபாலசூலை, வலி, இரணம் முதலானவை தீரும். இதைத் திரியாக்கிக் கொளுத்தி, நெருப்பை அணைத்துவிடுவதா லுண்டாகும் புகையை நாசியால் உறிஞ்சுவதும் மற்றொரு முறையாகும். இப்புகையானது கண்ணில் படாதபடி காத்துக்கொள்க.

## இரத்த பீநசத்துக்கு நசியங்கள்

1. பசுப்பாலை நாசியில், நசியஞ் செய்யில் நாசி வழியாக இரத்தம் ஒழுகுதல் நிற்கும்.

2. மாதுளம்பழச் சாற்றை நாசியில் நசியமிடுவதால், நாசியிலிருந்து திடீரென ஒழுகும் இரத்தம் நிற்கும்.

3. ஆடாதோடையிலைச்சாறும் தேனும் சமனெடையாகக் கலந்து ஒரு பலம் எடுத்து இந் நோயாளிக்குக் கொடுக்கவேண்டும். இப்படி மூன்றுநாள் கொடுத்தால், வாயாலும் மூக்காலும் இரத்தம் வருவது நிவர்த்தியாகும்.

4. தாது மாதுளம் பூவும் வெள்ளெருக்கன் பழுப்பும் வதக்கிக் கசக்கி மூக்கில் பிழியின், இரத்த பீநசம் தீரும்.

5. வெந்நீரில் கணக்கான உப்பைக் கரைத்து, அந்த நீரை நாசியால் உறிஞ்சிவரின், முக்கியமாக, மூக்கு நீர்ப்பாய்ச்சல், மூக்கடைப்பு, தும்மல் ஆகிய குணங்களையும், பொதுவாக, எல்லாவகைப் பீநசங்களையும் குணப்படுத்தும்,



6. துளசியிலையை உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு நசியமிட்டுவரில், நாசியிலுள்ள கிருமிகள் வெளிவரும்.

7. புகை: மகிழமிலைச் சருகைத் தூளாக்கி, அதை ஒரு மகிழமிலைச் சருகால் பீடிபோல் சுருட்டிக் குடித்து மூக்கால் புகைவிட்டுவரில் குணங் காணும்.

## நீர்ப்பீநசத்துக்கு நசியம்

சாறணைக்கிழங்கு, இந்துப்பு, மிளகு, சீனி, நெய், முலைப்பால் ஆகிய இவற்றில் ஒவ்வொன்றையும் சமன் எடையாக எடுத்துக்கொண்டு, சாறணைக்கிழங்கையும், இந்துப்பையும், மிளகையும் பொடிபண்ணிச் சீலையில் வைத்துப் பொட்டணங்கட்டி முலைப்பாலில் தோய்த்துக் கசக்கி எடுத்த இரசத்துடன் நெய் கலந்து, நாசியால் நசியமிடின் மூக்கு நீர்ப்பாய்ச்சல், தினவு, மூக்கடைப்பு என்பன குணமாகும்.

9152 C.C

# வாத ரோகங்கள்

வாதரோகமென்பது, நரம்புத் துவாரங்களில் கெட்டநீர் தங்கித் தசையில் ஊறி, வாயுவை அதிகரிப்பித்து, வலியையும் அசதியையும் சர்வாங்கங்களிலும் விளைப்பதாகும்.

அவ்வாதரோகமானது 80 வகைப்படும். அவைகளை விரிக்கிற் பெருகும். அன்றியும், வாதரோகங்கள் கை வைத்தியங்களாலேயே வசப்படக் கூடியனவும் அல்ல. 80 வகையான ரூபங்களோடு தோன்றும் அப்பெரியநோயைப் பற்றிக் கூறும் நூல்களை நன்குகக் கற்றறிந்து அனுபவம் பெற்ற ஒரு வைத்தியரிடமே சென்று அந்நோயினுக்குத் தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆதலால், வாதரோகங்களுக்கு முக்கியமானவையும், அனுபவம் வரப்பெற்றவையுமான சில கைமுறை மருந்துகளை மாத்திரமே இங்கே எடுத்துக் கூறுவாம்.

### வாதம் 80 க்கும் போதுவான ஒற்றடங்கள்

1. புங்கமிலை, ஆமணக்கிலை, வேப்பிலை, எருக்கிலை, ஆடாதோடை, வாதமடக்கி, நொச்சி ஆகியவற்றில் ஒவ்வொரு வகையிலும் ஒருபிடி எடுத்து, அவற்றைக் குறுணலாக அரிந்துகொள்ளவேண்டியது. பின்னர், ஒருதுண்டு முருங்கைப்பட்டை, ஒரு மேசைக்கரண்டியளவு கடுகு, ஒருதுண்டு சுக்கு, ஒருசிறங்கைத் தேங்காய்க்கயர் ஆகிய





நான்கு பொருள்களையும் நன்குக அரைத்தெடுத்து, முன்னரே அரிந்துவைத்திருக்கும் பச்சிலைகளின் குறுணலோடு சேர்த்துப் பிசைந்து, மூன்று பொட்டணங்களாகக் கட்டி, கால்படி வேப்பெண்ணெயைக் கொதிக்கவைத்து, அதில், அப்பொட்டணங்களைப் போட்டுக் கால்மணி நேரம் வரையில் வேகும்படி விடுக. பின்னர், அப்பொட்டணங்களில் ஒவ்வொன்ருக எடுத்துக் குத்துள்ள பாகங்களில் நன்குக ஒற்றடங் கொடுத்தல் வேண்டும்.

இச் சிகிச்சையைக் காலையில் செய்யவேண்டியது. சாயந்தரம் 4 மணி அளவில் நோயாளிக்கு அரப்புத் தேய்த்து, அவரை வெந்நீரில் கண்டத்தின்கீழ்க் குளிப்பித்தல் வேண்டும். அதன்பின், பத்திய முறையில் உணவு கொடுத்தல் வேண்டும். காலையிலிருந்து குளித்து முடியும் வரையில், இடையில், ஒருவகையான ஆகாரமுங் கொடுக்கக்கூடாது. இப்படியாக மூன்றுநாள் செய்துவரின், நோயாளி குத்துவலி நீங்கப்பெற்று எழும்பி உலாவக்கூடிய பக்குவத்தையடைவர். இது ஒரு கைகண்ட முறையாகும்.

2. இலுப்பையிலை, வாதமடக்கி, மாவிலங்கையிலை, நொச்சியிலை, ஆமணக்கிலை ஆகிய இவற்றைச் சமமாக எடுத்துக் குறுணலாக நறுக்கி இரண்டு பொட்டணங்கள் செய்து, அவைகளை வேட்டில் அவித்தெடுத்து ஒற்றடங் கொடுத்தாலும், குத்தும், உளைவும் சாந்தியாகும்.

3. சதுரக்கள்ளியை இரண்டாகப் பிளந்து, உட்சோற்றை எடுத்து, அதனுடன் ஒரு சிறங்கை வெள்ளை வெங்காயமும், ஒரு தேங்காயைத் துருவிய பூவும் ஒன்று

சேர்த்து, 2 பொட்டணங்கள் கட்டி வேட்டில் அவித்து, ஒற்றடங் கொடுத்து வந்தாலும் நல்ல பலனுண்டாம்.

### பூச்சு மருந்துகள்

1. கருக்குக்கற்றாழைச் சாறு ஒரு சிறங்கை, அவின் ஒரு குன்றிமணி எடை, இலுப்பெண்ணெய் அரைச் சிறங்கை ஆகிய இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துச் சுடவைத்து, குத்துவலியுள்ள இடத்தில் பூசிய பின்னர், இளந்தேங்காய்மட்டைக்குச் சூடுகாட்டி, அந்த இடத்தை உருவுதல் வேண்டும். 7 நாள் இப்படிச் செய்து வரின், குத்துவலி நீங்கும். கற்றாழை மடலை நெருப்பில் வாட்டிச் சாற்றைப் பிழிந்தெடுத்தல் வேண்டும்.

2. பறங்கிக்கிழங்கு, அமுக்கராய்க்கிழங்கு, சுக்கு, மஞ்சள், குந்துருக்கம், சாளியா ஆகிய இவற்றை இடித்து மாவாக்கி, உத்தாமணிச்சாறு விட்டு அரைத்து, அச் சாற்றிலேயே கொதிப்பித்து, உபத்திரவமுள்ள இடங்களில் பூசிவந்தாலும், குத்தும் உளைவும் குறைந்துவிடும்.

### உள் மருந்துகள்

1. போதிய அளவு கொடிக்கள்ளியைக் கொண்டு வந்து, வரகு வைக்கோலை எரித்து, அந்த நெருப்பில் அதை வாட்டிப் பிழிந்து, 6 படி சாறு எடுத்துப் பன்னீர் வடிக்கும் யந்திரத்தில் விட்டு, அதனுடன் ஒரு இருத்தல் பறங்கிக் கிழங்கை இடித்துப் போடுக. பின்னர், நெருப்பு மூட்டி அதை எரித்தால், அதினின்று திராவகம் இறங்கும். அதைப் போத்தல்களில் எடுத்து வைத்துக்கொண்டு அதில் ஒவ்வொரு தேக்கரண்டி வீதம் எடுத்துக் காலை மாலைகளில் 6 நாள் குடித்துவரின் நல்ல பலனுண்டாம். பத்தியம்: பாலும் சோறும்.



2. சாறணைவேரை இடித்துப் பிழிந்தசாறு ஒரு சிறங்கை, இஞ்சிச்சாறு இருசிறங்கை, சீனி ஒரு சிறங்கை ஆகியவற்றை ஒரு புட்டியில் போட்டுக் கலந்து வைத்துக் கொண்டு, ஒரு தேக்கரண்டிவீதம் காலைமாலை உட்கொண்டு வரின், நோய் சாந்தியாகும்.

3. நோயாளி, இரவில் படுக்கைக்குப் போகும் சமயத்தில், அவருக்குச் சுக்குக் கஷாயத்தைக் கொடுத்து, அவரை ஒரு கம்பளிப் போர்வையால் மூடி, வேர்வை வந்தவுடன், அதை ஒரு துணியினால் துடைத்துவிடல் வேண்டும். இப்படிச் சிலகாலம் தொடர்ந்து செய்து வரின், இது நாள்பட்ட வாதரோகிக்கும் நல்ல பலனைக் கொடுக்கும்.

### உட்டணவாதம்

1. கறியுப்பை அரைத்து ஒருதுணியில் தடவி, அதன்மேல் சுடுசோறு போட்டு, உடனே பொட்டணமாகக் கட்டி, ஒற்றடம் பிடிக்கின் உட்டணவாய்வு விலகும்.

2. கறியுப்பு, மாவிலங்கைப்பட்டை, இலுப்பைப் பட்டை ஆகிய இம்மூன்றையும் ஒரு கணக்காக எடுத்து உரலிலிட்டு நன்றாக இடித்துப் பொட்டணங் கட்டி வேட்டில் அவித்தெடுத்து, தாங்கக்கூடிய சூட்டில் வாதப் பிடிப்புள்ள இடத்தில் ஒற்றடம் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு 3 நேரஞ் செய்யின், உட்டணப்பிடிப்பு நீங்கும்.

3. உருளைக்கிழங்கை அவித்து நன்றாக அரைத்து, ஒரு சீலையில் தடிக்கப் பூசி வீக்கத்தின்மேல் கட்டிவிடின், ஒரு இரவில் நல்ல குணந் தரும்.

### அண்டவாதக் குத்து

மூன்று கழற்சி விதைப் பருப்பை எடுத்துப் பசுப் பால் விட்டு அரைத்து, அப்பாலில் கலக்கிக் காய்ச்சிக் குடித்துவரின், அண்டவாதம், பக்கசூலே ஆகிய இவை தீரும்.

### விதை வீக்கம்

1. மூன்று கழற்சிப் பருப்புகளைப் பொடிசெய்து அதில் ஒரு கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை ஊற்றி, இரண்டையும் ஒன்றுசேர்த்துக்கொள்க. ஒருதுண்டு கார முள்ள தடித்த புகையிலையில், மேற்கூறிய கரையலைத் தடிப்பாகப் பூசி, வீக்கமுள்ள விதையில் வைத்துக் கட்டினுல் வீக்கம் வற்றும்.

2. முருக்கம்பூவைக் கொண்டுவந்து தண்ணீரில் வேகவைத்து, அந்த நீரால் வீக்கத்திற்கு ஒற்றடங் கொடுத்த பிறகு, அதன்மீது அப்பூவை வைத்துக் கட்டின் அது வற்றிவிடும்.

### மோழிவீக்கம்

பிரண்டையை இடித்து, அதில் எருக்கிலைச்சாறு விட்டு வதக்கி, வீக்கத்தின்மீது வைத்துக் கட்டினுல், அது குணமடையும்.

---

# பால ரோகங்கள்

### குடற் கிருமிகள்

ஒருவகையான கிருமிகள் நாக்குளிப்பாம்பைப் போல நான்கு அங்குலமுதல் ஒரு அடிவரையில் நீளமுள்ளனவா யிருக்கும். இன்னெரு வகையான கிருமிகள் நூலைப் போன்றனவாயும், ஏறக்குறைய ஒரு அங்குல நீளமுள் ளனவாயு மிருக்கும். இவ்விருவகைக் கிருமிகளும் மலக் குடலைப் பற்றிக்கொண்டிருக்கும். இக்கிருமிகளை உடைய வர்களுக்கு முகம் வெளுக்கும்; அன்னம் வெறுக்கப் படும்; வயிற்றுப் பொருமலும், வயிற்று வலியும் இடை யிடையே உண்டாகும்; ஓங்காளம் இருக்கும்; நாசி யிலும் அபானத்திலும் அரிப்புக்குணம் உண்டாகும்; நித்திரையில் திடுக்காட்டமும் பல் நறுமுதலும் இருக்கும்; சிலவேளைகளில் கழிச்சல் அல்லது வயிற்றுவலியும் உண் டாகும். இக் கிருமிகள் பெரும்பாலும் சிறுவர்களின் குட லிலும், சிலசமயங்களில் பெரியவர்களின் குடலிலும் இருக் கும். இற்றைக்குச் சிலவருடங்களுக்குமுன்னே, 22 வய துள்ள ஒரு பெண்ணுக்கு ஒரு பிரபல ஆங்கில டக்டர் ஒருவரால் பூச்சிக்கு மருந்து கொடுக்கப்பட்டபொழுது, ஒருசாண் தொடக்கம் ஒரு அடிநீளம் வரையிலுமுள்ள 300 கீரைப்பாம்புகள் வரையில் ஒரேநாளில் வெளிப் பட்டனவாம்.

### முதலாவதாகக் கூறப்பட்ட பெருங்கிருமிகளை வெளிப்படுத்துவதற்குச் சிகிச்சைகள்

1. மாதுளம் வேரைத் தண்ணீரில் அவித்துக் கொடுத்து, மறுநாட்காலே ஆமணக்கெண்ணெய் கொடுப்ப தால் கிருமிகள் வெளிப்படும்.

2. ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணெயோடு பசுவின் பாலைச் சமனாகக் கலந்து, அதில் ஒரு கரண்டி கற்கண்டுத் தூளும் போட்டுக் கொடுத்தால் பேதியாகும். கிருமிகளும் வெளிப்படும். காலையில் சுக்கு மிளகுக் கஷாயம் குடிக்க வேண்டும்.

3. ஈச்சங்குருத்தோடு 6 மிளகு சேர்த்து, மூன்று நேரம் குடிக்கும்படி கொடுத்தால், கிருமிகள் வெளிப்படும்.

4. சரக்கொன்றைக் கொழுந்தை அவித்துப் பிழிந்தெடுக்கப்பட்ட சாற்றில் சர்க்கரை கலந்து அரைக்காற்படி உள்ளுக்குக் கொடுத்தலால், கிருமிகள் திமிர்பூச்சிகள் என்பன நீங்கும்.

5. பூவரசின் வித்துக்களை எருமைச் சாணியில் புதைத்து வைத்து, அடுத்தநாள் காலையில் 2 விரைகளை எடுத்துத் தோல்நீக்கி அரைத்துப் பாலில் கலந்து கொடுக்கில், வயிற்றிலுள்ள பெருங்கிருமிகள் வெளிப்பட்டுவிடும். வயிற்றுவலியும் நீங்கும்.

6. மயிர்க்கொன்றையின் பூவை அரைத்து, ஒரு இலந்தைக்காய்ப் பிரமாணம் உட்கொள்ளச் செய்தல் வேண்டும். இப்படி 3 இரவு கொடுத்துவரின் குடற் கிருமிகள் வெளியாகிவிடும்.

## பெருங்கிருமிகள் சிறுகிருமிகள் என்னும் இருவகைக் கிருமிகளுக்கும் சிகிச்சை

சின்னப்போடியம் (Sinnapodium) என்னும் மருந்தை சாய்ப்பில் வாங்கி வயதுக்குத் தகுந்த பிரமாணம் எடுத்து, 1 அவுன்சு ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்துக் கொடுத்துவிடில், வயிற்றிலுள்ள கிருமிகளெல்லாம் மாண்டு



அன்றுதானே வெளிப்பட்டுவிடும். 'சின்னப்போடிய'மே மேலேகூறிய கிருமிநாசினி மருந்துகளுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இது சன்டினைன் (Santonin) என்னும் பூச்சிமருந்தினும் பார்க்க மிக மேலானதென்றும், குழந்தைகளுக்கு எவ்வித தீங்கையும் விளைவிக்காதென்றும் ஆங்கில டக்டர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

## குடலில் கிருமிகள் உண்டாகாமலிருப்பதற்கு

பராய்ப்பட்டை, மாதுளம்வேர், எலிச்செவியிலை, வல்லாரை என்பனவற்றில் வகைக்கு ஒரு பிடியும், வாயுவிளங்கத்தில் ஒருபிடியுமாக எடுத்துக்கொள்க. இவற்றுள் பட்டை, வேர் ஆகியவற்றை இடித்தும், வாயுவிளங்கத்தை நெரித்துங்கொண்டு, அரைப்படித் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் விட்டு, அதில் மேலே சொல்லிய சரக்குகளைப் போட்டு, கால்படிநீராக வற்றியபின் எடுத்து, சிறுபிள்ளைகளுக்கு ஒரு அவுன்சு வீதமாகவும், பெரிய பிள்ளைகளுக்கு இரண்டு அவுன்சு வீதமாகவும் கற்கண்டுப்பொடி போட்டு நாளொன்றுக்கு 3 நேரமாக 3 நாளைக்குக் குடிக்கக் கொடுக்கின், குடலில் கிருமிகள் உண்டாகமாட்டா. ஆறுமாசத்துக்கொருமுறை இப்படிக் கொடுத்து வருதல் நல்லது.

**குறிப்பு.**—முதல்நாள் 'சின்னப்போடியம்' என்ற பூச்சி மருந்தை ஆமணக்கெண்ணெயில் கொடுத்து, அடுத்த நாள் மேலே சொல்லிய கஷாயத்தைக் குடிக்கக் கொடுத்தல் வேண்டியது.

## குழந்தைகளின் பூச்சிப்பிரட்டு, கிரந்தி, சொறிசிரங்கு முதலியவற்றிற்கு

பிரமி 2 பங்கும், வாயுவிளங்கம் ஒருபங்குமாக எடுத்து இரண்டையும் கணக்கான நீர்விட்டு அவித்த கஷாயத்தில்

சொற்ப சீனி சேர்த்து, வயதுக்குத் தக்க பிரமாணமாக எடுத்துக் காலேயில் கொடுத்துவரின் குணம் வரும்.

**குறிப்பு.**—பூச்சிப்பிரட்டாயின், சிலநாட்கள் தொடர்ச்சியாகக் கஷாயத்தைக் கொடுத்துவர வேண்டியது.

### குழந்தைகளுக்கு வலி கண்டால்

உடனே ஒரு அவுன்சு தண்ணீரில் ஒரு கரண்டி கறியுப்பைப் போட்டுக் கரைத்து, வயதுக்குத் தக்கபடி, 1 முதல் 4 கரண்டிகள் வரையில் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். பின்னர், உப்பை அரைத்து ஒரு துணியில் தடவித் தொப்புளின்மீது போட்டு, 15 நிமிஷநேரஞ் சென்றபின் எடுத்துவிடவேண்டியது. இக் கைமுறை உடன் சாந்தியை மாத்திரம் கொடுக்கும்.

### உண்ணுக்கு வளர்ச்சிக்கு

1. வெள்ளுள்ளி ரசத்தை மெழுகுக்கரண்டியில் விட்டு, உண்ணுக்கில் வைத்துப் பிடிக்கவேண்டும். இப்படி 3 முறை செய்யின் நல்ல குணம் வரும்.

2. குப்பைமேனியிலேயையும், மிளகையும் கசக்கி மூன்றுகாலே உச்சியில் உரஞ்சி, ஒரு மயிரை இழுத்துவிடுக. இவ்வாறு 3 நேரம் செய்யின் குணமுண்டாம்.

3. முசுமுசுக்கை இலேயைக் கசக்கி உச்சியில் தேய்த்துவிட்டு, அந்த இடத்திலிருந்து 2 மயிரை ஒற்றிப் பிடுங்கிவிடுக. இப்படி 3 நேரம் செய்துவரின் இவ்வியாதி குணமடையும்.



### தானப்பூச்சி

1. தானப்பூச்சிகள் மலவாசலேச் சுற்றி அரித்துக் கொண்டிருக்கும். ஒன்று அல்லது இரண்டு முள்முருக்க மிலேயை எடுத்து நன்றாகக் கசக்கிச் சுருட்டி, மலவாசலினுள் வைத்துவிடுக. சிறிதுநேரங் கழித்து, இலேச்சுருளே வெளியே எடுத்துவிடுக. இப்படி 2, 3 தடவை செய்யின், தானப்பூச்சிகள் எல்லாம் வெளிவந்துவிடும்.

2. புளிப்பு மாதுளம் பழத்தை வெறுவயிற்றில் புசிக்கின் தானப்பூச்சிகள் விழும்.

3. ஓடியல் கூழைக் காய்ச்சிக் குடித்தாலும் தானப்பூச்சிகள் வெளிப்படும்.

### கிருமிமார்புரோக லட்சணம்

கிருமிகள் இருதயஸ்தானத்திற்கு மேலே எதிர்த்தேறுவதனுல் மார்பு துடிதுடித்தலுடன், வீக்கம், அதிக நமைச்சல், தெறித்து விழுவதுபோலும் வாளாலறுபடுவதுபோலும் இருத்தல், கண்கள் கறுப்பாகத் தோற்றல், இருளடைதல், கோழைவிழுதல் என்னுமிக் குறிகள் தோன்றும். இந்த ரோகமானது சுவாசம் வரும் மார்க்கத்தை யடைத்து, அகாலமரணத்தையும் உண்டாக்கும். கிருமிகள் அதிக விரைவில் விழும்படி உடனே மருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

### கணச்சூடு தணிவதற்கு

1. ஒரு பிள்ளேக்குக் கணச்சூடு இருக்கிறதென்று கண்டவுடன், அந்தப் பிள்ளேக்குப் பெரும்பாலும் வயிற்

றில் கிருமிகள் இருக்கக்கூடும் என்று எண்ணவேண்டும். இதற்கு 'சின்னப்போடியம்' என்ற மருந்தை வயதுக்குத் தக்கவளவு ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணெயில் விட்டுக் காலையில் குடிக்கக்கொடுத்தால், வயிற்றிலுள்ள கிருமிகள் எல்லாம் வெளியாகிவிடும். குடலில் கிருமிகள் இல்லையாயினும், இம் மருந்தை உபயோகிப்பதனால் ஒருவகையான தீங்கும் நேரிடாதென டக்டர்மார் உறுதி சொல்லுகின்றனர். ஆகவே, கிருமிக்கு மருந்து கொடுத்தபின்னரே, கீழே காணப்படும் மருந்துகளிலொன்றை உபயோகிப்பதனால் குணங் காணும்.

2. இரண்டு படி பசுவின் பாலைக் காய்ச்சி எடுத்து, அதில் அரைப்படி ஓரிதழ்த் தாமரையிலைச் சாற்றை விட்டுக் கலக்கி மூடிவைத்து விடுக. அடுத்தநாட்காலையில் பார்க்கின், அது கட்டியாய் உறைந்திருக்கும். அதில் தண்ணீர் விட்டு, மத்தினால் கடைந்து வெண்ணெயை எடுத்துத் தண்ணீரில் போட்டு வைத்துக்கொண்டு, காலைமாலை கற்கண்டுப் பொடியுஞ் சேர்த்துச் சிறிதுகாலம் உண்ணுமாறு பிள்ளைகளுக்குக் கொடுத்துவரின், கணைச்சூடு தணிந்து தேகம் குளிர்ச்சியடையும். இந்த வெண்ணெயை மாப்பண்டங்களுடன் சேர்த்துக் காலைமாலைகளில் உண்ணக் கொடுத்துவரினும், மேலே கூறிய குணங்கள் உண்டாகும்.

3. ஊர்ப் புழுங்கலரிசிச் சோற்றை வடித்த கஞ்சியை ஒரு புதுச்சட்டியில் விட்டு, அவ்வளவு தண்ணீரும் அதில் சேர்த்து மூடிவைத்துவிடுக. மறுநாட்காலை, அதில் கொஞ்சம் எடுத்துப் பிள்ளையின் தலைக்குத்தப்பித் தண்ணீரில் ஸ்நானஞ் செய்விக்கவேண்டும். உடனே, மிகுதியாய்



இருக்கும் நீரில் குடிக்கக்கூடிய அளவு எடுத்து, அதில் ஒரு மேசைக்கரண்டி நல்லெண்ணெய் விட்டுக் குடிக்குமாறு கொடுக்க. இப்படியாக 40 நாள், அல்லது 20 நாள் கொடுத்துவரின், பிள்ளையின் தேகத்திலுள்ள கணைச்சூடு நீங்கித் தேகம் குளிர்ச்சி யடையும்.

**குறிப்பு.**—இச் சிகிச்சையைக் கிரந்தித் தொய்வுள்ள குழந்தைகளுக்கு உபயோகித்தல் நல்லதன்று.

4. தண்ணீர்விட்டான் சாறு, வெள்ளாட்டுப்பால், பசுப்பால், தேங்காய்ப்பால், பசுநெய் என்பனவற்றில் வகைக்குக் கால்படி வீதமாக எடுத்து, அவற்றுடன் 5 பலம் சீனியும், 5 பலம் கற்கண்டும் சேர்த்து அடுப்பேற்றி எரித்து, மெழுகுபதங்கண்டு இறக்கி, வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு, ஒரு மேசைக் கரண்டியளவு காலைமாலைகளில் உண்ணக் கொடுத்துவரின், பிள்ளையின் கணைச்சூடு எலும்புருக்கி முதலியன நீங்கித் தேகம் கொழுமை பெறும்; அழகும் உண்டாகும்.

## குக்கல் அல்லது கக்குவான்

இது ஆரம்பத்தில் ஜலதோஷம் போலத் தோன்றி, பின்னர் ஒருவித இருமலாய் மாறும். இந்த இருமல் இடையிடையே விட்டு விட்டு வந்து, உபத்திரவப்படுத்தும். இந்த வியாதி 2, 3 வாரம், அல்லது 2, 3 மாதம் வரையிலுமிருந்து உபத்திரவப்படுத்தினும் படுத்தும். மிகுதியான இருமல், பல்லைக் கடித்தல், கபமானது கோழையாகி இளகியும் கெட்டிப்பட்டும் வெளிவருதல் ஆகிய இவைகள் இந்நோயின் குறிகளாம். இக் குறிகளே

யன்றி, 'கொக் கொக்' என்று ஒலித்துக் கோழையுடன் இருமுதலும் உண்டாதல் உண்டு. இவ்வியாதி மழைக் காலத்திலுண்டானால் சீக்கிரம் போகாது. இதற்குப் புங்கங் காய், புலித்தோல் முதலியவற்றைக் குழந்தையின் கழுத்தில் கட்டிவைப்பது பெண்கள் வழக்கம். இதற்குச் சிகிச்சைகள் அனந்தமுண்டு. என்ன செய்தபோதிலும், வியாதியின் முடிவுகாலம் வராமல், இது வசப்படமாட்டாது என்று சொல்லுவார்கள். இதற்குக் கைகண்ட சிகிச்சை முறைகளிற் சிலவற்றை இதன்கீழே எடுத்துக் கூறுவாம்.

1. கால்படி தூதுவளைச் சாற்றையும், கால்படி பசு நெய்யையும் ஒரு மண்சட்டியில் விட்டு, அவற்றின்மீது ஒரு ரூபா எடையான உயர்ந்த கோட்டத்தைப் பொடித்துப் போட்டுக் கலக்கி, அடுப்பிலேற்றிக் காய்ச்சிப் பதத்திலிறக்கி, காலைமாலைகளில் ஒரு தேக்கரண்டி வீதம் கொடுத்துவரின் குக்கலானது நாளுக்குநாள் படிந்துவிடும்.

2. நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், நாயுருவிச்சமூலம், வேலிப்பருத்திச் சமூலம் ஆகியவற்றை வகைக்குக் காற் கழஞ்சு வீதமாக எடுத்து, அவற்றுடன் மூன்று கழஞ்சு கற்கண்டுஞ் சேர்த்து, அரைப்படி நீர்விட்டுக் காய்ச்சி நாலிலொன்றாக வற்றவைத்தெடுத்து, மூன்றுநாள் காலை மாலைகளில் கொடுத்துவரின் நல்ல குணம் உண்டாகும்.

3. குக்கல் வியாதியால் பீடிக்கப்பட்ட குழந்தையின் வயது எத்தனையோ அத்தனை கிறேன் குயினைவை ஒரு அவுன்சு ஜலத்தில் கரைத்து வைத்துக்கொண்டு,



ஒருமணிநேரத்துக் கொருதரம் ஒரு தேக்கரண்டி வீதம் கொடுத்துவந்தால், இவ்வியாதி சாந்தமடையும்.

4. முதலை இறைச்சியைக் காயவைத்து வற்றலாக்கி, ஒரு துண்டை எடுத்து நெய்யில் வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு, அப்பொடியில், ஒரு பேன் பிடியளவு தேனில் குழப்பிக் காலை மாலைகளில் 5 நாள் கொடுத்துவரின் இவ்வியாதி நீங்கும். அவ்வற்றலைச் சென்னையில் 'முதலைக் கண்டம்' எனக் கூறுவர். அங்கே ஔஷதச் சரக்குகள் விற்கப்படுங் கடைகளில் அக் கண்டம் கிடைக்கும்.

## கக்குவானுக்கு நக்குவான்

கக்குவான் அல்லது குக்கல் கண்டால், ஒரு ரூபாவை எடுத்து, 'நக்குவான் செய்வேன்' என்று நேர்ந்துகொண்டு, அதை ஒரு மஞ்சட் துணியில் முடிந்து நோயாளியின் கழுத்தில் கட்டிவிடுக. சில தினங்களில் வருத்தம் சாந்தியடையும். வியாதி சாந்தியானவுடன், ஒருபடி பச்சை அரிசியைப் பசுப்பால் விட்டுப் பொங்கி எடுத்துக்கொள்க. பின்னர், ஒருபடி பாலில் ஒரு இருத்தல் சர்க்கரை போட்டுக் காய்ச்சி எடுத்து, அதில் 4 அல்லது 6 வாழைப்பழங்களையும் சேர்த்துக்கொள்க. சிறு குழந்தைகளை வரவழைத்து இலைபோட்டு, அவர்கட்கு அப் புக்கையைப் பகிர்ந்து கொடுத்து, பாலையும் அவ்விலைகளில் ஊற்றி, அதை நக்கும்படி செய்யவேண்டியது. அப்படிச் செய்யப்பட்டபின், இக்கொடிய நோயானது முற்றாக மாறுவதுடன் திரும்பவும் வரமாட்டாது. இது ஒரு முஸ்லீம் வைத்தியப் பெரியாரின் முறையாகும்.

## பால்குடிக்கும் பிள்ளைகள் உடலில் காணப்படும் அக்கரசுரம்

இதன் குறிகள்: நாக்கும் வாயும் அவிந்திருக்கும்; உதடுகள் வெண்மையாய்க் காணப்படும்.

சிகிச்சை: முசுமுசுக்கை, நற்சீரகம், மல்லி, வேற்கொம்பு ஆகியவற்றைச் சமனாக எடுத்துக்கொள்க. முசுமுசுக்கையைக் கொப்புடன் அவித்து எடுத்து, மற்றைய சரக்குகளுடன் சேர்த்து அரைத்து, அந்த நீரிலே கலக்கி வடிகட்டி எடுத்து, அதை உதடுகளுக்குப் பூசி உள்ளுக்குங் கொடுக்கவேண்டியது. தாய் பத்தியமாய் இருத்தல் வேண்டும்.

## சிறுபிள்ளை மாந்த வாய்வுக்கு

ஈச்சமிலையைத் துவைத்து ஒரு தேக்கரண்டி சாறெடுத்து, கறியுப்புஞ் சேர்த்துக் கொடுப்பதாயின், மாந்தவாய்வு நீங்கும்.

## பிள்ளைத் தோஷங்களுக்குப் போதுச் சிகிச்சை

1. ஆட்டுப் புழுக்கைகளைச் சுட்டு எடுக்கப்பட்ட சாம்பரை இரா அடுப்புத் தண்ணீரில் போட்டு, மறுநாள் அந்த நீரில் பிள்ளையைக் குளிக்க வார்த்தால் எத்தோஷமும் நீங்கும்.

2. சிறுசெருப்படி என்னும் மூலிகையை நீரில் போட்டுச் சூடாக்கி, அந்நீரில் பிள்ளையை முழுக்காட்டினும் தோஷங்கள் நீங்கும்.



3. முடக்கொத்தான் இலையை நல்லெண்ணெயில் போட்டுச் சுடவைத்துத் தலைக்கு வார்த்து வருவதும் நன்று.

## குழந்தைகளின் தேகங்களில் காணப்படும் கரப்பன் வியாதிக்கு

குழந்தைகள் பிறந்தவுடன், அவைகளுள் சில செங்கரப்பன், கருங்கரப்பன் என்னும் வியாதிகளால் பற்றப்பட்டு இருக்கும். கோழிமுட்டையின் வெண்கருவை எடுத்துக் குழந்தையினுடைய தலையிலிருந்து பாதம்வரையில் சரீரம் முழுதும் தேய்த்து, அதற்கு ஸ்நானஞ் செய்விக்க வேண்டும். இவ்வாறு 15 ஸ்நானங்கள் ஆனபின், எண்ணெய் ஸ்நானம் செய்விக்கின், கரப்பன் வகைகள் யாவுந் தீரும்.

## குழந்தைகளின் மந்தம், மலச்சிக்கல் ஆகியவற்றிற்கு

ஒருபிடி பொடுதலை சமூலம் எடுத்து, அதனுடன் ஒரு தேக்கரண்டி ஓமத்தை அரைத்துச் சேர்த்துப் பிசறுதல்வேண்டும். பிறகு, சட்டியைக் காயவைத்து, அதில் பிசறலைக் கொட்டிச் சூடுகாட்டி எடுத்துப் பிழிந்து, குண்டுமணிப் பிரமாணம் பெருங்காயம் சேர்த்து, வயதுக்குத் தக்கபடி ஒரு தேக்கரண்டிமுதலாகக் கொடுத்தால், மலச்சிக்கல் நீங்கும்.

## குழந்தைகளின் வயிற்றுவலிக்கு

கடுகுரோகணியையும் வாயுவிளங்கத்தையும் சமனாக எடுத்து அரைத்து, தொப்புளின்மீது பூசினால் வலி போகும். வசம்பை அரைத்துப் பூசினாலும் வலி நீங்கும்.

### குழந்தைகள் முலை உண்ணாவிடில்

முலைப்பாலில் அதிமதுரத்தை உரைத்துப் பஞ்சில் தோய்த்து, குழந்தையின் நாவில் பிழியவேண்டும்.

### முலையுண்ணும் குழந்தைகளின் வயிற்றுநோய்க்கு

திப்பிலியை வறுத்துப் பொடிசெய்து, தேனில் குழப்பி முலையில் தடவி, பால் கொடுத்தல் வேண்டும்.

### குழந்தைகளுக்கு நீர் இறங்காவிடில்

வெள்ளரி விதையைத் தண்ணீர்விட்டரைத்து, அடி வயிற்றின்மீது பூசின் நீர் இறங்கும். எலிப்புழுக்கை அகப்படுமாயின், அதனையுஞ் சேர்த்துக்கொள்வது நல்லது.

### குழந்தைகளின் உடம்பு பருத்தற்கு

ஆலம் விழுது, தென்னம்பூ, அதிமதுரம், மிளகு சீரகம் ஆகியவற்றை வகைக்கு 3 கழஞ்சு வீதமாக எடுத்து, பசுவின்பால் விட்டு அரைத்து, அதில் கால்படி பசுவின் நெய்விட்டுக் கலக்கிக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, காலையும் மாலையும் ஒவ்வொரு தேக்கரண்டிவீதம் கொடுத்து வரின், குழந்தைகளின் உடம்பு பருக்கும்.

---

# பெண்களுக்கு உண்டாகும் ரோகங்கள்

### சூதகவாய்வு, குத்து, வலி ஆகியவை தீருவதற்கு

1. துத்தியிலை, வெள்ளைப்பூண்டு, மிளகு ஆகிய இவற்றில் ஒரு வகைக்குக் கழஞ்சு 6, வசம்பு கழஞ்சு 1 ஆகிய இவற்றையெல்லாம் சலம்விட்டு அரைத்து 3 பங் காக்கி, மாதாந்த ருதுகாலத்தில் முதல் 3 நாளும் காலையில் ஒவ்வொரு பங்காக உண்டுவரின், சூதகவாய்வினால் விளை யும் வலி நீங்கும்.

2. மாதவிடாய் வந்தபின், மூன்றாம் நாள் முழுகிய வுடனே, 2 அவுன்சு மலைவேம்பின் இலைச்சாறு, 1 தேக் கரண்டி பச்சைமஞ்சள் சாறு, 1 தேக்கரண்டி வேப்பெண் ணெய் ஆகிய இவற்றை ஒன்றுசேர்த்துக் குடித்து விடின், கர்ப்பக்குத்து நீங்கிவிடும். நீங்காவிடின், அடுத்து வரும் இரண்டு மாதவிடாய்க் காலங்களில் இப்படியே குடித்தால் சூதகக்குத்து நீங்கும்.

3. மாதவிடாய் ஆன அன்றும், அடுத்தநாளும் இவ் விரண்டு அவுன்சு குப்பைமேனிச் சாறு குடிக்கின், சூதக வாய்வு தீரும். வயிற்றுவலி இருக்கும்பொழுதே இதைக் குடித்தல்வேண்டும்.

4. வீட்டுக்கு விலக்கான அன்று, உடனே தோய்ந்துவிட்டு, 6 மிளகு, 3 உள்ளிப்பல், ஒரு எருக்கல மொட்டு ஆகிய மூன்றையும் ஒன்றுசேர்த்து அரைத்து

உட்கொள்க. இப்படியே அடுத்த இரண்டுநாளும் உண்ணுதல் வேண்டும். ஆயினும், தோயவேண்டியதில்லை. இக் கைமுறை மருந்தை உண்ணுவதால் சூதகவாய்வு நீங்கும்.

5. ஒரு செவ்விளநீர்க் குரும்பையைச் சுட்டு ஒரு இரவு ஆறவைத்து, மறுநாட்காலை அதை எடுத்து, சர்க்கரையும் எலுமிச்சம்புளியும் சேர்த்து, மாதவிடாய் தொடங்கிய நாள்முதல் சிலநாட்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு குரும்பையின் இளநீர் குடித்துவரின், சூதகக்குத்து நீங்கும். பித்த தேகிகளாய் மெலிவுற்றுள்ளவர்களுக்கே இச் சிகிச்சை முக்கியமானது.

### மாதவிடாய் ஒழுங்காய் வருவதற்கும், கர்ப்ப உற்பத்திக்கும்

1. பேரீச்சம்பழம், மாவிலங்கம்பட்டை, உள்ளி, மிளகு ஆகிய இவற்றைச் சமனாக எடுத்துப் பாலில் அரைத்துக் களுவங்காய்ப் பிரமாணம் உருட்டிக்கொள்க. இதில் ஒரு குளிகைவீதம் பாலில் கரைத்துக் காலை மாலைகளில் குடித்தல் வேண்டும். எப்படியெனின், சூதகம் வருவதற்குப் பத்துநாட்களுக்கு முன்பாகவே தொடங்கிச் சூதகம் வந்து முழுகும்வரையில் இதனை உட்கொண்டு வருதல் வேண்டும். அடுத்தமுறையும் மாதவிடாய் வருவதற்கு முன்னமேயே இப்படிச்செய்துவரின், மாதவிடாய் ஒழுங்குபடும். மருந்து உண்ணும் நாட்களில் பேரீச்சம் பழம் மிகுதியாக உண்டுவரல்வேண்டும்.

2. சிறுகுறிஞ்சாவை இடித்துப் பிழிந்தெடுத்த அரைக்காற்படி சாற்றை, அரைக்காற்படி பசுப்பாலிற்



சேர்த்துக் கலக்கிக் குடிக்கவேண்டியது. எப்படியெனில், மாதவிடாய் வருவதற்கு மூன்றுநாட்களுக்குமுன்னே தொடங்கி மாதவிடாய்க் காலத்திலும், அதன் பின்னும், மூன்று நாட்கள் தொடர்ச்சியாகக் குடிக்க வேண்டியது. இதனால் மாதாந்த உதிரச் சிக்கல் நீங்கும்; சூதகப் பையில் உள்ள புண் மாறும்; கர்ப்பப்பையில் உள்ள மாசு நீங்கும்; உதிரத்திரட்சி கரையும்; கர்ப்பமுண்டாகும்.

3. மாதவிடாயான நாள்முதல் நாலு தினங்கள் வரையில், உத்தாமணிவேரைச் சந்தனக்கல்லின்மீது பசுநெய் விட்டு இழைத்து, அரைரூபாய் எடை உண்டுவரின், கருப்பக்கமலத்தி லிருக்கும் புழுக்கள் மடியும். கர்ப்பமுந் தரிக்கும். இதற்குப் பத்தியம் தயிரன்னமாகும். தயிரன்னம் உண்பதனால் வயிற்றில் இரத்தம் தோய்ந்துவிடுமென்று யோசிக்கவேண்டியதில்லை. இந்த வேர் அக்கினியைப் போன்றது. இந்த அக்கினியைத் தயிரன்னம் சாந்திசெய்து, கருப்பையிலிருக்கின்ற புழுக்களை நாசப்படுத்தி, கருத்தரிக்கச் செய்யும். இதனால் கர்ப்பந் தரிக்காவிட்டால், சந்தானப் பிராப்தம் இல்லையென்றே எண்ணவேண்டியது.

### சூதகக்கட்டு உடைவதற்கு, அல்லது மாதவிடாய் உண்டாவதற்கு

1. அன்னதாழம்பழச்சாறு, கருப்பஞ்சாறு என்னும் இவற்றில் வகைக்கு ஒரு அவுன்சு வீதம் எடுத்து ஒன்று கலந்து, காலை மாலைகளில் 7 நாள் குடித்துவரின், சூதகக்கட்டு உடைந்து கிரமப்படும்.

2. மாவிலங்கப்பட்டை, உள்ளி, மிளகு ஆகிய இம் மூன்று பொருள்களையும் சமனாக எடுத்து அரைத்து, ஒரு கொட்டைப் பாக்களவாக 3 காலை உண்டுவரின், மாத விடாய் உண்டாகும்.

## கர்ப்பஸ்திரீகளின் வயிற்றுப்பிரட்டு நிற்பதற்கு

இந்துப்பு, கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், ஏலம் ஆகியவற்றை சம எடையாக எடுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு, அதில் வெருகடிதூளை ஒரு சிறு கிண்ணம் அளவான மோரில் போட்டுக் கலக்கிக் குடித்துவிடுக. இப்படியாக ஒரு நாளைக்கு மூன்றுமுறை குடித்துவரின், வயிற்றுப்பிரட்டு நிற்கும்.

## கர்ப்பம் உண்டாகாமல் இருப்பதற்கு

ஆவிரை வித்தை இடித்தெடுத்த மாவில் ஒரு சிறங்கை எடுத்து, அதனுடன் கணக்கான பனங்கட்டியும் சேர்த்துக் களியாகக் கிண்டித் தின்னல் வேண்டும். இப்படி நான்கு தினங்கள் தின்றுவரின், ஒரு வருஷ காலம் வரை கர்ப்பந் தரியாதென்பது வைத்திய நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

## கர்ப்ப ஸ்திரீகளுக்கு விக்கல் கண்டால் சிகிச்சை

திப்பலி, கடுக்காய் ஆகியவற்றைச் சமனாக எடுத்துப் பொடித்து, அதில் சிறிது இஞ்சிச்சாறு விட்டுப் பசுப்பாலில் கலந்து கொடுப்பின், விக்கல் நின்றுவிடும்.



## பருவமடைந்தும், ருதுவடையாத பிள்ளைக்கு ருதுவை யுண்டாக்குவதற்கு

ஒரு பிள்ளைக்கற்றாழை மடலின் தோலைச் சீவி நறுக்கி, 7 முறை நீரில் கழுவி எடுத்து, அதனுடன் கடுக்காய்த் தூள், கற்கண்டுப்பொடி, நற்சீரகத்தூள் ஆகியவற்றில் ஒருவகைக்கு வெருகடிப் பிரமாணமாகக் கூட்டிக்கொண்டு, அதில் பேன்பிடி யளவான சிங்கிபற்பமுஞ் சேர்த்துக் கலக்கி, காலை தோறும் 20 நாள் குடித்துவரின் ருது உண்டாகும்.

## பிள்ளை பெற்ற தாய்மார்களின் பால் சுரப்பதற்கு

1. கீழ்க்காய் நெல்லிச் சமூலம் கொண்டுவந்து அலம்பி அரைத்து, ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்து, கால்படிப் பசுவின்பாலில் கரைத்து வடித்துக் குடித்தல் வேண்டும். இப்படி மூன்று காலை குடிக்கின், காய்ச்சல் வரும். அதன்பின், பால் சுரக்கும்.

**குறிப்பு.**—பிள்ளை பெற்று ஒருமாதஞ் சென்ற பின்புதான், மேலே சொல்லிய மூலிகையை உபயோகிக்க வேண்டியது.

2. சித்தாமணக்கிலையை நெருப்பில் வாட்டி, ஸ்தனங்களின்மேல் வைத்துக் கட்டிக்கொண்டு வந்தாலும் பால் சுரக்கும்.

3. ஓரிதழ்த் தாமரையை ஒரு எலுமிச்சங்கா யளவு அரைத்து, அரைக்கால்படி பசுமோரில் 40 நாள் இரண்டு வேளைகளிலும் குடிக்கில், தனத்தில் பாலில்லாதவர்களுக்குப் பால் சுரக்கும்.

4. தாமரைக் கொட்டையின் பருப்பைப் பசுப்பால் விட்டரைத்துப் புன்னைக்காயளவு எடுத்து, அதில் அரைக் கால்படிப் பசுப்பால் விட்டுக் கரைத்து, கணக்கான கற்கண்டும் சேர்த்து, காலையில் குடிக்கவேண்டும். இப்படி 10 நாள் காலை நேரங்களில் குடிக்கின், பாலில்லாத பெண்களுக்குப் பால் சுரக்கும்.

## ஸ்தனத்தில் பால் வற்றுவதற்கு

1. மல்லிகைப் பூவை மார்பில் இடைவிடாது 3 நாள் கட்டிக்கொண்டு வரின், ஸ்தனத்திலுள்ள பால் வற்றும்.

2. புற்றுமண்ணைச் சாராயம் விட்டரைத்துத் தனங்களின்மேல் பூசினும், பால் வற்றும்.

## ஸ்திரீகளுடைய மர்மஸ்தானங்களில் உண்டாகும் எரிவந்தம், நமட்டுச்சிரங்கு முதலானவைகளுக்கு

இளஞ் சூடுள்ள சுண்ணும்பு நீரால் உபத்திரவமுள்ள இடத்தை நாள்தோறும் 3, 4 முறை அலம்பிவரின், குணமுண்டாகும்.

## ஸ்திரீகளின் மர்மஸ்தான விரணங்களுக்கு

மாசிக்காய் கஷாயத்தினுல் விரணங்களைக் கழுவுக.

**குறிப்பு.**—கஷாயம் செய்யும் முறை: 9 கழஞ்சு மாசிக்காய்ப் பொடியை அரைப்போத்தல் வெந்நீரில் போட்டு, குளிர்ந்தவுடன், வடிகட்டி எடுத்துக்கொள்ளல் வேண்டும்.



## முலைக்காம்பில் ரணம், முலையில் வெடிப்பு என்பவைகளுக்கு

ஆமணக் கெண்ணெயில் பஞ்சை நனைத்து ஸ்தனங்களின்மேல் போட்டுவரின், விரணம் வெடிப்பு என்பவை மாறும்.

## ஸ்தனத்தில் மேகப்புண், வீக்கம், துர்நீர்வடிதல் என்பவைகளுக்கு

வேப்பெண்ணெயைக் கொதிக்க வைத்து இறக்கி, அதில் நரம்பு நீக்கப்பட்ட விராலி இலையைப் போட்டு வதக்கி எடுத்து, வீக்கத்தின்மேல் வைத்துக் கட்டல்வேண்டும். 15 தினம் வரையில் இப்படிக் கட்டி வந்தால், பூரண சுகம் காணப்படும்.

## ஸ்தனத்தில் சிதல் கொண்ட கட்டுக்கு

1. தாமரைக் கிழங்கையும், அதன் கீழிருக்கும் சேற்றையும் ஒரு ஈயப் பாத்திரத்தில் எடுத்து, காற்றுப் படாமல் மூடிக்கொண்டுவந்து, உடனே, இரண்டையும் நன்ருக அரைத்து, வீக்கத்தின் அடியிலிருந்து முகை வரையில் சுற்றிச் சுற்றி மெதுவாகப் பூசிவிடின், உடனே கட்டு உடையும். முகையை விட்டுப் பூசுக.

2. அம்மிச்சுற்றை, அதாவது, அம்மியின் பக்கங்களைப் பிடித்திருக்கும் களிம்பை நீர் தெளித்து நனைத்து வழித்து, அம்மியிலேயே வைத்து நன்ருக அரைத்து, முகையை விட்டு, வீக்கத்தின்மேல் தடிப்பாகப் பூசிவிடின், கட்டு உடையும்.

3. மான்செவிக் கள்ளியினது இலையை ஆமணக்கெண்ணெய் தடவி, தணலில் வாட்டி, கட்டின்மீது வைத்துக் கட்டினாலும் அது உடையும்.

### பெண்களுக்கு உண்டாகும் பெரும்பாடு என்னும் நோய் தீருவதற்கு

1. தாழம்விழுதின் குருத்தை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து, ஒரு மேசைக்கரண்டி நல்லெண்ணெயிற் கலந்து கொடுக்கின், பெரும்பாடு நிற்கும். நில்லாவிடில், பின்னும் இரண்டொருமுறை கொடுத்தல் வேண்டும்.

2. மருதம்பட்டை, முந்திரிவற்றல் ஆகிய இவையிரண்டையும் வகைக்குக் கழஞ்சு 12 வீதமாக எடுத்து, 4 படி தண்ணீரில் விட்டு அவித்து, எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி எடுத்த கஷாயத்தில் மூன்று நேரம் 2 அவுன்சு வீதமாகக் குடித்துவரின், பெரும்பாடு தீரும்.

3. அத்திப் பட்டையை மோர்விட்டு இடித்துப் பிழிந்த இரசத்தில் 2 அவுன்சு வீதம் 3 முறை குடிப்பதாலும், பெரும்பாடு தீரும்.

4. கோழிமுட்டையின் வெள்ளைக்கரு, வெங்காயச்சாறு, நல்லெண்ணெய், எலுமிச்சம்புளி, பசுநெய் ஆகிய இவைகளைச் சமனாக எடுத்து நன்றாகக் கலந்து, 3 காலை குடிக்கின், சூதக ஓட்டம் நிற்கும்.

5. தேங்காய்ப்பால், பச்சை அரிசி, முசுட்டையிலை என்னும் இவற்றைச் சேர்த்து, உப்பு நீக்கி, கஞ்சி



காய்ச்சிக் குடிப்பதும், இரும்பைச் சிவக்கக்காய்ச்சி மோரில் தோய்த்து, அந்த மோரைச் சோற்றுடன் சேர்த்து உண்பதும், தாகந்தணியக் குடிப்பதும் நல்லதே.

6. பொடித்த சுக்கு 6 கழஞ்சு, குப்பைமேனிச்சாறு 1 அவுன்சு, நல்லெண்ணெய் 1 தேக்கரண்டி, வெல்லம் $\frac{1}{8}$ இருத்தல் ஆகிய இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து, அடுப்பேற்றிக் காய்ச்சி இலேகிய பதத்தி லிறக்கிவைத்துக் கொண்டு, காய்ப்பாக்குப் பிரமாணம் 3 நாள் காலை மாலைகளில் உண்டு வருவதாலும் சூதகப் பெருக்குக் கட்டுப்படும்.

7. இரதவாழைக்கிழங்கின் அரைப்படி சாற்றை ஒரு பானையில் விட்டு, அப்பானையின் வாயை வண்டு கட்டி, அதன்மேல் ஒரு சிறங்கை அத்திக்காயை வைத்து மூடி அவித்தெடுத்துக் கொள்க. அதன் பின்பு, அரைப்படி ஆட்டுப்பாலிலே மேற்புறணி நீக்கப்பட்ட ஒரு பிடி அத்திப் பட்டையைப் போட்டு அவித்து, கஷாயத்தை இறுத்தெடுத்துக் கொள்ளுக. அவற்றின் பிறகு, காற்படிப் பச்சை அரிசிமாவுடன் அரைச்சிறங்கை நறுவிலிப்பழத்தின் இரசம் சேர்த்து, அவற்றுடன் முன்னரே அவித்து வைத்திருக்கும் அத்திக்காயையும், அத்திப்பட்டைக் கஷாயத்தையும் ஒருங்கே சேர்த்துக் குழைத்துப் பிட்டவித்து இறக்கி, நல்லெண்ணெய் விட்டு, மூன்று காலைப் பொழுதுகளில் உண்டுவரின், சூதக உதிரப் பெருக்கானது நீங்கும். அந்த மூன்று நாளும் பத்தியத்துடன் இருக்க வேண்டும்.

8. அத்திக்கொழுந்து ஒருபிடி, கருவேலம் பிஞ்சு ஒரு சிறங்கை, தேன் ஒரு மேசைக்கரண்டி, தாமரைவளையச் சாறு ஒரு மேசைக்கரண்டி, வாழைப்பூச்சாறு ஒரு மேசைக்கரண்டி ஆகிய இவற்றுள் அத்திக்கொழுந்தையும் கருவேலம் பிஞ்சையும் விழுதுவிட அரைத்து, மற்றுள்ள சாறுகளையும் தேனையுங் கூட்டிக் கரைத்து, மூன்றுநாள் காலைப்பொழுதில் குடித்துவரின், பெரும்பாடு நீங்கிவிடும்.

9. அரைக்கால்படி நாவற்பட்டைச்சாறு, $4\frac{1}{2}$ கழஞ்சு சந்தனம் ஆகிய இவற்றை அரைக்கால்படி புளித்த எருமைமோரில் சேர்த்துக் கலக்கிக் குடிக்கினும், பெரும்பாடு தீரும். பத்தியமில்லை.

# பிரசவ வைத்தியம்

## நோக்காடு கிளம்பவும், பிள்ளை பிறக்கவும்

1. கொடிக்கள்ளிவேரை இரண்டு கால்களின் பக்கங்களிலும், இரண்டு விலாக்களின் பக்கங்களிலும் வைத்துவிடின், நோக்காடு எழும்பும்.

2. மாவிலங்கை மரத்தில் உண்டாகும் குருவிச்சைக் கொடியைப் பிள்ளைத்தாய்ச்சியின் இடுப்பில் கட்டிவிடின், பிள்ளைபிறக்கும். இக்கொடியைப் பறிக்கப்போகின்றவர் முழுகிவிட்டு ஆசாரத்துடன் போகக்கடவர்.

## வயிற்றுப்பிள்ளையும், நஞ்சுக்கொடியும் வெளியே வருவதற்கு

சீதுளாய் (நாய்த்துளசி), மணித்தக்காளி, தாமரைவளையம் என்னும் இவற்றைச் சமனாக எடுத்து அரைத்து, புன்னைக்காய்ப் பிரமாணம் வெந்நீரிற் கலந்து கொடுப்பின், பிள்ளையுங் கொடியும் வெளியே வரும்.

## வயிற்றில் பிள்ளை உயிருடன் இருக்கின்றதா அல்லது மரித்துவிட்டதா என்று அறிவதற்குச் சோதனை

பசுவெண்ணெயைத் திரட்டித் தொப்புளின்மீது வைத்தல்வேண்டும். அது உருகிவிடின் பிள்ளை மரிக்கவில்லையென்றும், உருகாவிடின் பிள்ளை மரித்துவிட்டதென்றும் அறிக.

## மரித்தபிள்ளை வெளிப்படுவதற்கு

தூதுளங்காய்ப் பிரமாணம் சோமனுதிப் பெருங்காயம், மாம்பட்டை ஆகிய இரண்டையும் முருங்கையிலைச் சாறு விட்டரைத்துக் கொடுக்கின், மரித்தபிள்ளை வெளியில் வரும்.

## மரித்தபிள்ளையும், நஞ்சுக்கொடியும் வெளியே வருவதற்கு

1. 20 நாவற்கொட்டையை எடுத்துச் சிறுநீரில் அரைத்துக் கரைத்து உச்சியிலும், உள்ளங்காலிலும் பூசுக. அவைகளை 2, 3 நிமிஷங்களுள் வெந்நீரால் கழுவிவிட்டு, உடனே பச்சை இஞ்சியை அரைத்துப் பாக்களவு எடுத்துத் தேனிற் குழைத்துக் கொடுக்கவேண்டும். அதனால் 5 நாழிகைக்குள் மரித்தபிள்ளையும், நஞ்சுக்கொடியும் வெளியே வந்துவிடும்.

2. பூவரசங்கண்ணிப் பிஞ்சு 2, மிளகு கழஞ்சு 1 ஆகிய இரண்டையும் அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுப்பின், மரித்தபிள்ளையும் நஞ்சும் வெளிவரும்.

3. மாவிலங்கைவேர், பூனைக்கழற்சிப் பருப்பு, உள்ளி ஆகியவற்றைச் சம எடையாக எடுத்து அரைத்து, ஒரு சிறுபாக்களவு வெந்நீரில் கொடுக்கின், மரித்தபிள்ளையும் நஞ்சும் வெளிவரும்.

## நஞ்சுக்கொடி விழுவதற்கு

அத்தியிலைச்சாறு வீசம்படியும், கறியுப்பு ஒரு தேக்கரண்டியளவுங் கலந்து கொடுத்தால், நஞ்சுக்கொடி விழும்.



**குறிப்பு.**—பிள்ளை பிறந்த 5 நிமிஷ நேரத்துக்குள் நஞ்சுக்கொடி விழாது வயிற்றில் தங்கிவிடுமாயின், உடனே தாமரை வளையத்தை அரைத்துச் சிறுபாக்குப் பிரமாணம் எடுத்து, முலைப்பாலில் கரைத்துக் கொடுத்தால், நஞ்சுக்கொடியின் விஷம் ஏறாது. அக்கொடி சுருங்கி 8 நாள் வரையில் உள்ளேயே இருக்கும். இருக்கினும், தாய்க்குத் தீங்கில்லை என்ப.

## வயிற்றில் பிள்ளை குறுக்கே கிடந்தால், அல்லது செத்துப்போனால், அது வெளிப்படுவதற்கு

ஒரு சிறங்கை நாக்குளிப் பூச்சிகளைக் கொண்டுவந்து, மோரில் போட்டு நன்றாக அலம்பி எடுத்து, அம்மியில் அரைத்துக்கொண்டு, காய்ச்சப்பட்டு ஆறிய பசுப்பாலில் அவ் அரையலைக் கரைத்துக் கொடுப்பின், 30 நிமிஷத்துக்குள் பிள்ளை வெளியே வரும்.

## வயிற்று நோக்காடு கிளம்பியபின், பன்னீர்க்குடமுடைந்தும் பிள்ளையைப் பிரசவிக்கக் கஷ்டப்பட்டால் சிகிச்சை

சுக்கு, வசம்பு, கடுகு, உள்ளி என்ற சரக்குகளில் ஒவ்வொரு வகையில் 2 கழஞ்சு எடுத்துச் சேர்த்து, வெந்நீர் விட்டரைத்துக் கொள்க. ஒரு பழத்தேங்காயைத் துருவிய பூ, ஒரு பிடிக் குருந்தளிர் ஆகிய இவற்றை ஒன்றுசேர்த்து இடித்துப் பிழிந்த சாற்றில், முன்னரே அரைத்து வைத்திருக்குங் கூட்டைப் போட்டுக் கரைத்து, சீலையில் 5 முறை வடிகட்டி எடுத்த ரசத்தில் 3 அவுன்சு கொடுத்தால், ஒரு மணி நேரத்தில் பிள்ளை பிறப்பது நிச்சயம்.

# இரண வைத்தியம்

### வேட்டுக் காயங்கள்

1. ஒதியம்பட்டையைக் கொண்டுவந்து சாறு பிழிந்து காயத்தில் விட்டு, சக்கையையும் வைத்துக் கட்டிவிடுக. இதில் அடிக்கடி தண்ணீர் விட்டுவந்தால் காயம் விரைவில் ஆறிவிடும்.

2. சீதேவியார் செங்கழுநீர் என்னும் பச்சை மூலிகையின் சாற்றைக் காயத்தில் பிழிந்துவிட்டு, அதன் சக்கையையும் வைத்துக் கட்டிவிடினும் காயம் மாறும்.

**குறிப்பு.**—காயம் மாறும் வரையில் ஒவ்வொருநாளும் இப்படிச் செய்துவரவேண்டும். இந்தச் சிகிச்சையில் தண்ணீர் படப்படாது.

3. வாழைக்குலேயிலிருந்து அதன் பூவை முறிக்கையில், அதிலிருந்து ஒழுகும் பாலே எடுத்துக் காயத்தின் மேல் ஒரு மாட்டுத்தாள் கனம் உண்டாகும் வரையில் பூசிவிடின், சிறிது நேரத்துக்குள் அப்பாலானது காய்ந்து காயத்தை இறுக்கமாகப் பற்றிக்கொள்ளும். அதனுல், தண்ணீர் அழுக்கு முதலியன காயத்தினுள் பிரவேசிக்க மாட்டா. புண் ஆறியவுடன், அப் பால்பற்றுனது தானே கழன்று விழுந்துவிடும்.

4. காயத்தின்மீது பலாக்காய்ப்பாலேத் தடவி, அதன் மேல் நல்லெண்ணெயையும் பூசி அழுத்திவிடின், தழும்பில்லாது காயம் மாறிவிடும்.



5. கோடகசாலே என்னும் பூண்டைக் கொண்டுவந்து தண்ணீர் விட்டு அரைத்து, காயத்தின்மீது கட்டுவதனுலும் நல்ல குணம் வரும்.

6. சிதம்பரத்தம் பூவையும் அதன் இலேயையும் அரைத்து, காயத்தில் வைத்துக் கட்டிவரினும் காயம் மாறும்.

7. கோப்பித்தூளைக் காயத்தின்மீது அப்பிவிட்டாலும், அல்லது நல்லெண்ணெய்ச் சீலேயைச் சுற்றிவிட்டாலும் காயமானது காய்ந்துவிடும். சிறு காயங்களே இவை இலகுவில் மாற்றிவிடும்.

### வேட்டுக்காயத்தில் உதிரப்போக்கு நிற்பதற்கு

வெட்டுக் காயத்திலிருந்து அதிகமாக இரத்தம் ஓடிக்கொண்டிருந்தால், உடனே காயமுள்ள இடத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு அங்குலத்துக்கு மேலே ஒரு துணியினுல் இறுகக் கட்டிவிட்டு, பின்னர், மாசிக்காய்களேச் சுட்டு, அவற்றின் சாம்பரைக் காயத்தின்மீது தளமாக வைத்து அழுத்தின், உதிரப்பெருக்கு நிற்கும்.

### நகத்தில் காயம்பட்டு அது கிழிந்தால்

எலுமிச்சங் காயைச் சுட்டு 2, 3 முறை கட்டிய பின்னர், மருதோன்றியிலேயை அரைத்துக் கட்டுக.

### நோவுகள்

1. விராலியிலேயும், காண்டையிலேயும் சமனுக எடுத்து அரைத்து நோவுள்ள பாகத்தில் பூசிவரின், நல்ல குணங்காணும்.

2. கர்ப்பூரம், மஞ்சள்பொடி ஆகியவற்றை ஒவ்வொரு கழஞ்சு வீதமாக எடுத்து ஒரு மேசைக் கரண்டி அளவு நல்லெண்ணெயில் போட்டுக் கொதிப்பித்து எடுத்து, எண்ணெயை நோவுள்ள இடத்தில் பூசி, கடுகை அதன்மீது வைத்துக் கட்டிவிடின், நோவு குணமடைவதுடன், காயமிருந்தால் அதுவும் மாறிவிடும்.

3. கண்டத்தின் மேற்பட்ட நோவுகளுக்கு இளங்கன்றினது சாணிக்குச் சூடுகாட்டி, அதனால் ஒற்றடங் கொடுத்தால் சுகங் காணும்.

4. தயிர்க்கட்டி பலம் 1, கற்சுண்ணும்பு பலம் $\frac{1}{4}$, நாட்டுச் சவுக்காரம் பலம் $\frac{1}{4}$ ஆகவும், கோழிமுட்டையின் வெள்ளைக்கரு, அதன் மஞ்சள்கரு ஆகியவற்றைச் சமபங்காகவும் எடுத்து நன்றாக அரைத்து, நோவுள்ள பாகத்தில் வீக்கத்தின்மேல் பூசிவரவேண்டும். இரத்தங் கட்டிய வீக்கமாயிருந்தாலும், இரத்தங் கரைந்து, வீக்கமும் வற்றிவிடும்.

4. அரை அவுன்சு நல்லெண்ணெயை ஒரு சட்டியில் விட்டு, அதில் வெருகடிப் பிரமாணமுள்ள மஞ்சள் பொடியையும் போட்டுக் கொதிப்பிக்கவேண்டும். எண்ணெயில் சூடேறியபின், கறியுப்பை அரைத்துப் பொட்டணமாகக் கட்டிக் கொதிக்கும் எண்ணெயில் போடுக. பொட்டணத்தில் சூடேறியவுடன், அதை எடுத்துத் தாங்கக்கூடிய சூட்டுடனே நோவுள்ள பாகத்தில் ஒற்றடங் கொடுக்கவேண்டும். இப்படி நாளொன்றுக்கு மூன்று முறையாக நோ மாறும்வரையில், ஒற்றடங் கொடுத்துவரவேண்டியது.



5. அரிசிமா, உழுந்தின்மா என்பனவற்றைச் சமபங்காகவும், மஞ்சள்மா என்பதை அரிசிமாவின் நாலிலொன்றாகவும் எடுத்து, அவற்றுடன் ஒரு கோழிமுட்டையின் வெள்ளைக்கருவுஞ் சேர்த்து அடுப்பேற்றி, அவற்றில் கணக்கான தேங்காய்ப்பால் விட்டுக் களியாகக் கிண்டியபின், அதில் கொஞ்சம் தேங்காயெண்ணெயுங் கூட்டி, பின்னும் கிண்டி எடுத்து, ஒரு துணியில் வைத்துப் பொட்டணமாக்கி ஒற்றடங் கொடுத்தல்வேண்டும். காயமில்லாத நோவுகளுக்கு இது விசேட பலனைத் தரும்.

6. ஊர்ப் பச்சை அரிசிக் குறுணல் $\frac{1}{8}$ படி, மஞ்சள்மா 1 தேக்கரண்டி, உழுந்தின்மா 1 மேசைக்கரண்டி, தூத்துமக்கொத்தானை இடித்த தூள் 3 வெருகடிப் பிரமாணம், 2 தேங்காயின் சொட்டுப்பால் ஆகிய இவற்றையெல்லாம் ஒரு இரும்புச் சட்டியிலிட்டு, தீ மூட்டி ஒரு இரும்புக் கரண்டியால் கைவிடாமல் கிண்டி, அலுவாப் பதமாய் வரும்பொழுது, $\frac{1}{2}$ போத்தல் சாராயம் விட்டு மேலுங் கிண்டியபின், அப்புக்கையின்மீது மிதக்கும் எண்ணெயை எடுத்துக்கொண்டு, அப்புக்கையை நோவுள்ள இடத்தில் வைத்துக் கட்டிவிடுக. இப்படி 3, 4 தடவைகள் கட்டியபின், முன் எடுத்து வைத்திருக்கும் எண்ணெயை நோவின்மீது பூசிவரின், அது குணப்படும்.

**குறிப்பு.**—கடுமையான நோவுகளுக்கே இம்முறையை உபயோகிக்கவேண்டியது.

## பழக்காத பருக்கள் அமருவதற்த

1. இஞ்சியைத் தட்டிப் பிழிந்து, சாற்றை ஒரு ஏனத்தில் வைக்கின், சிறிது நேரத்திற்குள் அதன் அடி

யில் ஒருவகையான சுண்ணும்பு தங்கும். அந்தச் சுண்ணும்பை எடுத்துத் தேனில் குழப்பி, பருக்கள்மீது பூசின், அவை வற்றிவிடும்.

2. கவிள்தும்பை, அவுரி, குப்பைமேனி ஆகியவற்றின் இலைகளை அரைத்து வீக்கத்தின்மீது பூசினும், அது அமரும்.

3. பெருங்காயத்தைத் தண்ணீரில் உரைத்துக் கட்டிகள்மீது பூசினும், அவை கரையும்.

4. சதைகரைத்தான் இலையில் ஆமணக்கெண்ணெய் தடவி, அதை நெருப்பில் வாட்டிப் பருவில் போடினும், அது அமரும்.

5. மண்சுவரில் எச்சிலை உமிழ்ந்து, அதன்மீது ஈர வெங்காயத்தை உரைப்பதால் அதனின்றும் ஒருவகையான பசை உண்டாகும். அதை வழித்துப் பருவின்மீது பூசினும், அது அமுங்கிவிடும்.

6. கடற்சில்லின் பருப்பைத் தண்ணீரிலுரைத்து, வீக்கத்தின்மீது பூசின், அது அமரும்.

7. முள்முருக்கம் வித்தையும், குப்பைமேனி இலையையும் தண்ணீர் விட்டரைத்துப் பருக்கள்மீது பூசின், அவை கரையும்.

8. பூமத்தையிலையினது சாற்றில் காரீயத்தை உரைத்து, கட்டியின்மீது பூசினும், அது அமரும்.



9. கரியபோளத்தைக் கோழிமுட்டையின் வெள்ளைக்கருவிட் டரைத்து, வீக்கத்தின்மேல் பூசின், அது அமுங்கும்.

10. மஞ்சளைச் சுட்டெடுத்த சாம்பரில் ஊமத்தையிலைச்சாறு விட்டுக் குழப்பி, கட்டிகள்மீது பூசினும், அவை கரையும்.

11. ஒரு துண்டு புகையிலையை வின்னரியில் தோய்த்து, கட்டியின்மீது வைத்துக் கட்டினும், அது அமரும்.

## நோய்தான இடத்தில் நீர் சம்பந்தமான வீக்கம் அமருவதற்கு

கருங்கல், தென் ஈர்க்கில், வாழைத்தண்டு ஆகியவற்றைச் சுட்டு, அவற்றின் சாம்பரை வேப்பெண்ணெயில் குழைத்து, வீக்கமுள்ள பாகத்தில் பூசின், அது வற்றும்.

## குத்துவலியோடு எழும்பும் அத்திவாரமான வீக்கம் அமருவதற்கு

1. பூமத்தையிலையில் ஆமணக்கெண்ணெய் தடவி நெருப்பில் வாட்டி, வீக்கத்தில் வைத்துக் கட்டுக. வீக்கம் வற்றும்வரையில், ஆறுமணிக்கொரு தடவை புதுப்புது இலையை வாட்டிக் கட்டல்வேண்டும். வீக்கம் வற்றியவுடன், பேதிமருந்து உட்கொள்ளுவது அவசியமாகும்.

2. மாவிலங்கை இலைகளை வீக்கத்தின்மேல் வைத்துக் கட்டின், சிறிது நேரத்தில் எரிவு உண்டாகும். அப்

பொழுது, இலைகளை அகற்றிவிட்டு, ஒருமணி நேரங் கழித்து, திரும்பவும் புது இலைகளை வைத்துக் கட்டுக. இப்படி வீக்கம் வற்றும்வரையில் செய்து, பேதிமருந்து உட்கொள்ளவேண்டியது.

3. உத்தாமணியிலை, பூமத்தமிலை, வெள்ளறுகு, மாவிலங்கமிலை, பிரண்டைக்கொழுந்து, கற்றாழஞ்சோறு, புளியந்துளிர், காட்டாமணக்குத்துளிர், வேப்பந்துளிர் ஆகிய இவைகளை ஒரு கணக்காக எடுத்து, புளியமிலைச் சாறு விட்டவித்துக் கடைந்து, கட்டிகளுக்குப் பூசில், அவை சீக்கிரத்தில் உடையும். வீக்கங்களுக்குப் பூசின், அவை விரைவில் வற்றும்.

4. சந்தனமும் அபினும் சேர்த்து நன்றாக அரைத்து வீக்கத்தின்மேல் பூசி, அரைமணி நேரத்தின்பின், புழுங்கலரிசித் தவிடும் பூவரசந்துளிரும் சேர்த்து வறுத்து, வீக்கத்துக்கு ஒற்றடங் கொடுக்கின், அது சீக்கிரத்தில் குணமடையும்.

## பருக்கள் உடைவதற்கு

1. ஈரவெங்காயத்தைச் சுட்டு அரைத்து, பருவில் முகப்பு விட்டுப் பூசின், அது உடையும்.

2. வேப்பங்கொழுந்தை நல்லெண்ணெயில் வதக்கி, உடையாத பருவின்மேல் வைத்துக் கட்டின், அது உடையும்.

3. உள்ளியை அரைத்து, வீக்கத்தைச் சுற்றிப் பூசி, ஈரவெங்காயத்தைச் சுட்டரைத்து முகப்பில் வைக்கின், பரு உடையும்.



## கட்டிகள் பழுப்பதற்கு

1. குருவிச்சம்பூ, வட்டத் துத்தியிலை, மாதுளங் கொழுந்து ஆகியவற்றைத் தேங்காய்ப்பால் விட்டு அவித்துக் கடைந்து, கட்டிகள்மீது வைத்துக் கட்டிவரின், அவை பழுத்து முகம் வைக்கும்.

2. இரதவாழைத் தண்டை நெருப்புத்தணலில் சுட்டு அரைத்து, ஆமணக்கெண்ணெயில் குழைத்து, கட்டிகள்மீது பூசின், அவை பழுக்கும்.

3. ஆட்டுப்புழுக்கைகளை ஓட்டிலிட்டு வறுத்துச் சாம்பாராக்கி எடுத்து, ஆமணக்கெண்ணெயில் குழப்பி, கட்டிகள்மீது பூசினும், அவை பழுக்கும்.

## கட்டிகள் பழுத்து உடைவதற்கு

1. கையாந்தகரையிலையைச் சிற்றாமணக்கிலைக்குள் வைத்துக் கட்டி, சுடுசாம்பரில் வேகவைத்தெடுத்து, அக் கையாந்தகரையிலையை ஆமணக்கெண்ணெய் விட்டுப் பிசைந்து, வீக்கத்தில் வைத்துக் கட்டின், அது பழுத்து உடையும்.

2. மாதுளை, வெள்ளறுகு, காட்டாமணக்கு என்பனவற்றின் துளிர், ஈரவெங்காயம் ஆகியவற்றை ஒரு கணக்காக எடுத்து, தேங்காய்ப்பால் விட்டு அவித்து, கட்டிகள்மீது வைத்துக் கட்டிவிடின், அவை பழுத்து உடையும்.

3. பிரமியிலை, சிறுபசளியிலை, நாயுருவியிலை ஆகிய இவைகளுள் ஏதாயினும் ஒன்றை எண்ணெய் விட்டு

வதக்கி அரைத்து, கட்டியின்மீது பூசினும், அது பழுத்து உடையும்.

4. தங்க அலரிக்காயின் அடிக்காம்பை ஒடிப்பதனால் வரும் பாலை எடுத்து, வீக்கத்தைச் சுற்றி முகப்பு விட்டுப் பூசின், கட்டி திரண்டு, 12 மணி நேரத்திற்குள் உடைந்துவிடும்.

5. நத்தைச்சூரியிலையை அரைத்துக் கட்டிகளின் மேல் பூசின், அக்கட்டிகள், கல்லுப்போன்ற வைரமுடையனவா யிருப்பினும், பழுத்து உடையும்.

## திரட்சிகள், கட்டிகள் உடைவதற்கு

1. துத்தியிலையும் சோறும் அரைத்துக் கட்டியின் மீது பூசின், அது உடையும்.

2. பழம்பாசி என்னும் மூலியை நன்றாக அரைத்து, கட்டியின்மீது முகப்பு விட்டுப் பூசி, முனையில் ஒரு சீலைத் துண்டைப் போட்டு, அதில் தண்ணீர் விட்டுக்கொண்டு வரின், ஒருமணி நேரத்தில் கட்டி உடையும்.

3. கோழிமுட்டையின் கோதை அரைத்து எலுமிச்சம்பழ ரசத்தில் குழைத்துக் கட்டிகள்மீது பூசின், அவை உடையும்.

4. மாதுளந்துளிரைத் தேங்காய்ப்பாலில் அவித்துக் கடைந்து, அதனுடன் உப்புச் சவர்க்காரத்தையுஞ் சேர்த்துப் பிசைந்து, கட்டிகள்மீது பூசினால், அவை உடையும். அப்பூச்சானது களிம்புகளையும் நீக்கும்.



5. கருங்கறையான் மண்ணை எடுத்து முலைப்பால் விட்டரைத்து, கட்டிகள்மீது பூசினும், அவை உடையும்.

6. மாட்டுப்பல், தென்னம் ஈர்க்கு ஆகிய இரண்டையும் சுட்டெடுத்த சாம்பரை வேப்பெண்ணெயிற் குழைத்து, கட்டிகளின்மீது பூசின், அவை உடையும்.

7. காட்டாமணக்கந்துளிர், பூமத்தந்துளிர், மாதுளந்துளிர், குருவிச்சந்துளிர், வெள்ளறுகு ஆகியவற்றைச் சமனாக எடுத்துத் தேங்காய்ப்பால் விட்டவித்துக் கடைந்து, கட்டிகளிற் பூசின், அவை உடையும். இத்துளிர்களுள் ஒன்றையேனும் தேங்காய்ப்பாலில் அவித்தரைத்து, கட்டிகளின்மீது வைத்துக் கட்டினும், கட்டிகள் உடையும்.

## எலும்பிலிருந்து உற்பத்தியாகிவரும் கட்டிகள் உடைவதற்கு

1. சவர்க்காரமும், புறுவின் மலமும் சேர்த்தரைத்துக் கட்டிகளின்மீது பூசிவரின், அவை உடையும். கட்டிகள் உடைந்தபின், அவைகளில் உள்ள சிதலை அறவே வெளிப்படுத்தும்பொருட்டுக் கொதிக்கின்ற வெந்நீரில் விசுக்கோத்தைப் போட்டு, அது ஊறியபின், துணியில் வடித்துப் பிழிந்துகொண்டு, குப்பைமேனியிலையை அரைத்து, அதில் நெல்லிக்காய்ப் பிரமாணம் எடுத்து அதனுடன் சேர்த்துப் பிசைந்து, கட்டியின்மேல் பூசி, அதனை வெள்ளைத் துணியால் சுற்றிக் கட்டிவிடுக. 12 மணி நேரம் சென்றபின்பு அக்கட்டை அவிழ்த்துப் பார்க்கின், புண் சுத்தமாயிருக்கும். அதன்பின், குளநத்தை ஒன்றைக் கொண்டுவந்து, ஒரு கம்பியில் கோத்துத் தேங்கா

வெண்ணெய் விளக்கில் பிடிக்கின், தைலம் இறங்கும். ஒரு பாத்திரத்தை ஏந்தி அத்தைலத்தை எடுத்து வைத்துக்கொண்டு, புண்ணில் பூசி, பூவரசின் பழுப்பிலையால் மூடிச் சீலையால் கட்டிவரின், எவ்வகையான புண்ணாயினும் ஆறிவிடும்.

2. ஆட்டுப் புழுக்கையைச் சுட்டெடுத்த கரியைச் சொற்ப சதுரக்கள்ளிப் பாலிற் குழைத்து, பின்பு 3 சொட்டு வேப்பெண்ணெயுஞ் சேர்த்துக் குழைத்து வைத்துக்கொண்டு, அதை ஓர் ஈர்க்கினால் தொட்டுக் கத்தி வைக்கும் அடையாளம்போற் கட்டியின்மீது பூசி, கால் மணியின்பின்,விசுக்கோத்தைக் கள்ளில் நனைத்து வைத்துக் கட்டின், அது உடையும்.

3. ஒரு கழஞ்சு கற்பூரம், ஒரு கழஞ்சு சாம்பிராணி, நாலு கழஞ்சு படிகாரம் ஆகிய இவைகளை ஒரு மணி நேரம் நன்றாக அரைக்கின், அவை ஒருவித பாணியாகும். அத்துடன் சொற்ப விசுக்கோத்தையுஞ் சேர்த்து அரைத்துத் துணியில் வைத்து, எவ்விதமான கட்டியின் மேற் கட்டினும், அது உடையும்.

## புண்களைக் கழுவும் நீர் வகைகள்

ஓதியம்பட்டைக் கஷாயம், கருவேலம்பட்டைக் கஷாயம், புளியமிலைக் கஷாயம் ஆகிய இவற்றுள் ஒன்றை வடிகட்டி, இளஞ்சூட்டுடன் காலைமாலைகளில் புண்களைக் கழுவிவரின், சீழ் நீங்கும்!; இரணமும் சீக்கிரம் ஆறும்.

எவ்வளவுக்குச் சுத்தமாகப் புண்களைக் கழுவுகின்றோமோ அவ்வளவுக்குப் புண்கள் ஆறிவிடும். அவை



களின் மேல் கட்டுந் துணியும் வெள்ளையாயும் சுத்தமாயும் இருத்தல்வேண்டும்.

ஆறாத புண்ணை வேப்பிலைக் கஷாயத்தால் கழுவி, அதற்குத் தக்க களிம்பு போட்டுவரின், அது சீக்கிரம் ஆறும்.

புரை ஓடினால் புங்கம்பாலைப் புண்ணில் தடவி, வைக்கோலின் குழாயால் ஊதுக. இவ்விதம் 4 நாள் வரையில் ஊதிவரின், புரை மாறும்.

## புண் எரிவுக்கு நீர்ச்சீலை

மஞ்சள், வசம்பு என்னும் இவற்றைச் சுட்டெடுத்த கரியும், ரசம், நீலம், கெந்தகம் ஆகிய இவைகளுள் ஒவ்வொன்றிலும் அரைக்கழஞ்சும் எடுத்து, கள்ளு வார்த்தரைத்து சீசாவில் வைத்துக்கொண்டு, சீலையில் ஏற்றி, எரியும் புண்ணின்மீது போடின், எரிவு மாறும்.

## கட்டிகள் உடைந்தபின், ஆணிச்சிதல் வெளிப்படுவதற்கு

உள்ளியைத் தேங்காய்ப்பால் விட்டவித்துக் கடைந்து, புண்கள்மீது வைத்துக் கட்டினால், சீழ்ப்பிடித்த புண்ணின் அடி முளை அழுகி வெளிவரும்.

## பருக்கள் உடைந்தபின் செய்யவேண்டிய சிகிச்சை

முற்றின கத்தரிக்காய் ஒன்றைச் சுட்டுப் புண்ணில் கட்டிவிடுக. இப்படி நாள் ஒன்றில் 2 முறையாக 3 நாள் கட்டியபின்பு, இரும்புருக்கியிலையின் சாற்றை எடுத்து

ஒரு துணியில் பூசிப் புண்ணின்மேல் போட்டு வைக்க வேண்டும். புண் மாறும் வரையில் ஒருநாளைக் கொரு தரமாகப் போட்டுவருக.

### புண்களின் சவ்வு கரைவதற்கு

1. முற்றின முள்முருக்கம் பட்டையை எடுத்து மேற்புரணி போக்கி இடித்து, புண்கள்மீது வைத்துக் கட்டின், அவைகளை மூடிய தோல் தேய்ந்து கரைந்து விடும்.

2. இலைக்கள்ளியின் இலையை வாட்டிப் புண்ணின் மேல் போடினும், அது புண்ணின் சவ்வை எடுத்துவிடும்.

### சவ்வு கரைந்து, புண்கள் ஆறுவதற்கு

1. பழம்புளி, சுண்ணும்பு, மஞ்சள் ஆகியவற்றைக் கலுவத்திலிட்டு நன்ருக அரைத்து, புண்கள்மீது வைத்துக் கட்டின், சவ்வு கரைதலே யன்றிப் புண்ணும் சுத்த மாகும். இப்படிச் சில நாட்கள் தொடர்ந்து செய்யின், நல்ல குணங்கள் காணும்.

2. கற்பூரம், சாம்பிராணி ஆகிய இரண்டையும் நன்ருக அரைத்துப் புண்ணில் போட்டுவரில், சவ்வு கரையும்; புண்ணும் ஆறும்.

### புண்களின் விளிம்பு கரைவதற்கு

1. மாச்சீனியையும், பூவரசம் பழுப்பையும் அரைத்துப் புண்களின்மீது வைத்துக் கட்டினுல், விளிம்புகள் கரைந்துவிடும்.



2. மஞ்சளை வேப்பெண்ணெயில் உரைத்துப் பூசினும், விளிம்புகள் கரைந்துவிடும்.

### புண்கள் ஆறுவதற்கு

1. தாழம்பூவைச் சுட்டெடுத்த சாம்பரைப் புண்ணில் தூவிவரின், அது ஆறிவிடும்.

2. நாய்வேளையை அரைத்து, எவ்வகைப் புண்ணின்மீதும் வைத்துக் கட்டலாம். அதனுல் மிகுந்த குணம் காணப்படும்.

3. சிதம்பரத்தையின் இலையையும் பூவையும் அரைத்து, புண்கள்மீது போட்டுவரினும், அவை குணமடையும்.

4. மருதோன்றியிலையை அரைத்துப் புண்கள்மீது போட்டுவரினும், அவை குணமடையும்.

5. ஒதியம்பட்டையை நன்ருகப் பொடிசெய்து வேப்பெண்ணெயில் குழப்பி, புண்களில் போட்டுவரின் ஆருத புண்ணும் ஆறிப்போய்விடும்.

6. பழம்பாசியையும் மஞ்சளையும் அரைத்து, புண்ணில் வைத்துக் கட்டினும், அது ஆறும்.

7. மஞ்சளையும், பழந்துணியையும் சுட்டெடுத்த சாம்பரைப் புண்களில் தூவிவரினும், அல்லது அச் சாம்பரை வெண்ணெயிற் குழைத்துப் பூசிவரினும், அவை ஆறிவிடும்.

8. பொட்டுப் பூச்சியின் கூட்டில் காணப்படும் வெண்மையாகிய பொட்டை எடுத்து, உமிழ் நீரில் நனைத்து, சுத்தஞ் செய்யப்பட்ட புண்ணில் ஒட்டிவிடின், அப் புண் காய்ந்த பின்னர், பொட்டானது விழுந்துவிடும். இதைச் சிலந்திக் கட்டுகளுக்கும் உபயோகிக்கலாம்.

9. பழஞ்சோற்றைத் தயிரில் குழைத்துக் கட்டிவரின், நாள்பட்ட புண்ணும் மாறும்.

### புண் ஆறுவதற்கு எண்ணெய்

கிரந்திநாயகன் வேர், ஆடுதின்னுப்பாளை வேர், குண்டுமணிவேர், மருதந்துளிர், பிள்ளைக்கற்றாழம் வேர் என்னும் இவைகளைத் தேங்காயெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி, புண்ணில் போட்டுவரின், அது நாளடைவில் குணம்பெறும்.

### கோதிவலியோடு கூடிய கட்டின் வீக்கம் வற்றுவதற்கு

1. தேங்காய்ப்பூ, மஞ்சள், பனங்கட்டி ஆகியவற்றை ஒரு கணக்காகச் சேர்த்து வதக்கிக் கட்டின், வீக்கம் வற்றும்; கொதிவலி நீங்கும்.

2. விளாங்காயையும் தேங்காய்ப்பூவையும் வதக்கிக் கட்டினும், வீக்கம் வற்றும்.

### சிலந்திக்கட்டு

இந்தக்கட்டானது நரம்பிலிருந்து உண்டாகின்றது. இதனால் குத்துவலி கடுமையாகி யிருக்கும். காய்ச்சலும் சில சமயங்களில் உண்டாகும். கீழே காணப்படும் சிகிச்சை



களுள் ஒன்றை இதற்குச் செய்துவரின், இது நிவிர்த்தியாகும்.

1. நீர்முள்ளிவிதையைத் தண்ணீரில் ஊறப்போட்டு எடுத்துப் பிசைந்து, கட்டின்மீது வைத்துக் கட்டிவரின், அது உடைந்துவிடும்.

2. முடிதும்பையிலையை வேப்பெண்ணெயில் வதக்கிக் கட்டினும், சிலந்திக்கட்டு ஆறும்.

3. வாழைப்பழத்தையும் பெருங்காயத்தையும் மத்தித்து இந்தக் கட்டின் மீது வைத்துக் கட்டினும், இது அகலும்.

### மூலத்தில், அதாவது, மலவாசலின் பக்கங்களில் உண்டாகுங் கட்டிகள் அமருவதற்கு

1. காரமுள்ள ஒரு புகையிலைத் துண்டைக் கொதி நீரில் போட்டு அவித்தெடுத்து, கட்டிகள் மீது வைத்துக் கட்டுக. இப்படிச் சில தினங்கள் செய்துவரின், அக்கட்டிகள் கரைந்து விடும்.

2. வட்டத்துத்தியிலையையும் வேப்பம் பருப்பையும் ஒன்று சேர்த்தரைத்து, ஒருசதப் பிரமாணமான உரொட்டிகள் தட்டி, ஒரு ஓட்டில் வைத்துச் சூடுகாட்டி எடுத்துவைத்துக்கொண்டு, நாளொன்றுக்கு ஒவ்வொரு உரொட்டியாக எடுத்து, அதில் வெண்ணெய் பூசிக் கட்டிகள் மீது வைத்துக் கட்டுக. இப்படி 7 நாள் கட்டிவரின், அக்கட்டிகள் கரைந்துவிடும். அந்த 7 நாளும் மோர் மிகுதியாகக் குடித்தல் வேண்டும்.

## துஷ்ட இரணங்கள் உலருவதற்கு

எலுமிச்சங்காய்ச் சுளைகளை ஓட்டிலிட்டு வறுத்து, துஷ்ட விரணங்களின்மேல் வைத்துக் கட்டிவரின், அவற்றி லுள்ள துஷ்டங்களை நீக்கி, சீக்கிரத்தில் அவற்றை உலரச்செய்யும்.

## மேக இரணங்கள் மாறுவதற்கு

1. தான்றிக்காயை இழைத்துப் பூசிவரின், குணங் காணும்.

2. குப்பைமேனி இலையை அரைத்துத் தடவி னும், குணமுண்டாகும்.

3. அழிஞ்சில் பட்டையை இடித்தெடுத்த தூளை விரணங்களின் மேல் தூவிவரினும், அவை மாறும்.

## கிருமி இரணங்கள் ஆறுவதற்கு

1. வேப்பம் பருப்பை அரைத்துக் கிருமி இர ணங்கள் மீது வைத்துக் கட்டின், அது கிருமிகளை வெளிப்படுத்தி, இரணங்களையும் ஆற்றும்.

2. முருக்கமிலைச்சாறு, கர்ப்பூரம் ஆகிய இவற் றைத் தேங்காயெண்ணெயில் காய்ச்சி, இரணங்களின் மேல் பூசினும், கிருமிகள் வெளிப்படும்.

## மூக்குப்புண் மாறுவதற்கு

கரியபோளத்தையும், சுரைக்காய் வித்தின் பருப் பையும் ஒத்த எடையாக எடுத்து, முலைப்பாலில் அரைத்து



மூக்கில் வரும் புண்ணுக்குப் பூசிவரின், அப்புண் மாறுத லடையும்.

## அறுபட்ட நரம்பு கூடுவதற்கு

நிலவேர் என்று சொல்லப்படும் நாக்குளிப்பூச்சி களைக் கொண்டுவந்து அரைத்து, அறுபட்ட நரம்பின் மீது பூசிவரின், அது மற்ற நரம்புகளுடன் சேர்ந்து சுக மடையும். பூச்சுக்குமேல் பூச்சாக அடுத்தடுத்துப் பூசுதல் வேண்டும்.

## முலைக்காம்பு வெடிப்புக்கு

சீனக்காரத் தூளை அதன்மீது தூவிவரின், குணம் வரும்.

## பித்த வெடிப்பு

எப்பொழுதும் நடப்பதனாலும், தேகத்தில் சூடு அதிகரிப்பதனாலும் பாதத்திலுள்ள சிலேட்டுமமானது குறைவடைந்தபின், பித்தமானது அதிகரிக்கும். அக்கார ணங்களினால் உள்ளங்கால், குதிக்கால் முதலிய இடங் களில் கீறு கீறாக வெடிப்புக்கள் உண்டாகும். அவ் வெடிப்புக்களின் வழியாக இரத்தம் கசியும். நடப்பது கஷ்டமாயிருக்கும்.

## சிகிச்சைகள்

1. ஆலம்பாலை, அல்லது இலுப்பெண்ணெயைப் பித்தவெடிப்புகளுக்குப் பூசுவது நாட்டு வழக்கம்.

2. சிப்பிச் சுண்ணாம்பு பலம் 1, வெள்ளைக் குங் கிலியத்தூள் பலம் 1, நெல்லி வற்றல் சூரணம் பலம் 2, ஆமணக்கெண்ணெய் பலம் 1, பசுநெய் பலம் 1 ஆகிய

இவற்றுள் சுண்ணாம்பையும் சூரணங்களையும் கலுவத்தில் இட்டு, நெய்யையும் ஆமணக்கெண்ணெயையும் ஒன்றுசேர்த்து அக்கலவையில் வேண்டுமளவும் விட்டு, மெழுகுபதம் ஆகும்வரை அரைத்து வைத்துக்கொண்டு, இரவில் படுக்கைக்குப் போகுமுன், கால் வெடிப்புக்களில் பூசிக்கொள்ள வேண்டியது. இவ்விதம் சில இரவுகளில் செய்துகொண்டு வரின், பித்த வெடிப்பாலுண்டாய உபத்திரவம் ஒருவாறு தணியும். இந்த நோயை முற்றிலும் மாற்றிவிடுவது நன்றாகாதென்பது எமது கருத்து.

## கை கால் வெடிப்புக்கள்

மேகம், அல்லது கிரந்திநீர் காரணமாக உள்ளங்கைகளிலும், உள்ளங் கால்களிலும் வெடிப்புக்கள் உண்டாவதால் அவைகளிலிருந்து நீர் பாய்ந்துகொண்டிருக்கும். அவைகளுக்கு மான்கொம்பு பஸ்பத்தைப் பசுநெய்யில் குழப்பிப் பூசிவரின், அவற்றின்மீதுள்ள இரணங்கள் நீங்குவனவாகும்.

## செருப்பு அழுத்துதலால் உண்டாகும் புண்ணிற்கு

செருப்புத்தோலைச் சுட்டெடுத்த சாம்பரை, அல்லது புகையிலைக்காம்பைச் சுட்டெடுத்த சாம்பரைத் தேங்காயெண்ணெயில் குழைத்து அப்புண்ணின்மேல் பூசிவரின், அது ஆறிப்போகும்.

## சன்னிக்கட்டு அமருவதற்கு

வீக்கம் கண்டவுடனே, மாம்பிஞ்சை அரைத்து நீரில் கரைத்துச் சுடவைத்து, வீக்கத்தின் மீது பூசின், அது உடனே வற்றும்.



## சன்னிக்கட்டு உடைவதற்கு

வீக்கமானது திரண்டுவிட்டால், மாமரத்தில் பிடித்திருக்கும் குருவிச்சம்பூவை அரைத்துப் பூசினும், அல்லது கரணைப்பாவட்டையிலையைக் கழுநீர்க்காடியில் அரைத்துப் பூசினும், கட்டியானது உடையும்; அல்லது அமருவதாகும்.

## அரையாப்பும், தோடைவாழைக் கட்டிகளும் அமருவதற்கு

1. முடக்கொற்றான் இலை, சுண்ணாம்பு, வெல்லம் ஆகியவற்றை எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து, இருவகையான கட்டிகளின் மீதும் பூசின், அவைகளின் வீக்கம் அமர்ந்துவிடும்.

2. மான்செவிக்கள்ளியிலையை நெருப்பில் வாட்டி, அதில் வேப்பெண்ணெய் பூசி, அக்கட்டிகளின் மீது வைத்து மூன்று நேரங் கட்டிவரினும், வீக்கம் அமர்ந்துவிடும்.

3. தயிர்வேளையை அரைத்து, வீக்கமானது இடது பக்கத் துடையிலிருந்தால் வலது பக்கக் கமுக்கட்டிலும், வலது பக்கத் துடையிலிருந்தால் இடதுபக்கக் கமுக்கட்டிலும் பூசின், வீக்கம் வற்றும்.

4. நீர்மேல்நெருப்பு என்னும் மூலிகையை அரைத்து, கட்டியின் மீது வைத்துக் கட்டின், அது கரையும்.

குறிப்பு.— வீக்கம் வற்றியவுடன் பேதிமருந்து புசிப்பது மிகவும் முக்கியமென் றறிக.

### பவுத்திரக் கட்டுகள்

1. முடிதும்பையிலையை வேப்பெண்ணெயில் வதக்கிக் கட்டின், பவுத்திரக்கட்டுகளும் சிலந்திக்கட்டுகளும் குணமடையும்.

2. குப்பைமேனியிலை, ஆவிரையிலை, மிளகு, மஞ்சள் ஆகிய இவற்றை இடித்துக் கட்டின், பவுத்திரம் மாறும். அது உரங்கொண்டு வீங்கினால், மாவிலங்கையிலையை அரைத்து, நல்லெண்ணெயிற் குழப்பிக் கட்டுக.

3. ஒடியற்கீறு, மஞ்சள், உள்ளி, கடுக்காய், கழற்சிப்பருப்பு ஆகியவற்றையெல்லாம் ஒத்த அளவினவாக எடுத்து இடித்த அம்மருந்தை, கட்டியின் அளவுக்கேற்ப வட்டமாகத் தட்டி, அதன்மீது போட்டு, ஒரு முருக்கமிலையால் மூடிக்கட்டினால், வீக்கம் வற்றும்.

### கண்டமாலை

இதன் வரலாறு: மேகநீரானது, நரம்புகளின் வழியாகச் சென்று, உதிரத்தைக் கெடுத்து, கட்டிபோல் திரண்டு இரணமாகி, கண்டத்தைச் சுற்றி அரித்து வெடிக்கச் செய்து, இரணத்தில் புரையோடுதலையும் உண்டாக்கும்.

### சிகிச்சை

1. வல்லாரையை நிழலில் உலர்த்தி எடுத்துச் சூரணஞ் செய்து பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டு, இரு வேளையிலும் வெருகடி அளவு பாலில் சேர்த்து உட்



கொண்டுவரின், மேற்கூறிய வியாதி குணமடையும். அச்சூரணத்தில் சிறிது இரணத்தின் மேல் தூவி வருதலும் நன்றே. வசம்பை எலுமிச்சம்புளியில் இழைத்து இரணத்தின் மீது பூசிவரின், மேல் இரணம் ஆறிவிடும்.

2. ஆனைலத்தியைச் சுட்டு எடுத்த சாம்பரில் நீர் விட்டுக் காய்ச்சி இறுத்துக் குடித்து வரினும், இவ்வியாதி குணமடையும். இன்னும், ஆனைலத்தியை நோயாளியின் முன் போட்டுப் புகைத்து, அந்தப் புகையைச் சுவாசிக்கச் செய்தலும் நல்லது.

3. வல்லாரைப் பச்சையாக அரைத்துப் புண்களின் மீது வைத்துக் கட்டி வருவதாலும், மேக ஊறல் நீங்கும்; புண்கள் குணமடையும். அன்றியும், வல்லாரைப் பச்சையாகக் காலையில் புசித்து வருவதும், அதைப் பாகஞ்செய்து சோற்றுடன் நாள்தோறும் உண்டுவருவதும் மிக்க நன்மையைத் தரும்.

**குறிப்பு.**—இம்முறைகள் இவ் வியாதிக்கு உபசாந்தியளிப்பவைகளே யொழிய, பூரண சுகத்தை அளிக்க மாட்டா. இதற்குத் தக்க வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்வித்துக் கொள்ளுதல் சாலச் சிறந்தது என்று அறிக.

### நகச்சுற்று

1. குமிழம் பழத்தைச் சுட்டு நகத்தில் வைத்துக் கட்டிவரின், நகச்சுற்று மாறும். சீழ் வெளிப்பட்ட பின்பு, அம்மான்பச்சரிசிப் பாலைத் தடவிவரின், நகக்கண்ணிலுள்ள புண் ஆறிவிடும்.

2. நகச்சுற்று இலை (காட்டு வெங்காய இலை) யை அனலில் வாட்டி நகத்தைச் சுற்றிக் கட்டிவிடினும், இந்நோய் மாறும்.

3. எலுமிச்சம் பழத்தை வேதனையுள்ள நகத்தின் மீது மூடிவைக்கின், குத்து, வலி என்பன நீங்கும்.

4. பிஞ்சுக் கத்தரிக்காயைச் சுட்டு நகத்தில் வைத்துக் கட்டுக. இப்படி 2 நாள் செய்துவரின், நகச்சுற்று மாறும்.

## நீர்ச்சிரங்கு

1. நீர்ச்சிரங்கு என்பது ஆரம்பத்தில் கால்விரல்களின் இறைகளில் அரிப்பை யுண்டாக்கும். காலையில், நித்திரை விட்டெழுந்தவுடன், அரிப்புள்ள காலில் சுடச் சுடச் சிறுநீரைப் பெய்து விடுக. சிறிது நேரஞ் சென்றபின், காலை அலம்பிவிட வேண்டியது. இப்படி மூன்று காலை செய்துவரின், இச்சிரங்கு மாறிவிடும்.

2. மருதோன்றி இலையை அரைத்து, நீரில் குழப்பி ஓட்டில் விட்டுச் சூடுகாட்டி இறக்கி, எலுமிச்சம் பழரசம் விட்டுக் கரைத்து, காலின்கண் சிரங்குள்ள பாகங்களில் நன்றாகப் பூசிக்கொண்டு படுக்கைக்குப் போய்விடுக. தேவையென்று கண்டால், மேலும் ஒரு முறை இப்படிச் செய்துவிடின், பூரண சுகமுண்டாகும்.

## கூகைக்கட்டு

இந்த நோயானது காய்ச்சல் வந்தபின்னர், ஆரம்பத்தில் காதடியில் வீக்கமாய்த் தோன்றி, கீழ்நோக்கிப்



படிப்படியாகப் பரவும். ஒருபக்கத்தில் வீங்கி, பின்னர், மற்றப்பக்கத்திலும் தாவும். இது தொற்று நோய்களிலொன்று. இதற்குப் பெண்கள் அணியும் ஆபரணங்களில் ஒன்றை நோயாளி தனது கழுத்தில் அணிந்துகொள்வது நம்நாட்டு வழக்கம். இதனால் இந்தநோய் "பொன்னுக்கு வீங்கி" என்று சொல்லப்படும். இந்நோயுற்றார் உண்ணும் உணவு குளிர்ச்சியானதாய் இருத்தல் வேண்டும். காரமான உணவு ஒன்றும் சேர்க்கலாகாது. சுடுசோற்றில் வெங்காயத்தை நறுக்கிப்போட்டு, சிறிதுநேரஞ் சென்றவுடன், தண்ணீரை ஊற்றிப் பிசைந்து, சிறுக உப்புச் சேர்த்து, அச்சோற்றையும் நீரையும் உட்கொள்ளலாகும்.

## கழுத்து வீக்கம் அல்லது கட்டு

தயிர்வேளை இலையைக் குறுணலாக நறுக்கி, வீக்கத்தில் வைத்துக் கட்டின், அது வற்றிப்போகும்:

## கமக்கட்டில் வரும் விஷப்பரு

1. தயிர்வேளையும் சுண்ணாம்புஞ் சேர்த்தரைத்து, வட்டமாகத் தட்டிக் கமுக்கட்டில் வைத்துக் கையினால் பிடித்தல் வேண்டும். எரிவைத் தாங்கமுடியாதபொழுது, அதை எடுத்துவிடவேண்டியது. மீளவும், இப்படி இரண்டு முறை செய்துவிடின், விஷப்பருவின் வீக்கம் வற்றிவிடும்.

2. ஒரு புகையிலையைச் சுருட்டி, வீக்கமுள்ள கமுக்கட்டில் வைத்துக்கொண்டு, நான்கு தெருக்கள் ஒன்றாகச் சந்திக்கின்ற இடத்துக்குச் சென்று, அப்புகையிலையை அந்த இடத்தில் மெல்ல நழுவவிட்டு வந்துவிடின்,

கமுக்கட்டில் உண்டாகிய விஷப்பரு அடங்கிவிடும் எனச் சிலர் சொல்வர்.

3. வலது கமுக்கட்டில் வீக்கங் கண்டால், இடது துடையில் நெறி தோன்றும். அந்த நெறியில் தயிர் வேளையை அரைத்துப் பூசுக. அதிக எரிவு உண்டானால், அதைத் துடைத்துவிட்டுத் தேங்காயெண்ணெய் பூசிவிடுக. இடது கமுக்கட்டில் வீக்கங்கண்டால் வலதுபக்கத் துடையில் நெறிகாணும். அதற்கும் தயிர்வேளைச் சாற்றையே பூசின், பரு அடங்கும்.

4. வெள்ளை நிறமுடைய நத்தை ஒன்றைக் கொண்டு வந்து, அதன் ஓட்டை நீக்கிவிட்டு, உள்ளிருக்கும் சதையை எடுத்து அரைத்து, வீக்கத்தில் வைத்துக் கட்டிவிடுக. இப்படி 3 வேளை செய்யின், பருவானது உடைந்துவிடும். உடையாது அமர்ந்து விட்டால், ஒரு பேதி மருந்து உட்கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு.**—மேற்சொல்லப்பட்ட நத்தையானது பெரும் பாலும் வடலிகளின் மட்டைகளுக்குள்ளும், ஆல மரங்களின் அடிகளிலும் காணப்படும்.

## சிறுபிள்ளைகளுக்கு வரும் கிரந்திக்கட்டு

நன்னாரிவேர், நாயுருவிவேர், எலுமிச்சம் இலை ஆகிய வற்றைச் சமனாக எடுத்து நன்றாக அரைத்து, கட்டின்மேல் 3 நேரம் பூசிவரின், அது உடைந்துவிடும்.

## தலைப்புற்றுக்கு

நிலக்கடம்பின் இலையைப் பசுப்பாலில் அரைத்து, சில தினங்கள் தலையில் அப்பிக் கட்டிக்கொண்டு வந்தால், தலையிலுள்ள கிருமிகள் யாவும் வெளிப்பட்டு நசிந்து விடும். புண்ணும் ஆறிவிடும்.



## தலைச்சோடுகு, சிரங்கு என்பனவற்றிற்கு

தேள்கொடுக்கிலையை அரைத்து நல்லெண்ணெயில் கலந்து சூரியபுடம் வைத்து எடுத்துக்கொண்டு, அதைத் தலைக்குத் தடவி ஊறவிட்டு முழுகின், தலையிலுண்டாகும் சொடுகு, சிரங்கு என்பன மாறிவிடும்.

## வியர்வையால் உண்டாகும் சிறுபருக்களுக்கு

1. அரைப்படி நீரில் 4 ரூபா எடை வெங்காரத்தைக் கரைத்து, உடம்பில் பூசிக்கொண்டு வந்தால், வேர்க்குரு மாறிவிடும்.

2. பனை நுங்கின் நீரைத் தேகத்தில் பூசிவரினும், வேர்க்குரு மாறிவிடும்.

3. சந்தனத்தை, இரவில் படுக்கைக்குப் போகு முன், உடம்பில் பூசி, உலர்ந்தபின், படுத்து நித்திரை செய்யின், வேர்க்குருவோடு வெயர்வை நாற்றம், தேக அழற்சி முதலாயினவும் நீங்கும்.

## வேர்க்குருக் கட்டிக்கு

1. அபின், புனுகு என்னும் இவற்றிலொன்றைக் கட்டியின் மேல் பூசினால், அக்கட்டியானது அமர்ந்துவிடும்.

2. சங்கினை முலைப்பால் விட்டுரைத்துப் பூசினும், கட்டி அமரும்.

### தொப்புள் புண்ணுக்கு

1. சீனக்காரத்தைத் தூளாக்கிப் புண்ணில் போட்டு வரின், குணம் வரும்.

2. மாசிக்காயைச் சுட்டெடுத்த சாம்பரை உபயோகித்தாலும், புண் மாறும்.

### நெருப்புச்சூடு, கொதிநீர், கொதியெண்ணெய் ஆகிய இவற்றல் உண்டாகும் இரணங்களுக்கு

1. வாழை மட்டையைத் துவைத்துப் பிழிந்து, அதன் சாற்றை இரணத்தின் மீது விட்டு, சக்கையையும் வைத்துக் கட்டிவிடின், இரணமானது கொப்புளங் கொள்ளாது ஆறிவிடும்.

2. கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை இரணத்தின் மேல் பூசுவதாலும், அது ஆறிவிடும்.

3. தேங்காய்ப்பூவை இரணத்தின்மீது வைத்துக் கட்டினும், நல்லகுண முண்டாகும். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை புதுப்பூவினை வைத்துக் கட்டிவரின், அதிக பலனுண்டாகும்.

### நெருப்புச் சூட்டினுல் வேந்த பகுதிகள் புண்ணுகி விட்டால்

1. ஆவரசமிலைச் சாற்றையும், தேங்காய்ப்பாலையும் சமனெடையாகக் கலந்து காய்ச்சிப் புண்ணில் தடவிவரின், அப்புண் சீக்கிரத்தில் ஆறிவிடும்.



2. பச்சையான குதிரைலத்தி ஒருபிடி, கெந்தகம் ஐந்து கழஞ்சு, தேங்காயெண்ணெய் கால்படி ஆகிய இவற்றை ஒன்று சேர்த்துக் காய்ச்சி, கடுகு மிதந்துவரும் பதத்தில், இறக்கி வைத்துக்கொண்டு, ஒரு இறகால் தொட்டுப் புண்ணுள்ள இடத்தில் பூசிவரின், அப்புண் நாளடைவில் குணமடையும்.

### கடுநெருப்பில் வேந்தவருக்கு வயிற்றெரிவு, கண்ணெரிவு, வயிற்றுக்கடுப்பு ஆகிய இக்குணங்கள் தோன்றினுல்

இரதவாழைக் கிழங்கைக் குத்திப் பள்ளஞ் செய்து, அதில் கொஞ்சம் ஈரவெங்காயம் அரிந்து போட்டு மூடிவிடுக. அதில் ஊறிய சாற்றை அடுத்த நாள் காலையில் எடுத்து வடிகட்டிக் குடிப்பதற்குக் கொடுக்கவேண்டியது. எரிவு முதலியன மாறும்வரையில் இப்படிச் செய்துவரின், அவை நீங்கும்.

### படை, தேமல், மேகஊறல் முதலியவைகளுக்கு

1. பொன்னுவிரை வேரை அரைத்து, அதனுடன் சந்தனம் கலந்து, படைகள்மீது பூசிவரின், படைகள் உதிர்ந்து மறைந்துபோகும்.

2. தேமலுள்ள இடத்தை நன்ருகச் சொறிந்துவிட்டு, ஒரு வெற்றிலையும், 6 மிளகும் சேர்த்து அரைத்து, அதன் மீது தடவின், சில தினங்களில் அது மாறிவிடும்.

3. சாதிக்காய் 1 பங்கு, மிளகு 3 பங்கு ஆகிய இவ்விரண்டையும் ஆவரசம்இலைச் சாற்றில் அரைத்துப் பூசிவரின், எச்சிற்றேமல் மாறும்.

4. பப்பாளிப் பழத்தைப் படைகளுள்ள பாகங்களில் தேய்த்துவரின், அவை குணமடையும்.

5. நவச்சாரத்தில் தேன்விட்டு அரைத்து, படைகளின் மேல் பூசினும், அவை மாறிவிடும்.

6. மருதோன்றியிலை அல்லது குப்பைமேனி என்னும் இவற்றுள் ஒன்றினுடன் கறிஉப்புச் சேர்த்து அரைத்து, படைகள் மீது பூசினும், குணம் வரும்.

7. நாயுருவியிலையைப் படைகள் மீது தேய்த்தாலும், அவை நீங்கும்.

## எக்சீமா (Eczema) என்று சொல்லப்படும் கருங்கிரந்திக்கு அற்புத சிகிச்சை

1. கிரந்தி ஊறல் உள்ள பாகத்தைக் காலை மாலைகளில் தொட்டாற்சுருங்கி யிலையை அவித்தெடுத்த கஷாயத்தால் கழுவியபின், சித்திரப்பாலாவி என்னும் மூலியின் சமூலத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து, அதன் மீது கட்டிவரின், அது நாளடைவில் மாறிவிடும். இது ஒரு கைகண்ட முறையாகும்.

**குறிப்பு.**—இவ்வியாதியை யுடையவர்கள் வெளிமருந்து உபயோகிப்பதற்கு முன்னதாகவே, ஒரு பேதி மருந்து உட்கொண்டு, குடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல் வேண்டும்.

2. கறிமுருங்கை இலையும், கயர்த்தேங்காய்ப்பூவும் சமமாக எடுத்து வறுத்துக் கொள்ளல் வேண்டும். தேங்காய்ப்பூ பொன்னிறமாக வறுபட்டவுடன், அவ்விரண்டு



பொருள்களையும் எடுத்து அரைத்து, ஊறலுள்ள பாகத்தில் வைத்து, அதன் மீது முள்முருக்க மிலைகளை வைத்துக் கட்டிக்கொண்டு நித்திரைக்குப் போய்விடுக. காலையில் அப்பாகத்தை வெந்நீரால் சுத்தி செய்து, சீந்தில் இலைகளை நெருப்பில் வாட்டி, அவற்றின் மீது தேங்காய் எண்ணெய் பூசி, அப்பாகத்தின் மீது வைத்துக் கட்டிக் கொள்க. ஊறல் நன்றாக மாறும் வரையில், இப்படிச் செய்துவரின், நல்ல குணம் காணப்படும்.

## தேகத் தடிப்புக்கு

அம்மான்பச்சரிசி மூலியைக் கொண்டுவந்து, ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் அரைத்தெடுத்துப் பசுப் பாலில் கலந்து, காலையில் குடித்துவரின், தேகத்தடிப்பு, தேகக் காந்தல், மலக்கட்டு ஆகிய இவைகள் தீரும்.

## கோள்ளிக் கரப்பானுக்கு

1. இவ்வியாதியானது, சிலசமயங்களில், உடம்பின் மேல் எங்கும் சொறிவெடுத்துத் தடிக்கும். இதற்கு உடனே உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை, வறட்டியைச் சுட்டெடுத்த சாம்பரை நன்றாகத் தேய்த்துவிடின், தடிப்புக்கள் வற்றிச் சொறி நின்றுவிடும். பின்னர், வல்லுவெட்டிச் சாற்றில் சிவன் குளிகையை உரைத்துக் கொடுப்பதால் வியாதி குணமடையும்.

2. கொடிக்கள்ளியை வரகு வைக்கோலை எரித்த நெருப்பில் வாட்டிப் பிழிந்தெடுத்த சாற்றில் ஒரு அவுன்சுடன், கால் கழஞ்சு இந்துப்புச் சேர்த்து, ஒருமுறை

குடித்துவிட்டு, அடுத்தநாள் எண்ணெய்ப் பேதி மருந்து குடித்தல் வேண்டும்.

### சொறி, சிரங்கு, கரப்பான் முதலானவைகளுக்கு

1. எலுமிச்சம்பழச் சாறு, தோடம்பழச் சாறு, தக்காளிச்சாறு ஆகிய இவற்றைச் சம அளவாகக் கலந்து, சொறி முதலியவை உள்ள இடங்களில் பூசவேண்டும். அது காய்ந்தபின், ஸ்நானஞ் செய்யின் குணங் காணும். இப்படிச் சிலநாட்கள் செய்துவருதல் வேண்டும்.

2. குப்பைமேனியிலைச் சாற்றுடன் கறியுப்புஞ் சேர்த்துச் சொறி, சிரங்குகளுக்குப் பூசின், குணங்காணும்.

3. ஆடுதின்னாப்பாளையைக் கொண்டுவந்து சாறு பிழிந்து, அதற்குச் சமனெடையாக நல்லெண்ணெய் சேர்த்து வைத்துக்கொண்டு, சிரங்கு முதலியவைகளின் மேல் பூசிவரின், அவை நீங்கும்.

### கண்டக்கரப்பன்

1. பேய்ப்பீர்க்கின் பஞ்சை எடுத்து வேப்பெண்ணெயில் தோய்த்து வாயிலடக்கி உமிழ்நீரை விழுங்கின், குணமுண்டாம்.

2. செந்நகரைப்பழ நெய்யே இந்நோய்க்குச் சிறந்த ஔடதமாகும்.

### கண்ணாடி, பீங்கான் என்பன குத்தினால்

1. சுக்குப்பொடியும், சீனியும் கலந்து வைத்துக் கட்டின், குணங் காணும்.



2. கீழ்க்காய்நெல்லியை அரைத்து வைத்துக் கட்டினும், குணமுண்டாம்.

### ஆணி குத்தினால்

1. சுண்ணாம்பை, ஆணி குத்திய வாயிலில் பூசி விடலாம்.

2. ஆணியானது ஆழமாகக் குத்தினமையால் உள்ளுக்குக் கறள் தங்கியிருக்குமென்று கண்டால், ஆணி குத்திய இடத்தைச் சுற்றிப் பசுவின் சாணியால் வளையம் போட்டு, 2 செங்கொட்டைகளைச் சுட்டு ஒரு ஓட்டில் இட்டு, அவற்றில் வேப்பெண்ணெய் விட்டுக் காய்ச்சி எடுத்த தைலத்தில், அல்லது நல்லெண்ணெய்ச் சுடரில் 4, 5 துளிகள் இரணவாயிலின்மீது விடின், கறளினது விஷம் நீங்கும்.

### முள்ளு, ஈர்க்கு, சிறம்பு முதலியன குத்தி, உள்ளே முறிந்துவிட்டால்

1. முதலைக்கொழுப்பை வைத்துக் கட்டின், உடனே முள் வெளிவரும்.

2. வெள்ளைப்பூண்டைத் தேங்காய்ப்பாலில் அவித்துக் காயத்தின்மீது வைத்துக் கட்டினும், சிராய் முதலியன வெளிவரும்.

3. கொஞ்சம் எள்ளை வாயிற்போட்டுச் சப்பி எடுத்து வைத்துக் கட்டினும், 12 மணி நேரத்திற்குள் முள் வெளியாகும்.

4. உள்ளங்காலில் முள் தைத்து முறிந்துவிட்டால், ஒரு குண்டாழச் சிப்பியைக் காயத்தின்மீது பொருந்தும் படி உட்பக்கமாக வைத்துக் கட்டிக்கொள்ளினும், முள் வெளிவரும்.

5. எலுமிச்சங்காய் ஊறுகாயில் ஒருதுண்டை வைத்துக் கட்டுவதினாலும், முள்ளானது வெளிக்கிளம்பும்.

6. பருத்தியிலைச்சாற்றை முள் தைத்தவிடத்திற் பிழிந்து, சக்கையை அதன்மீது வைத்துக் கட்டின், முறிந்த முள்ளானது மேலே கிளம்பிவிடும்.

### கண்ணாடி, ஆணி, சிராய், சிரட்டை முதலியனவற்றுள் ஏதாயினும் ஒன்றால் நேர்ந்த காயத்தால் நீர் போசிந்துகொண்டிருந்தால்

தேங்காய்ப்பூ, பனங்கட்டி, மஞ்சள்மா ஆகியவற்றை ஓட்டில் வைத்துச் சிறிது வதக்கி, புண்ணிலே வைத்துக் கட்டின், நீர்க்கசிவு நின்றுவிடுவதுடன், குத்து, நோ என்பனவும் நீங்கும்.

### முட்சூலை

முள்ளாவியிலையையும் ஏழு மிளகையும் சேர்த்து நசித்து, முட்சூலையின்மீது மூன்று இரவு கட்டிவரின், அது கரைந்துவிடும். மிளகுக்குப் பதிலாகக் கறியுப்பைச் சேர்ப்பதும் ஒரு முறையாகும்.

**குறிப்பு.**—மருந்து கட்டுவதற்குமுன், சூலையை ஒரு பேனாக் கத்தியால் மெதுவாகச் சுரண்டி, இரத்தம் பொசியச் செய்வது நல்லது.



### ஆடும் பல்லை விழச்செய்யும் உபாயம்

ஏதேனும் பல்வியாதி ஒன்றன் காரணத்தினால் ஒரு பல்லின் வேர் செத்தபின், அப்பல் ஆடிக்கொண்டு தொந்தரவு செய்யின், உள்ளிப்பூண்டின் திரியொன்றைச் சுட்டுத் தாங்கக்கூடிய சூட்டுடன் அப் பல்லில் குறுக்காக அழுத்தி விடுக. 15 நிமிஷத்தின் பின், அதை எடுத்துவிட்டு, பின்னும், அப்படியே ஒருமுறை, அல்லது இருமுறை செய்யின், ஆடும் அப் பல் அதிசீக்கிரத்தில் விழுந்துவிடும்.

சீழ் முரசு என்றுசொல்லப்படும் வியாதியுடையவர்களுக்குச் சில பற்கள் விழுந்தபின்னும், சில பற்கள் ஆடிக்கொண்டு இருந்தால், அவற்றை உபத்திரவமின்றி முற்றாக விழச் செய்வதற்கு ஒரு சிறந்த முறை வருமாறு:

ஒரு சிறங்கைப் பலாவிலைப் பழுப்புக்களின் காம்புகளை ஒருபடி நீர் விட்டவித்து, காற்படியாக வற்ற எடுத்து, இளஞ் சூடாயிருக்கும்பொழுது கொப்புளிக்க வேண்டும். இப்படி 3 நாள் கொப்புளித்துவரின், ஆடும்பற்கள் இலகுவில் விழுந்துவிடும்.

# வேறு பல ரோகங்கள்

## விக்கல் ரோகம்

விக்கலானது நெஞ்சு வறட்சி, வயிற்றுப் பொருமல் முதலியவற்றாலும், 'ஹிஸ்ரீறியா' என்னும் வியாதியாலும், விஷவாதசன்னி, நெருப்புக் காய்ச்சல் முதலிய பெலத்த வியாதிகளின் இறுதி நிலையாலும் உண்டாகும். மூன்றாவதாகக் கூறிய காரணத்தால் உண்டாகும் விக்கலானது மருந்துக்கு வசப்படாதெனச் சொல்லப்படுகின்றது.

### நெஞ்சுவறட்சி, வயிற்றுப்பொருமல் என்பனவற்றால் உண்டாகும் விக்கல்

1. ஒரு ஈரவெங்காயம், ஏழு மிளகுகள், இரண்டு கறி உப்புக்கட்டிகள் ஆகியவற்றை வாயில் போட்டுச் சப்பி, அவற்றின் இரசத்தை விழுங்கின், விக்கல் நின்றுவிடும்.

2. மயிலிறகு, கறுத்த கம்பிளி ஆகிய இரண்டையும் சுட்டு எடுத்த சாம்பரில் ஒரு பேன்பிடியைத் தேனிற் குழைத்து நாவில் தடவின், விக்கல் நின்றுவிடும்.

3. பச்சைத்தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாக அடிக்கடி குடித்துவந்தாலும், விக்கல் நின்றுவிடும்.

4. இரத வாழைப்பழத்தைப் புசிப்பதினால் குணங் கண்டவரும் உண்டு.



5. அரசம் பட்டையை எடுத்துச் சுட்டு, அதில் கொஞ்சம் நீர்விட்டு ஊறவைத்து, தெளிந்த நீரை இறுத்துக் குடிக்கின், மிகத் தொந்தரவான விக்கலும் நீங்கும்.

6. புலித்தோலைச் சுட்டுத் தேனிற் குழைத்து, நாவில் தடவினும், விக்கல் நீங்கும்.

7. உருத்திராட்சத்தைப் பசுவின் பாலில் உரைத்து, அப் பாலிலேயே கலக்கிக் குடிப்பினும், விக்கல் தீரும்.

8. தாமரை விதைப் பருப்பை வெந்நீரிலரைத்து, அவ் வெந்நீரிலேயே கலக்கிக் கொடுக்கின், விக்கல் தீரும்.

9. கோழிமுட்டையின் வெள்ளைக்கருவில் துணியை நனைத்து, தொண்டைக் குழியின்மேற் போடின், விக்கல் நிற்கும்.

10. உருத்திராட்சம், மயிலிறகு, கடதாசி ஆகிய இவற்றைத் தனித்தனி எடுத்துச் சுட்டுச் சாம்பராக்கி, ஒவ்வொரு வகையிலும் சம எடை எடுத்து நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு, வெருகடித்தூள் எடுத்துத் தேனில் குழைத்து நக்குவதால் எவ்வித அசாத்திய விக்கலும் நீங்கும். இப்படி 3 நாள் ஆறுநேரம் செய்யவேண்டியது.

### தொண்டைநோ, தொண்டைப்புண், தொண்டைக் கரகரப்பு முதலியவற்றிற்கு

1. கடலைப் பிரமாணமுள்ள காசுக்கட்டியை வாயிலடக்கி, அதன் இரசத்தை விழுங்கின், தொண்டைக் கம்மல், புண் ஆகியவை போம்.

2. சுண்ணும்பைக் கண்டத்தில் பூசிக்கொள்ளின், தொண்டைக் கரகரப்பு நீங்கும்.

3. கோழிமுட்டையின் வெள்ளைக்கருவுடன் நவச்சாரம் சேர்த்துக் குழைத்து, தொண்டையின் வெளிப்பக்கத்தில் பூசின், தொண்டை நோ, வலி என்பவை நீங்கும்.

4. மேற்புரணி போக்கிய ஒரு சுக்குத் துண்டை வாயிலிட்டு மென்று, அதன் இரசத்தை விழுங்கின், தொண்டை நோ தீரும்.

5. சுடுநீர் ஆவியை வாயினுல் உள்ளுக்கு இழுக்கின், தொண்டைப்புண் குணமடையும். இதுவல்லாமல், 12 வெண்டைக்காய்களை எடுத்துத் துண்டுகள் செய்து, நீரில் வேகவைத்து, அதினின்று எழும் ஆவியை உள்ளுக்கு இழுத்தால், அதிக குணமுண்டாகும். பின்னர், அவிந்த காய்களைச் சூட்டுடன் உண்பதும் நன்றே.

குறிப்பு.—மேற்கூறிய நீரினை வாய் சுருங்கிய பாத்திரத்தில் விட்டு, அதன் ஆவியானது தொண்டையினுள் நன்ருகச் செல்லும்படிக்கு வாயைப் பாத்திரத்தின் மேல் சேர வைத்து இழுக்கவேண்டியது.

6. கற்பூரவள்ளிச் சாற்றில் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து, அதில் கற்கண்டு சேர்த்துக் குடிப்பின், தொண்டைக் கம்மல் தீரும்.

### தொண்டையில் மீன்முள்ளுச் சிக்கிக்கொண்டால்

தொண்டையில் ஏதேனும் ஒரு வஸ்து பிரவேசித்தால், இருமலும், மூச்சுத்திணறலும் உண்டாகும். அதை உடனே எடுக்காதிருந்தால், குரல்வளையில் வலி காணும்; சுவாசபந்தன முண்டாகும்; சீவனுக்கு அபாயம் நேரிடக்கூடும்.



சிகிச்சை: இந்நிலை யடைந்தவரை ஒரு நாற்காலியில் உட்காரவைத்து, தலையைப் பின்னுக்கு வளைத்து, வாயைச் செவ்வையாகத் திறக்கச்செய்து, சிகிச்சை செய்பவர் தமது விரல்களைச் சுத்தமாக்கிக்கொண்டு, தொண்டைக்குள் விட்டுச் செவ்வையாகத் துழாவிப் பார்க்க வேண்டியது. வஸ்து விரலுக்குத் தட்டுப்பட்டால், அதை எடுத்துவிட வேண்டியது. இரைக்குழலில் அது தங்கியிருக்கின்றதென்று அறியப்பட்டால், தயிர் உள்ள சட்டியில் பிடித்த சொடுகுடன் சோற்றைச் சேர்த்து, ஒருபிடியாகப் பிடித்துக் கொடுத்து அவரை விழுங்கச் செய்தால், அவ்வஸ்துவானது உள்ளே இறங்கி மலத்தினேடு வெளியே வந்துவிடும்.

### உண்ணுக்கு வளர்ந்திருப்பின்

நவச்சாரத்தைத் தூளாக்கி, அல்லது மிளகைப் பொடியாக்கி, உண்ணுக்கில் தடவிவரின், அதன் வளர்ச்சி குன்றும்.

### வாயவியல்

1. சாதாரணமான வாயவியலுக்குக் கீழ்காய் நெல்லி இலை, அகத்தியிலை, கிளுவங்காய் என்ற இவற்றிலொன்றை வாயிற்போட்டு மென்று துப்புக. இப்படி மூன்றுவேளை செய்துவரின், வாயின் இரணம் ஆறிவிடும்.

2. தேங்காய்ப்பாலை வாயில் வார்த்து அலசிக் கொப்புளித்தாலும், வாயவியல் மாறும்.

3. வாயவியலானது வயிற்றவியலோடு சம்பந்தப்பட்டதாயிருந்தால், அரைப்படி பசுப்பாலில் 2 மேசைக் கரண்டி கிரேப் சீனி போட்டு, வட்டத்துத்தி வேரால் துழாவிக் காய்ச்சிக் குடித்தல் வேண்டும். இப்படி 3 முறை குடிப்பின், இந்நோய் மாறும்.

## இருதயத் துடிப்பு

தாழம்பூ, ரோஜாப்பூ, பழவர்க்கங்கள் ஆகிய இவற்றில் ஒன்றிலிருந்து வடித்தெடுத்த சர்பத்து 2 அவுன்சுடன் ஒரு கரண்டி பன்னீரைச் சேர்த்துக் குடித்து வந்தால், இருதயத்துடிப்பு, மார்நோய், மார்த்துடிப்பு, இரத்த வெளுப்பு, கற்றாழைநாற்றம், வெயர்வைநாற்றம் ஆகிய இவை நீங்கும். சந்தோஷமும் தைரியமும் உண்டாகும்.

## ஓடு வாய்வு

மலைவேம்பின் வேரைப் பசுப்பால் விட்டரைத்து, புன்னைக்காய்ப் பிரமாணம் குளிகைகள் செய்து, காலை மாலைகளில் ஒவ்வொரு குளிகையாகப் பசுப்பாலில் கலக்கிக் குடித்துவந்தால், மலக்கட்டு, கிருமி, உடலில் ஓடி ஓடிக் குத்தும் வாய்வு என்பவை தீரும்.

## நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களின் தலை முழுக்கிற்கு உகந்த தைலம்

நல்லெண்ணெயிலே ஊதா நிறமுடைய சிற்றகத்திப் பூவைப் போட்டாவது, அதன் இலைச்சாற்றை விட்டாவது



காய்ச்சிப் பதத்திலெடுத்து வைத்துக்கொண்டு, முழுகிவரின், தலைக்கு நல்ல சுகமுண்டாகும்.

## ஓங்காளம், விக்கல் என்பவை நிற்பதற்கு

1. பாதி எலுமிச்சம் பழத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்க. அந்த அளவுக்கு இஞ்சியையும் நறுக்கிக்கொள்க. இவை இரண்டு பொருள்களையும் சட்டியிலிட்டு வறுத்து, முக்காற்பதம் வந்தவுடன், ஒரு கழஞ்சு மிளகு, ஒரு கழஞ்சு மல்லி, இரண்டு கெட்டுக் கருவேப்பிலை ஆகியவற்றை அச்சட்டியில் போட்டு, இவையெல்லாம் கருகுமாறு வறுத்து வரும்பொழுது, 2 மேசைக் கரண்டி தேனும் விட்டு வறுத்து, அதில் $\frac{1}{2}$ படி நீர் விட்டு, $\frac{1}{4}$ படி நீராகி வற்ற எடுத்து, 2 அல்லது 3 வேளை கொடுக்கின், மேலே கூறியிருக்கும் துர்க்குணங்கள் நீங்கும்.

2. மாதுளம்வேர், நெற்பொரி, சர்க்கரை, திப்பலி ஆகியவற்றை ஒவ்வொரு கழஞ்சு வீதமாக எடுத்துப் பொடித்துத் தேனிற் குழைத்துக் கொடுக்கினும், விக்கல் முதலியன குணமடையும்.

## பற்கிட்டுக்கு

1. ஒரு கறிமிளகை ஊசியால் குத்தி விளக்கில் கொளுத்தி, அது அரைவாசி எரிந்ததும் நூற்றுவிட்டு, அதனின்றும் எழும்புகின்ற புகையை உடனே மூக்குத் துவாரத்தில் பிடிக்கின், தும்மல் வரும். பற்கிட்டும் நீங்கும். கடுமையான தலையிடிக்கும், கபாலக்

குத்துக்கும் இப் புகையைப் பிடிக்கின், உடனே குணங் காணும்.

2. முருங்கைப்பட்டை, வசம்பு, வெள்ளைப்பூடு, பெருங்காயம் ஆகிய இவைகளைத் தயிர்வேளைச் சாறு விட்டுச் சிதைத்துத் துணியில் முடிந்து, நாசியில் நசிய மிடின், பல்லுக் கிட்டுதல் நீங்கும்.

## சன்னி முதிர்ச்சியால் நாக்கில் உண்டாகும் முள்ளிற்கு

ஒரு சிறங்கை நாக்குளிப் பூச்சிகளை எடுத்து மோரில் போட்டு, 2 மணி நேரஞ் சென்றபின் எடுத்துக் கழுவி ஓட்டிலிட்டு, நன்றாக வறுப்பதனால் உண்டாகும் சாம்பரை தேனில் குழைத்து, நாவில் உள்ள முள்ளில் தடவின், நல்ல குணம் காணப்படும்.

## நுளம்புக் கடிக்கு

எலுமிச்சம்பழக் கோதைக் கைகால்களில் உரைஞ்சிக் கொண்டால், நுளம்புகள் அணுகமாட்டா.

## பாலுண்ணிக்கு

1. அதிகாலையில் எழுந்தவுடன், வாயினின்று வரும் உமிழ்நீரைத் தொட்டுக் கட்டியின்மீது பூசிவரின், அது அமர்ந்துவிடும்.

2. சதுரக்கள்ளிப் பாலைப் பாலுண்ணியின்மீது தடவினால், அது இரணமாகிக் கரைந்துவிடும்.



## கண் எழுச்சிக்கு

இயங்கம் இலையைக் கொண்டுவந்து கண்ணுக்கு முன்னே பிடித்து, பின் தலையைச் சுற்றி, அதனை இரண்டு கால் பெருவிரல்களினது நரம்புகளிலும் தேய்த்துவிடின் கண் எழுச்சி நீங்கும்.

## காஞ்சோன்றியிலை தேகத்தில் பட்டால்

புகையிலையை நீரில் ஊறவைத்து, அந்த நீரைக் கொண்டு காஞ்சோன்றியிலையினால் தேகத்தில் உண்டாகிய தடிப்புக்களைக் கழுவின், சுணைப்பு நீங்கும்.

## இலாகிரி போதை முறிவதற்கு

வாழை மட்டையின் சாற்றைக் குடிக்கக் கொடுத்தால், அப் போதை முறியும்.

## வயிற்றேரிவுக்கு

கோரைப்பூவை எலுமிச்சங்காயளவு அரைத்து, பசுவெண்ணெயில் குழைத்து 3 நாள் கொடுத்துவரின், வயிற்றெரிவு தீரும்.

## மலச்சிக்கல் நீங்குவதற்கு

சரக்கொன்றைக் கொழுந்தை வதக்கி, புளியும், உப்பும், மிளகாயும் சேர்த்துத் துவையல் செய்து, காலையில் உண்டுவந்தால், மலச்சிக்கல் நீங்குவதுடன் வாய்வுங் கலைந்துபோகும்.

### தலைப் பேன் சாவதற்கு

சீனக்காரத்தைப் பொரித்துப் பொடிபண்ணி வஸ்திரகாயஞ் செய்து, ஜலத்தில் கரைத்துத் தலையில் பூசி, மூன்றுமணிநேரஞ் சென்றபின், ஸ்நானஞ் செய்துவந்தால், பேன் ஈர் என்பன சாகும்.

### முகப் பருவுக்கு

1. புற்று மண்ணை அரைத்துப் பருவின்மீது பூசின், அது மறையும்.

2. மணித்தக்காளியிலைச்சாற்றில் மிளகை உரைத்து, பருவின் மீது பூசினும், அது அமரும்.

3. இரு கரண்டி கடலைமாவை எடுத்து, அதில் கணக்கான ஆமணக்கு நெய் சேர்த்துக் குழப்பி, முகத்தில் பூசிக்கொண்டு படுத்து உறங்குக. காலையில் அதைச் சீயக்காயால் நன்றாகக் கழுவிவிடல் வேண்டும். இப்படிச் சில நாட்கள் செய்துவரின், முகப்பருக்கள் மறைந்துவிடும்.

### உணவில் உண்டாகும் வெறுப்புக்கு

மகிழம்பூவை மூக்கால் முகர்வதால் அவ்வெறுப்பு நீக்கப்படும்.

### கோட்டாவிக்கு

சுக்கு, மிளகு என்ற இவற்றை மென்று, இவற்றின் சாரத்தை விழுங்கின், கொட்டாவி நீங்கும்.



### நாசியினுள் முளை வளர்ந்தால்

நத்தையின் ஓடு, சுண்ணாம்பு, சீனக்காரம் ஆகியவற்றை வகைக்கு அரைக்கழஞ்சு வீதம் எடுத்து இடித்து, ஆமணக்கு நெய்யிற் குழைத்து, அதன் இலையில் தடவி அம்முளையின் மீது வைத்தல் வேண்டும். அதனால், அதன் தசை கரைந்து தண்ணீராய்ப் போகும்.

### மூலம் வெளிப்படுவதற்கு

கற்றாழைச் சோற்றை அலம்பி, ஆசனத்தில் வைத்துக் கட்டல் வேண்டும்.

### செங்கண்மாரி

1. பசுப்பால் கறக்கப்பட்டவுடனே, அதில் அரைக்காற்படி எடுத்து ஒரு தேக்கரண்டி கீழ்க்காய்நெல்லிச் சாறு விட்டு மூன்றுநாள் ஆறுநேரம் குடித்துவரின், இந் நோய் தீரும்.

2. ஓரிதழ்த்தாமரை, கீழ்க்காய்நெல்லி, விட்டுணுகிராந்தி என்னும் மூன்று மூலிகைகளையும் ஒவ்வொரு பிடிவீதமாக எடுத்து இடித்து, அவற்றில் 2 தேக்கரண்டி பசுவின்பால் விட்டுக் கலக்கி, 3 நாள் 6 நேரங் கொடுக்கினும், இந் நோய் தீரும்.

**குறிப்பு.**—காலையில் பழங்கஞ்சியைத் தலையில் தப்பித் தண்ணீரில் ஸ்நானஞ் செய்தபின்னரே, மேற்கூறிய மருந்தை உட்கொள்ளல் வேண்டும். இம் மூன்று நாளும் பாலும் சோறுமே பத்தியமாக உண்ண வேண்டியது.

## நாரிப்பிடிப்பு

நாரிப்பிடிப்பானது குளிர் சம்பந்தமான வாய்வினாலும், தாது பெலவீனத்தினாலும் உண்டாவதாகும். வாய்வு சம்பந்தமான நாரிப்பிடிப்புக்குக் கீழே கூறப்படும் முறைகளுள் ஒன்றை உபயோகிக்கலாகும்.

1. ஒருதுண்டு சதுரக்கள்ளி, ஒரு சிறங்கைச் செத்தல் தேங்காயின் பூ, ஒரு தேக்கரண்டி மஞ்சள்மா ஆகிய இம்மூன்று பொருள்களையும் துவைத்து, நாரியில் வைத்துக் கட்டின், அதன் பிடிப்பு நீங்கும்.

2. பிடிப்புள்ள இடத்தில் சுடுநீர் ஒற்றடங் கொடுத்தபின், கற்பூரத்தைலம் பூசி, பின்னும், சூடுகாட்டுக. இப்படி 2, 3 வேளை செய்க. அதன்பின், பேதி மருந்து உட்கொள்ளின், அப்பிடிப்பு நீங்கும்.

3. எருக்கின் மொட்டு, ஆமணக்கந்துளிர், மஞ்சள்மா, கயர்த் தேங்காய்ப் பூ ஆகியவற்றைச் சமனாக எடுத்து வறுத்து, எண்ணெய் தோன்றியவுடன் எடுத்து, பொட்டணங்கட்டி ஒற்றடங் கொடுத்தபின், அவற்றைப் பிடிப்புள்ள இடத்தில் வைத்துக் கட்டிவரின், இந்த வலி எடுபட்டுப் போகும்.

4. சீமை இந்துப்பையும், கிளிசறீன் என்பதையுஞ் சமமாகச் சேர்த்துக் கலக்கி பிடிப்பு, நோ, வலி உள்ள இடங்களில் பூசினும், அவை நீங்கும்.



குறிப்பு.—நாரிப்பிடிப்பு, கால்பிடிப்பு என்பனவற்றை உடையவர்கள் சிவதையிலை, அல்லது பெருமருந்திலையைக்கொண்டு குழம்பு, இரசம், அரையல் முதலியன செய்து உண்ணுதலும் நன்றே.

## அண்டவாய்வுக்கு அண்டச் சுண்ணம்

ஒரு கோழிமுட்டையில் ஒருசிறிய துவாரஞ் செய்து, அதில் குப்பைமேனிச் சாற்றை விட்டு, அதன் இலையை அரைத்தெடுத்த கூட்டை அம் முட்டையின்மீது, 3 விரற் கடைக் கனத்தில் பூசி, மண்சீலையால் கவசஞ் செய்து, வராகபுடம் போடின், அது சுண்ணமாகும். அதில், 4, 6 கிறேன்ஸ் என்னும் சிறு நிறையை எடுத்துப் பசுநெய்யிற் கலந்து உட்கொள்ளின், அண்டவாய்வு விலகிப் போகும்.

## பாண்டு, காமாலை, சோகை என்பவைகளுக்கு

1. அரைக்கால்படி கையாந்தகரைச் சாற்றை 3 காலையில் குடித்தல் வேண்டும். இதனால் அதிக பசியுண்டாகு மாகையால், பசுப்பால் சேர்த்த பச்சை அரிசிக் கஞ்சி, நெய், தயிர் முதலியவற்றை நிரம்ப உட்கொள்ள வேண்டியது. இதனால் சகல கிருமிகளும் வெளிப்படுவதுடன், பாண்டு முதலிய வியாதிகளும் தீரும்.

2. கையாந்தகரை, தும்பை, அம்மான்பச்சரிசி ஆகிய இவற்றுள் ஒவ்வொரு வகையில் ஒரு பிடியாக எடுத்துச் சாறுபிழிந்து, 12 மிளகு அரைத்து அதில் கரைத்து, அதனுடன் கால்படிப் பசுப்பால் விட்டுக் கலக்கி

ஒரு தேக்கரண்டி சர்க்கரையும் போட்டுக் குடித்தல் வேண்டும். இப்படி ஆறுநாள் காலையில் குடித்துவரின், காமாலை தீரும்.

3. அருநெல்லியிலையை அரைத்து, ஒரு புன்னைக் காயளவு எடுத்து, அதைப் புளித்த மோருடன் கலந்து உட்கொள்க. இப்படி 3 காலை உட்கொண்டுவரின், காமாலை தீரும். பத்தியம் வெள்ளாட்டுப்பாலும் சோறும்.

## குளிர்க் காய்ச்சலுக்கு

சுரம் வருவதற்கு முன்னே, குளிர் தோன்றும்பொழுது, வறுத்திடித்த மிளகுப் பொடியில் ஒரு வெருகடிப் பிரமாணம் கொதி நீரில் போட்டுச் சீனியுங் கூட்டிக் குடிக்கின், சுரம் வராது.

## நாட்பட்ட மலேரியாக் காய்ச்சலுக்கு

ஒரு கழஞ்சுக் கழற்சிப்பருப்பையும் ஒரு கழஞ்சு மிளகையும் இடித்து அரைத்து, அதில் வெருகடித்தூள் எடுத்து, ஒரு மேசைக்கரண்டியளவுள்ள எலுமிச்சம் பழ ரசத்தில் போட்டு, அதனோடு ஒரு தேக்கரண்டி சீனியும் சேர்த்துக் கலக்கி, காலை மாலை சிலதினங்கள் குடித்துவரின், நாட்பட்ட அக் காய்ச்சல் அகன்றுவிடும்.

## தலைமயிர் கறுத்து வளர்வதற்கு எண்ணெய்

செந்நிறமுள்ள செத்தல் தேங்காயைத் துருவி எடுத்த பூவை நீர்விட்டு அவித்துப் பிழிந்தெடுத்த பாலைக் காய்ச்சி, கடுகு திரண்டுவரும் பருவத்தில் அரைப்படி



எண்ணெய்க்கு 5 கழஞ்சு சடாமாஞ்சிலைப் பொடிபண்ணி அதில் போட்டு, பதத்தில் வடித்தெடுத்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் தலையில் பிரட்டிக்கொண்டு வந்தால், தலைமயிர் உதிர்வது நிற்பதோடு, மயிரும் நன்றாகக் கறுத்து வளர்வதாகும்.

## தலைமயிர் உதிராதிருப்பதற்கும், முளைப்பதற்கும்

1. நவச்சாரத்தைத் தேனில் ஊறவைத்து அரைத்து, மயிர் உதிர்ந்துகொண்டிருக்கும் இடத்தில் பூசிவரின், அது மயிர் உதிர்ந்துபோவதை நிறுத்தும்.

2. கரியபோளத்தைக் காடிவிட்டரைத்து மயிர் உதிர்ந்து வழுக்கையான இடங்களில் தடவிவரின், திரும்பவும் மயிர் முளைக்கும்.

3. கோதோடு உள்ள உழுந்தைத் தண்ணீரில் ஊறவைத்து அரைத்தெடுத்து, முகத்தில் தடவிவரின், முகத்தில் மயிர் அடர்த்தியாக முளைக்கும்.

## வெளுத்த மயிர் கறுப்பதற்கு

கரியபோளத்தை நெல்லிக்காயின் சாற்றில் அரைத்துப் பூசிவரின், நரைமயிர் கறுத்து வளரும். செம்பட்டை மயிருங் கறுக்கும். இதனை மீசை, தாடிகளுக்கும் தடவலாம்.

## புழுவெட்டுக்கு

1. ஆனைத்தந்தத்தைச் சுட்டுப் பொடியாக்கிய சாம்பரைத் தேனில் குழைத்து, புழுவெட்டினாலாவது, வேறு

எவ்வித காரணத்தினாலாவது மயிர் உதிர்ந்துவிட்டால், அவ்விடத்தில் எட்டுநாள் வரையில் தடவிவரின், மயிர் முளைக்கும்.

2. நேர்வாளத்தை வெண்ணெயிலுரைத்துப் புழுவெட்டு எனப்படும் மயிர் உதிர்ந்த இடங்களில் தடவிவரின், அப்புழுக்களானவை வெளிப்பட்டு வருவதனால் அந்த இடங்கள் புண்ணாகிவிடும். அதன்மீது தேங்காயெண்ணெய் பூசின், அது ஆறிவிடும். பிறகு, மயிர் முளைக்கும்.

### சளிக்கட்டுக்கு

தேற்றாங் கொட்டையைத் தண்ணீர்விட்டு உரைத்து, அதை உட்கொள்ளின் மார்ச்சளியும், கோழைக்கட்டுகளும் இளகி வெளிப்படும். இப்படி 2, 3 வேளை செய்யின், நல்ல குணமுண்டாகும்.

### ஈளையோடு சேர்ந்த இருமலுக்கு

இஞ்சிச்சாறும், தாதுமாதுளம்பூச் சாறும், தேனும் சமனாகக் கலந்து ஒருவேளைக்கு அரைக்கால்படி வீதம் குடித்துவரின், மேற்கூறிய இருமல் சாந்தியடையும்.

### பழைய இருமலுக்கு

நாயுருவிச் சமூலத்தை இடித்துச் சாறுபிழிந்து ஒரு அவுன்சு எடுத்து, அதில் ஒரு தேக்கரண்டி அளவு சர்க்கரை போட்டுக் குழப்பி உண்க. இப்படி 7 நாள் இருவேளை உட்கொண்டுவரின், பழைய இருமல் தீரும்.



### சூட்டினால் உண்டாகும் புகைச்சல் இருமலுக்கு

1. ஒருசிறங்கை மல்லி, ஒருதேறு இஞ்சி, $\frac{1}{2}$ இருத்தல் கல்லக்காரம் ஆகிய இவற்றுள் மல்லியை நீரால் கழுவியும், இஞ்சியைப் புறணிபோக்கி நறுக்கியும் கொள்ளல் வேண்டும்.

ஒருபாத்திரத்தில் நன்றாகக் கொதிக்கும் நீரை விட்டு, மேலே சொல்லிய மூன்று பொருள்களை அதிற்போட்டு மூடி வைத்துக்கொண்டு, அந்த நீரில் கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி குடித்துவரின், ஒரேநாளில் அப்புகைச்சலும் இருமலும் நீங்கும்.

2. ஒருபோத்தல் சுடுநீரில் 5 மேசைக்கரண்டி அதிமதுரத்தூள் போட்டு, அரைமணிநேரம் மூடிவைத்து, குளிர்ந்தபின், எடுத்து வடிகட்டி, போதிய கற்கண்டுத் தூள் சேர்த்து வைத்துக்கொண்டு, 2, 4 அவுன்சுவீதம் 4, 6 தரம் குடிக்கின், சூட்டினாலுண்டாய இருமல், நீர்ச்சுருக்கு ஆகியவை தீரும்.

### வயது சென்றவர்களுக்கு உண்டாகும் இருமலுக்கு

வால்மிளகைச் சூரணித்து, அதில் வெருகடித்தூள் எடுத்துப் பாலில் அல்லது தேனில் குழப்பி, நாளொன்றுக்கு 3 முறையாக, சில நாட்கள் தொடர்ந்து உண்டுவரின், அவ்விருமல் சாந்தியாகும்.

### கடுமையான இருமலுக்குக் கைகண்ட கைமருந்து

சிறுகுறிஞ்சாவின் சாறு, கோழிமுட்டையின் வெள்ளைக்கரு, தேன், நெய், பசுப்பால், கற்கண்டு ஆகிய இவற்றை ஒரு கணக்காக எடுத்து ஒன்றுசேர்த்து நன்

ருகக் கலக்கிக் குடித்துவரின், எவ்விதமான இருமலே யல்லாமல், வாயிலிருந்து இரத்தம் வருதலும் நீங்கும்.

### ஈழை, கசம், குன்மம் ஆகியவற்றிற்கு

ஒரு இருத்தல் பிஞ்சுக் கடுக்காயை ஒரு புதிய இரும்புச் சட்டியில் போட்டு, அதில் இரண்டுபடி வெள்ளாட்டு மூத்திரம் விட்டு, வெய்யிலில் வைத்தல்வேண்டும். இப்படி ஒவ்வொருநாளும் வெய்யிலில் வைத்துக் கொண்டு வரின், 7, 8 நாட்களில் மூத்திரமானது வற்றும்; கடுக்காயும் நன்ருகக் காய்ந்துவிடும். பின்னர், அதை ஒரு கல்லுரலில் இட்டு நன்ருக இடித்தெடுத்து வஸ்திர காயஞ்செய்து வைத்துக்கொள்க. ஈழை, கசம், குன்மம் ஆகிய நோய்களிலொன்றை யுடையவர் இச்சூரணத்தில் ஒரு வெருகடியளவு எடுத்து, அவ்வளவு சர்க்கரை யுஞ் சேர்த்து, 40 நாள் காலை மாலைகளில் உண்டுவரின், இந்நோய்கள் குணமடையுமென்பது ஒரு பெரியவரால் எமக்கு நேரே சொல்லப்படுவதாயிற்று. ஆயினும், இவை கர்ம நோய்களெனப்படுவதால், இம்மருந்தை உட்கொள்ளு முன், அல்லது இம்மருந்து உண்டு நோயாளி சுக மடைந்த பின்னர், அவர் தம்மாலே இயன்ற தான தருமங்களைப் பகுத்தறிவோடு செய்தால், அதனுல் அவர் தீர்க்க மான பலனை அடைதல் திண்ணம். இம்மருந்து பாண்டு, காமாலை, சோகை முதலிய ரோகங்களையும் நீக்கக்கூடு மென்பது எமது கருத்தாகும்.

### குன்ம வாய்வு

1. அரைக்கால்படித் தேன், கால் இருத்தல் மேற் புரணிபோக்கிய இஞ்சி, ஒரு தேக்கரண்டி கொண்ட



சுத்திசெய்த இந்துப்பு ஆகிய மூன்று பொருட்களையும் ஒரு பாத்திரத்தில் இட்டுச் செவ்வனே மூடிவைத்து விடுக. எட்டுத் தினங்கள் கழிந்தபின், அப்பாத்திரத்தி லிருக்கும் இஞ்சியில் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, காலை வேளைகளில் உண்டுவரின், குன்மவாய்வு சாந்தி யடையும்.

2. ஒரு பானையில் ஒரு பிடி வில்வத்துளிரைப் போட்டு, அதில் தண்ணீரும் விட்டு மூடிவைக்கவேண்டும். மறுநாட்காலை அந்த நீரை இறுத்துக் குடிக்க வேண்டியது. இப்படிச் சிறிதுகாலம் குடித்துவரின், வயிற்றுக்குத்து, ஈரல் எரிவு முதலியன நீங்கும்.

3. ஐந்து குன்றிமணி எடையுள்ள பொன்னம்பரை வாயிற் போட்டுக்கொண்டு, கால்படிப் பசுப்பால் குடித்தல் வேண்டும். இப்படிச் சில காலைகளில் குடித்துவரின், குன்மவலி ஒருவாறு குணமடையும்.

### சுகபேதி

1. கடுக்காய்த்தோல் இரண்டு கழஞ்சு, பிரமிச் சமூலம் ஒரு பிடி ஆகிய இவை இரண்டையும் அரைப் படி நீர்விட்டு இரவில் அவித்துக் கால்படியாக வற்றக் காய்ச்சி, அப்படியே அடுப்பில் விட்டுவைத்து, மறுநாட் காலை எடுத்து, அவற்றை நன்ருகக் கசக்கிப் பிழிந்து, 4, 5 முறை வடிகட்டி எடுத்து, பனங்கட்டி சேர்த்து வெறும் வயிற்றில் குடித்துவிடுக. 4, 5 முறை பேதி யாகும்.

2. பிஞ்சுக் கடுக்காய், நெல்லிவற்றல், ரோசா மொட்டு ஆகியவற்றுள் ஒவ்வொரு வகையில் கழஞ்சு இரண்டும், சூரத்தாவரையில் கழஞ்சு ஒன்றும், வேர்க் கொம்பில் அரைக்கழஞ்சுமாக எடுத்து, அரைப்படித் தண் ணீரில் போட்டு நாலொன்ருக வற்றக் காய்ச்சி எடுத்துக் கொள்க. இதைக் காலையில் வெறும் வயிற்றிலாவது, இராப்போசனம் செய்து இரண்டுமணி நேரத்துக்குப் பின்னுவது குடித்துவிடின், மலக்கட்டைச் செவ்வையாக நீக்கித் தேகத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

### மூளைப்பேதி

இஞ்சிச்சாறு, செங்கருப்பஞ்சாறு, முலைப்பால், ஆவின் நெய் ஆகியவற்றை சமன் எடையாக எடுத்து ஒன்று சேர்த்து, ஒரு பலாவிலையில் விட்டு விளக்கினுற் சூடுகாட்டி, அதில் குமிழிகள் கண்டவுடன், அதை எடுத்து ஆறவிட்டு வைத்துக்கொள்க. சிகிச்சைக்குரிய வர் காலையில் ஸ்நானஞ் செய்தபின், அவரை மல்லாந்து படுக்கச்செய்து, முன்னரே ஆயத்தப்படுத்தி வைத்திருக் கும் சாற்றை இரு நாசிகளினும் விடுக. கொஞ்சநேரஞ் சென்றபின், அவர் எழுந்து தம் வாயையும் நாசியையும் சுத்தி செய்துகொள்ளல்வேண்டும். இவ்விதம் மூன்று காலையில் தொடர்ந்து செய்தலால், மூளைக்கு நன்மை உண்டாம். இப்படி ஆறுமாசத்துக் கொருமுறை செய்து வருதல் நலம். பீநசம் ஒன்றைத் தவிர மற்றெல்லாத் தலைவியாதிகளையும் இம் மூளைப் பேதியானது குணப் படுத்தும்.



**குறிப்பு.**—இருபத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களும், நாற்பது வயதிற்குட்பட்டவர்களுமே இம் முறையைக் கையாண்டு வருதல்வேண்டும்.

### நேத்திரபேதி

ஈனுத எருமையின் சாணிப்பாலில் சிற்றுமணக்குப் பருப்பை இழைத்துக் கண்ணில் தடவின், நீர்வடிந்து மாசு நீங்கிவிடும். கண் சுத்தியாகும்.

### மூத்திரப்பேதி

நெருஞ்சிவேர், நீர்முள்ளிச் சமூலம், ஏலம் ஆகிய மூன்றையும் வகைக்கு 2 கழஞ்சுவீதம் எடுத்து $\frac{1}{2}$ படி நீர்விட்டு $\frac{1}{8}$ படியாக வற்றக் காய்ச்சி, சீனி சேர்த்துக் குடிக்கவேண்டும். இதனுல் சிறுநீர் தாராளமாய் வெளி வரும்.

### தாதுவிர்த்தி உண்டாவதற்கு

1. பேரீச்சம்பழத்துடன் கணக்கான தேங்காய்ப் பாலும், பசுவின் நெய்யுஞ் சேர்த்துப் பிசைந்து உண்டு வரின், தாதுவிர்த்தியுண்டாகும்.

2. விந்து பலத்தற்கும், சூடு தணிதற்கும் (புத்து வாட்டி சின்னத்தம்பி முறை) ஒரு சிறங்கை நெற்பொரிமா, ஒரு சிறங்கைச் சர்க்கரை, ஒரு மேசைக்கரண்டி பசுநெய் ஆகிய இவற்றுடன் 3 பிஞ்சு முருங்கைக்காய்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சேர்த்துக்கொள்ளுக. கால்படி பசு வின் பாலை அடுப்பேற்றி, அது கொதித்துவரும்பொழுது,

மேலே சொல்லப்பட்ட பொருள்களை ஒன்றன்பின் ஒன்ருக அதில் போட்டு, நன்ருகக் கிளறி நல்ல பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு, இராப்போசனத்தின்மேல் புசித்துவரின், தேகத்திலுள்ள எவ்விதமான சூடும் நீங்குவது மல்லாமல், தாதுவும் பெலமடையும்.

3. பேரீச்சம்பழம் 1 இருத்தல், கற்கண்டு 1 இருத்தல் ஆகிய இரண்டையுங் குழியம்மியில் போட்டுத் தேன்விட்டு நன்ருக அரைத்தெடுத்து வைத்துக்கொண்டு, காலை மாலைகளில் பழப்பாக்குப் பிரமாணம் புசித்துவரின், தாது வலுவடையும்.

### சாரீரம் நன்றுவதற்கு

சுக்கு, கடுக்காய், திப்பலி, வாலுளுவை அரிசி ஆகியவற்றைச் சமன் எடையாக எடுத்து, தேன்விட்டு அரைத்து எடுத்துவைத்துக்கொண்டு, காலையில் சுண்டங்காய்ப் பிரமாணம் உண்டுவரின், கண்டசுகம் உண்டாகும்.

### தேகவெளுப்பு நீங்குவதற்கு

ஆகாச கருடன் (காக்கணங் கொவ்வை) கிழங்கைத் தூள் செய்து அதனோடு சமஎடையான சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு, நாளொன்றுக்கு 3 வேளைகளில் ஒவ்வொரு கழஞ்சுப் பிரமாணம் உட்கொண்டுவரின், நாட்பட்ட சீதபேதி, பொருமல், நமைச்சல், குடல்வலி, கண்டமாலை, வாதசூலை, சுரம், தேகவெளுப்பு ஆகிய இவைகளெல்லாம் நீங்கும். இச்சா பத்தியம் கொள்ளப்படுதல் வேண்டும்.



### தேகத்தில் பளபளப்பு உண்டாவதற்கு

கையாந்தகரையை அரைத்துத் தேகத்தில் பூசிக் குளித்துவரின், தேகம் பொற்சாயலை அடையும்; சிரங்கு போம்; பலம் உண்டாகும்.

### சீரணசக்தியைத் தரும் ஒரு சிறந்த ஆகாரம்

ஒரு நோயாளிக்கு எவ்விதமான ஆகாரமும் ஒத்துக்கொள்ளாமலிருந்தாலும், அவர் உடலுக்கு உணவு செல்ல வேண்டியது அவசியமாகவிருந்தாலும், அல்லது உட்சென்ற உணவானது சீரணமாகாது தொந்தரவு செய்துகொண்டிருந்தாலும், சீரணசக்தியை இலகுவில் உண்டு பண்ணக்கூடியதாகிய ஒருபாகத்தைக் கீழே எடுத்துக் கூறுவாம். இப்பாகமானது ஒரு பெரியாரால் எமக்கு நேரில் சொல்லப்பட்டதாகும்.

ஒரு அகப்பை வெந்த சோற்றை எடுத்து வேடுகட்டி அவித்தெடுத்துக்கொண்டு, அதை ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, நாரத்தங்காய்ச்சாறு, தோடம்பழச்சாறு, கருப்பஞ்சாறு ஆகியவற்றில் ஒவ்வொருவகையிலும் ஒரு அவுன்சு அளவாகச் சேர்த்து, அவற்றுடன் கணக்கான மோர் கூட்டி நன்ருகக் கடைந்து, நோயாளி குடிக்கக்கூடிய அளவு கொடுத்தல்வேண்டும். தேவை காணும்பொழுதெல்லாம், இப்பானத்தைக் கொடுத்துவந்தால், சீக்கிரத்தில் அவருக்குச் சீரணசக்தி உண்டாகும்.

## வேறு ஒரு முறையான ஆகாரம்

எல்லா வஸ்துக்களுள்ளும் அன்ன ஆகாரமே ஒருவருக்கு எக்காலமும் முக்கியமாக வேண்டியதாகும். சில காரணங்களால் ஒரு நோயாளிக்கு அவர் வாய் மூலமாக எவ்வித ஆகாரமும் செல்லமுடியாதிருக்குமாயின், கீழே கூறும் முறையின்படி அவருக்கு அன்னரசத்தை உட்செலுத்தலாகும்.

நன்றாக வெந்த ஒரு அகப்பைச் சோற்றை எடுத்து அரைத்து, ஒரு சீலையின்மேல் தடிப்பாகப் பூசி, பூசிய பாகம் மேல்பக்கமாக நோயாளியின் தொப்புளின்மேல் போட்டு, அதன் மேலும் ஒரு சீலை போட்டு, அதில், இடைக்கிடை, தண்ணீர் தெளித்து வரவேண்டியது. இப்படி ஒருநாளைக்கு 3 தரம் செய்துவரின், நோயாளியின் உடலுள் அன்னசத்து இறங்கி நன்மையைப் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

## உப்பின் உபயோகங்கள்

1. **பல்வலி, காதுவலி முதலியவைகளுக்கு:** உப்பை வறுத்து ஒரு துணியில் பொதிந்து, வேதனையுள்ள இடங்களில் ஒற்றடங் கொடுத்தால், உடனே சுகங் காணும்.

2. **இரத்தவாந்திக்கு:** உப்பைத் தண்ணீரில் மிதமாகப் போட்டுக் குடிப்பின், இரத்தப் பெருக்கு நின்றுவிடும்.

3. **சிசுக்களுக்குண்டாகும் ஈளை, மாந்தம் முதலியவைகளுக்கு:** உப்பைச் சமபாகமாகத் தேனில் கலந்து கொடுக்கின், மிக்க அநுகூலமுண்டு.



4. **அஜீரணம், வயிற்றுப்பிசம் முதலியவைகளுக்கு:** அரைத் தேக்கரண்டி உப்பைக் குளிர்ந்த சலத்தில் கரைத்துக் காலைப் போசனத்துக்குமுன் குடிக்கின், அஜீரணம் முதலியன நீங்கும்.

5. **வயிற்று வலிக்கு:** ஒரு தேக்கரண்டி உப்பைக் குளிர்ந்த ஜலத்தில் கரைத்துக் கொடுக்கின், வயிற்றுவலி உடனே நிற்கும்.

6. **ஈறுகள் பெலத்தற்கும், வாய்நாற்றம் நீங்கற்கும்:** உப்பை அதிகமாகத் தண்ணீரில் கலந்து வாய் கொப்புளிக்கின், ஈறுகளுக்கு உறுதி உண்டாவதுடன் வாய் நாற்றமும் போம்.

7. **சுளுக்கு வீக்கங்களுக்கு:** உப்புத் தண்ணீரைச் சுளுக்கு வீக்கங்களின் மேல் தாராளமாய் விட்டுக் கழுவினால், அவை நீங்கிப்போகும்.

8. **பீநசத்துக்கு:** வெந்நீரில் கொஞ்சம் உப்பைக் கரைத்து இருநாசிகளாலும் உறிஞ்சினால், பீநசம் நிவிர்த்தியாவதுடன், 'இன்புளுவென்சா' என்று கூறப்படும் சுரமும் வராது தடுக்கப்படும்.

9. **கண்வலி, கண்வீக்கம் முதலியவைகளுக்கு:** உப்பைக் கரைத்த நீரால் கண்களை அடிக்கடி கழுவிவரின், கண்வலி நீங்கும், பார்வை தெளிவாகும்.

10. **நெஞ்சேரிவுக்கு:** சிறிது உப்பை வாயிற் போட்டுக்கொண்டு உமிழ்நீரை விழுங்கிக்கொண்டிருக்கின், நெஞ்செரிவு தீர்ந்துவிடும்.

11. **தொண்டைப் புண்ணுக்கு:** உப்பைக் கரைத்த நீரை வாயில்விட்டுப் பலமுறை கொப்புளித்துக்கொண்டிருக்கின், தொண்டைப்புண் மாறிவிடும்.

12. **பசுவின்பால் அதிகரிப்பதற்கு:** பசுமாட்டுக்கு அதன் தீனியோடு உப்பையுங் கலந்து கொடுத்தால், பால் அதிகரிக்கும்.

## ஆபத்து வேளைகளில் வைத்தியர் வருதற்குமுன் சிகிச்சை

ஒருவருக்குக் காத்திராவகையில் நேரிடக்கூடிய ஆபத்தான தீங்குகள் அநேகம் உண்டு. ஆதலால், ஓர் ஆபத்துற்றவர்பொருட்டு ஒரு வைத்தியர் வருவதற்கு முன்னர் எவரும் உடனே செய்யக்கூடிய சிகிச்சைகளை எல்லோரும் அறிந்திருப்பது அவர்தம் முக்கிய கடமையாகும். அதற்கெனத் தனிநூல்கள் பல இருக்கின்றன. ஆயினும், அத்தகைய நேரங்களுக்குப் பொருத்தமான கைமுறைகள் சிலவற்றை ஈண்டு எடுத்துச் சுருங்கச் சொல்லுகின்றோம்.

1. ஒருவரைச் சர்ப்பந் தீண்டிவிட்டால், உடனே கடிவாயிலை ஒரு கூரிய பேனுக்கத்தியால் கீறி இரத்தம் வரச்செய்துவிட்டு, விஷந்தீண்டிய இடத்திலிருந்து நாலங்குலத்துக்கு மேலே ஒரு கயிற்றால் இறுகக் கட்டிவிடுக. கடிவாயிலில் சுடுநீரை ஊற்றிக்கொண்டிருக்கலாம். சமீபத்தில் பப்பாளிமரம் இருக்குமாயின், அதன் துளிரை எடுத்து, சுண்ணாம்புஞ் சேர்த்துக் கசக்கி, கடிவாயிலில் வைத்துக் கட்டலாம். ஒரு சிறு பிள்ளையினுடைய மூத்திரத்தை விஷம் தீண்டப்பெற்றவருக்குக் கொடுத்தலும் நல்லது.



2. ஒருவர் உடுத்திருக்குந் துணியில் தீப்பற்றிக்கொண்டால், அவர் அதை உடனே உரிந்துவிடவேண்டியது. அது முடியாதவிடத்து, நிலத்திலே விழுந்து உருளவேண்டும். ஒரு முரட்டுத் துணியை, அல்லது ஒரு சாக்கைச் சுற்றிக்கொண்டால், தீயின் சுவாலை ஒடுங்கிவிடும்.

3. நெருப்புச் சுட்டால், அல்லது கொதிநீரால், அல்லது கொதியெண்ணெயால் உடம்பில் எங்காயினும் வேக்காடு உண்டாயின், வாழையின் மட்டையைத் தட்டிப் பிழிந்து அதன் சாற்றை வெந்த இடத்தின் மேல் விட்டு, அதன் சக்கையையும் வைத்துக் கட்டிவிடவேண்டும்.

4. வெட்டுக் காயத்தினால் இரத்தம் அளவுக்கு மிஞ்சி ஓடுமாகில், அதை உடனே நிறுத்தவேண்டியது அவசியம். காயத்தின் மேலே உயரத்தில் இரண்டு அங்குலங்கள் விட்டு, ஒரு சீலையால் இறுகக் கட்டிவிடல் வேண்டும். பின்னர், மாசிக்காய்களைச் சுட்டெடுத்த சாம்பரைக் காயத்தின்மேல் தளமாக வைத்து அழுத்தின், இரத்தம் ஓடுதல் நின்றுவிடும்.

5. ஒருவர் வலி அடையப்பெற்று, அதனால் மூர்ச்சையனுபவித்துக் கிடந்தால், ஒரு ஈரவெங்காயத்தை இரண்டாக நறுக்கிக் கசக்கி அவர் மூக்கிற் பிடிக்கின், உடனே அறிவு தெளிவடையும். இதனால் குணமில்லை

யேல், சுக்கைத் தூளாக்கித் தெள்ளி யெடுத்த மாவில் ஒரு பேன்பிடி எடுத்து, நாசியில் நசியமிடின், அப்பொழுதே குணம் காணும்.

6. ஒருவர் நஞ்சை, அல்லது நஞ்சு கலந்த உணவை, அல்லது பானத்தைத் தாமேயாயினும், பிறர் சூழ்ச்சியாலேயாயினும் உட்கொண்டுவிட்டால், உடனே அவரை வாந்தியெடுக்கச் செய்வித்து, அவரது வயிற்றை வெறுமையாக்குவதே முதற் சிகிச்சையாகும். வயிறு முற்றிலும் வெறுமையான பின்னரே, நச்சு மருந்தை முறிக்கும் முறிப்புகளைக் கொடுக்கவேண்டும்.

**குறிப்பு.**— தொண்டைக்குள் விரலை விட்டுக் கூச்சமுண்டாக்கி வாந்தி செய்யலாம். அல்லது, கறியுப்பை வெந்நீரில் கரைத்து நிரம்பக் குடிக்கினும், வாந்தி வரும். வைத்தியர் வருவதற்குக் காலநீட்டம் ஏற்பட்டால், நஞ்சை உண்டவர்க்கு மிளகுக் கஷாயத்தைக் கொடுத்தல் நல்லது.



# பொதுவான வைத்திய விஷயங்கள்

## கண்ட சுத்தி

கடுக்காயைத் தூள் செய்து வைத்துக்கொண்டு, கையாந்தகரைச் சாற்றில் பெருவிரலையும் நடுவிரலையும் தோய்த்து, கடுக்காய்த் தூளில் தொட்டு முறையே அண்ணுக்கிலும் உண்ணுக்கிலும் அழுத்தின், கபநீர் வெளிப்படும். இப்படிக் காலையில் 3, 4 முறை செய்துகொண்டுவரின், கபம் நீங்கும்; கண்டம் சுத்தியடையும்.

## தலை மூளைக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்

நெல்லிக்காய், தான்றிக்காய், ரோசாப்பூ, பன்னீர், நாரத்தம்பழம், கோரைக் கிழங்கு, இஞ்சி, கஸ்தூரி, சந்தனம், வாதுமைப் பருப்பு, வெள்ளாட்டுப்பால் முதலியவைகளாம்.

## கண்ணொளிக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்

நெல்லிக்காய், குங்குமப்பூ, வெள்ளி, தங்கம், கடுக்காய்த்தோல், வாதுமைப்பருப்பு, கஸ்தூரி முதலாயினவாம்.

## பற்களுக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்

படிகாரம், சீரகம், கடுக்காய்த்தோல், கோரைக் கிழங்கு, ஏலம், அயப்பொடி, புளியங்கொட்டைத்தோல், பாக்கு, மிளகு, புகையிலை, முத்து, மகிழம்பட்டை முதலாயினவாம்.

## இருதயத்துக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்

மாதுளம்பழம், நெல்லிக்காய், கொத்தமல்லி, ரோசாப்பூ, நாரத்தம்பழம், கோரைக்கிழங்கு, ஏலம், குங்குமப்பூ, தாம்பூலம், கஸ்தூரி முதலியனவாம்.

## ஈரலுக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்

சாதிக்காய், கோரைக்கிழங்கு, திராட்சைப்பழம், ரோசாப்பூ, மாதுளம்பழம், பழையதண்ணீர் முதலியனவாம்.

## தீனிப் பைக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்

நெல்லிக்காய், மாதுளம்விரை, தான்றிக்காயின் மேற்றோல், ரோசாப்பூ, கடுக்காய், மிளகு, சாதிக்காய், கோரைக்கிழங்கு முதலியனவாகும்.

## தாதுவலிமையைக் கொடுக்கும் பதார்த்தங்கள்

தண்ணீர்விட்டான் கிழங்கு, பூமிசர்க்கரைக் கிழங்கு, ஜாதிக்காய், துத்திவேர், முருங்கைவிரை, பேரீச்சங்காய், சுக்கு, மிளகு, திப்பலி, கசகசா, மரவள்ளிக்கிழங்கு, முந்திரிகைப்பருப்பு, வாதுமைப்பருப்பு, திராட்சைப்பழம், எள்ளு, கடலை முதலாக உள்ளனவாம்.

## பெருத்த தேகம் சிறுக்கவும், சிறுத்த தேகம் பெருக்கவும்

நாலு ஆண்டு சென்ற தூதுவளைச் சமூலத்தை நிழலில் உலர்த்தி இடித்து, வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு, காலை மாலைகளில் வெருகடிப் பிரமாணம் எடுத்துத் தேனிற் கலந்து உண்டுவரின், பெருத்த தேகம் சிறுக்கும். அதை நெய்யில் கலந்து உண்டு வந்தால், சிறுத்த தேகம் பெருக்கும்.



## திப்பலியைத் தின்னும் முறையும், அதனால் தீரும் வியாதிகளும்

முதல் நாள் தொடங்கி முப்பதாம் நாள்வரை, ஆரோகண முறையில் ஒவ்வொரு திப்பலியை அதிகப் படுத்தித் தின்றபின், திரும்ப 31-ம் நாளிலிருந்து 60-ம் நாள்வரையில் அவரோகண முறையில் ஒவ்வொரு திப்பலியைக் குறைத்துத் தின்றால், நெடுநாள்பட்ட சுரம், வெட்டை, பித்தரோகம் முதலாயின தீரும். இம்முறையைச் செவ்விதின் முடிப்பதால் தேகத்திடனும் உண்டாம். இது மலையாள நாட்டுக் கைமுறைகளிலொன்றாகும்.

## விளாங்கனி, சுக்கு, கடுக்காய் ஆகிய இவற்றின் பயன்

காலை விளாங்கனி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டல முண்பரேல்
கோலை யூன்றிக் குனிந்து நடந்தவர்
கோலை விட்டுக் குலாவி நடப்பரே.

## உண்ணும் உணவு

ஒவ்வொருவரும் உண்ணும் உணவானது முதல் நாளில் ஜீரணமாகி, இரண்டாம் நாளில் அன்னரசமாகி, மூன்றாம் நாளில் இரத்தமாகி, நாலாம் நாளில் மாமிசமாகி, ஐந்தாம் நாளில் கொழுப்பாகி, ஆறாம் நாளில்

மச்சையாகி, ஏழாம் நாளில் அஸ்தியாகி, எட்டாம் நாளில் சுக்கிலமாகி, நாற்பதாம் நாளில் அமிர்தமாகும். இந்த அமிர்தத்திலிருந்துதான் ஓஜஸ் எனப்படும் சக்தி உண்டாகின்றது என்று மருத்துவப் பெரியோர் சொல்லு கின்றனர்.

### அருந்தும் ஆகாரங்கள் சீரணமாகும் காலங்கள்

| பதார்த்தங்கள் | காலங்கள் |
|---|---|
| காய்ந்த நீர் | $1\frac{1}{4}$ மணி நேரம். |
| பாகஞ்செய்த பதார்த்தங்கள் | 2 ,, ,, |
| அன்னம், வெண்ணெய் | 2 ,, ,, |
| கனியிரசங்கள் | $2\frac{1}{2}$ ,, ,, |
| உயர்ந்த பழவர்க்கங்கள் | 3 ,, ,, |
| தயிர் அன்னம் | $4\frac{1}{2}$ ,, ,, |
| தேன் | 5 ,, ,, |
| மோர் அன்னம் | $5\frac{1}{2}$ ,, ,, |
| நீர் அன்னம் | 7 ,, ,, |
| பால் | 8 ,, ,, |

### குடிக்குந் தண்ணீரின் அளவு

ஒவ்வொருவரும் உண்பதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாக 6 அவுன்சு தண்ணீர் குடிப்பது நல்லது. உண்டபின்னும், நீர் குடித்தல் அவசியமாகும். உண்ணுங்கால், இடையிடையே, நீர்குடித்தலானது ஜீரண சக்திக்குப் பங்கத்தை உண்டுபண்ணும். "இடையிற் குடியேல்; கடையில் மறவேல்" என்னும் பழமொழியை நினைவில் வைத்துக்கொள்க.



### சுத்த ஜலத்தின் குணம்

விழித்தவுடன் சுத்த ஜலம் அருந்தி வருவதாயின், பைத்திய தோஷம் விலகும்; மலசலபந்தம் நீங்கும்; வாதம் முதலிய முத்தோஷங்களும் தன் தன் நிலையில் நடமாடும்.

### வெயிலில் காய்தலால் உண்டாகும் பலன்

உதயகால வெயிலில் காய்ந்தவர்களுடைய சரீரத்தில் வியாதிகள் எல்லாம் உக்கிரமமாகச் சேரும்; மாலைக் கால வெயிலில் காய்ந்தவர்களுடைய சரீரத்தின்கண் பொருந்திய நோய்கள் நீங்கிவிடும் என்பர்.

### புகைகளின் குணம்

வேள்விப் புகையானது தீர்க்காயுளைக் கொடுக்கும்; சுடுகாட்டுப் புகையானது உள்ள ஆயுளையுங் கெடுக்கும்; மகாதைலப் புகையானது வாதரோகத்தைத் தனக்கு விருந்தாக உண்டுவிடும் என்பர்.

### ஸ்நானஞ் செய்யும் முறைகள்

1. ஸ்நானஞ் செய்யும் காலத்தில், இரண்டொரு எலுமிச்சம் பழத்தின் ரசத்தை நீரில் விட்டு ஸ்நானஞ் செய்தால், அது சருமத்தில் அடைத்துக் கொண்டிருக்கும் அழுக்கைப் போக்கி, சருமத்தை மிருதுவாகவும், சுத்தமாகவும் செய்வதுமன்றி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணும்.

2. ஸ்நானஞ் செய்வதற்குரிய நீரில் அரை இருத்தல் மிளகைப் பொட்டணங் கட்டிப் போட்டு, நீரைச்

சூடாக்கல் வேண்டும். அந்த நீரில் ஸ்நானஞ் செய்யின் நெஞ்சுநோவு, சரீர உளைவு முதலியன நீங்கிப் போகும்.

### மருந்துண்ணுங் காலம்

சனி, புதன், திங்கள் ஆகிய இந்நாள்களில் மருந்து உட்கொள்ளல் ஆகாது. வெள்ளிக்கிழமையில் உட்கொள்ளின் பிணி மிகுதிப்படும். வியாழன், செவ்வாய் என்னும் இத் தினங்களில் அருந்துவது நன்றேயாகும். ஞாயிற்றுக்கிழமை எல்லாவற்றினுஞ் சிறந்ததென்க.

### தனியியல்புடைய ரோகிகளை நடத்தவேண்டிய முறைகள்

நேத்திர ரோகிகளை வெளிச்சமுள்ள இடத்தில் இருத்துதலாகாது. செவி ரோகிகளை சப்தமில்லாத இடத்தில் இருக்கச் செய்யவேண்டும். நுரையீரல் ரோகிகளைப் பேசவொட்டாமல் செய்யவேண்டும். சிர ரோகிகளை உட்கார வைக்கவேண்டியது. கை கால் தம்பன ரோகிகளைப் படுக்க வைக்கவேண்டியது.

### பாலைக் கட்டியாக்கும் முறையும், அதன் உபயோகமும்

ஐந்துபடி சுத்தமான பசுப்பால் கொண்டுவந்து, பத்துப்படி நீர்கொள்ளக்கூடிய ஒரு மண்குண்டானில் விட்டு, அதில் அரை இருத்தல் அரைத்த வாதுமைப் பருப்பும், ஒரு இருத்தல் கிறேப் சீனியும் போட்டு அடுப்பேற்றி, ஒரே விறகால் எரித்தல் வேண்டும். பாலில் சூடேறியவுடன், வட்டத்துத்திமரத்தின் வேர்கள்



இரண்டை எடுத்து, நன்றாகக் கழுவி ஒன்றுசேர்த்து, அதனால் பாலைத் துழாவிக்கொண்டிருக்கின், அது 3, 4 மணிநேரத்தில் இறுகிக் கூழ்ப்பதமாகி வந்துவிடும். உடனே, அதை இறக்கி ஒரு தட்டத்தில் ஊற்றி வைத்து விடுக. இரண்டு மணிநேரஞ் சென்றபின் பார்க்கின், அது இறுகிக் கட்டியாய் இருக்கும். அதைச் சிறு துண்டுகளாக வெட்டி எடுத்து, வாய் அகண்ட ஒரு போத்தலில் போட்டு மூடிக் காற்றுப் போகாவண்ணம் வைத்துக் கொள்க. அத் துண்டுகள் ஒருமாசம் இரண்டுமாசம் வரையில் கெட்டுப்போகாமல் இருக்கும்.

அவற்றுள் ஒன்று அல்லது இரண்டு கட்டிகளைக் காலை மாலைகளில் புசித்து வரலாம். நாற்பது நாளைக்கு அவைகளைக் கிரமமாக இச்சாபத்தியத்துடன் உண்டுவரின், அவை தேகச் சூட்டைத் தணிப்பதுமன்றி, விந்து இறுகவும், தேகம் பெலக்கவும் செய்யும். அவற்றுள் 2 கட்டிகளைக் கொதிநீரில் போட்டுக் கரைத்துங் குடிக்கலாம். தேகம் இளைக்கப்பெற்ற ஆடவர்கள் அவற்றை உபயோகித்துவரின், அற்புதமான பலனை அடைவார்கள்.

### ஒன்றுக்கொன்று குணத்தில் விரோதமான பொருள்கள்

1. முள்ளங்கி, பசுங்கீரை முதலியனவற்றைப் புசித்தவுடனே, பசுப்பால் குடிப்பது பிசகு.

2. கோழி யிறைச்சியைத் தயிரோடு கலந்து உண்ணல் ஒவ்வாமையாகும்.

3. முள்ளங்கியை உழுத்தம்பருப்போடும், முளைத்த தானியங்களைத் தாமரைக் கிழங்கோடும் உட்கொள்ளக் கூடாது.

4. வாழைப்பழத்தை மோருடனாவது, தயிருடனாவது, பனம்பழத்தோடாவது புசிக்கக்கூடாது.

5. மணித்தக்காளியைத் திப்பலியுடனாவது, மிளகுடனாவது, தேனுடனாவது, வெல்லத்துடனாவது உபயோகிப்பது தவறு.

6. வெண்கலப் பாத்திரத்தில் பத்துநாள் ஊறிய நெய்யை உபயோகிக்கக்கூடாது.

7, தேன், நெய், எண்ணெய், தண்ணீர் ஆகிய இவற்றுள் எவற்றையேனும் இரண்டை, அல்லது மூன்றை, அல்லது எல்லாவற்றையும் சமஅளவாகச் சேர்த்து உபயோகித்தால், இவை ஒன்றோடொன்று குணத்தில் விரோதப்படும்.

8. தேனையும் நெய்யையும் வெவ்வேறு அளவில் கலந்து உபயோகித்தாலும் விஷமித்துவிடும்.

9. தாமரைவித்தும், தேனும் ஒன்றோடொன்று விரோதப்படும்.

### தயிரை உபயோகிக்கவேண்டிய முறை

பயறு, துவரம்பருப்பு, தேன், நெய், கற்கண்டு, நெல்லிக்கனி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றோடு தயிரை உபயோகிக்கவேண்டும். அதைத் தனியாக உப



யோகிக்கக்கூடாது; இரவிலும் உபயோகித்தல் ஆகாது; அதைத் தினந்தோறும் உபயோகிப்பதும் பிசகு; அதிகமாக உபயோகிப்பதும் பிசகு. இம்முறைக்கு மாறாகச் செய்தால் சுரம், குட்டம், பாண்டு, தலைச்சுற்றல் முதலிய ரோகங்கள் உண்டாகும்.

### வேகங்கள்

வைத்திய நூல்களில் வேகங்கள் பதினான்காகக் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன: பசி, நித்திரை, நாவறட்சி, ஏப்பம், வாந்தி, கொட்டாவி, பெருமூச்சு, தும்மல், இருமல், அபானவாயு, மலவிசர்க்கம், மூத்திர விசர்க்கம், சுக்கிலவிசர்க்கம், கண்ணீர் என்பனவாம்.

### இவ் வேகங்களை அடக்குவதால் உண்டாகும் வியாதிகள்

1. பசியை அடக்குவதால் தேகத் தளர்ச்சி, தேக வலி, தலைச்சுற்று, அரோசகம் ஆகிய விகாரங்கள் உண்டாகும்.

2. நித்திரையைத் தடுப்பதால் மயக்கம், தலையும் கண்களும் பாரமாயிருத்தல், சோம்பல், கொட்டாவி, உடலெங்கும் வேதனை ஆகிய இவைகள் உண்டாகும்.

3. நாவரட்சியைத் தடுப்பதால் முகம் உலர்தல், தலைச்சுற்றல், மயக்கம், செவிடு ஆகிய வியாதிகள் உண்டாகும்.

4. ஏப்பத்தைத் தடுப்பதால் உடம்பில் நடுக்கம், இருதயம், மார்பு ஆகிய இவ்விரண்டிலும் ஒருவகை

யான அடைப்பு, வயிற்றுப்பொருமல், இருமல், விக்கல் என்னும் ரோகங்கள் சம்பவிக்கும்.

5. வாந்தியை வரவிடாமல் தடுத்தலால், அக்கியென்று வழங்கப்படும் சர்மவியாதி, ஒருவித தழும்பு, குட்டம், கண்ணோய், பாண்டுரோகம், சுரம், காசம், இருதயத் துடிப்பு, வீக்கம் ஆகிய இவை உண்டாகும்.

6. கொட்டாவியைத் தடுப்பதால் தலைவலி, இந்திரியப் பெலக்குறைவு, வாயை ஒருபக்கமாக இழுக்கும் வாதரோகம் ஆகியவை உண்டாகும்.

7. ஆயாசத்தினாலுண்டாகும் பெருமூச்சை அடக்குவதால் குன்மம், இருதயவியாதி, மூர்ச்சை ஆகியவைகள் உண்டாகும்.

8. தும்மலைத் தடுப்பதால் கொட்டாவியைத் தடுப்பதா லேற்படும் தீமைகளே உண்டாகும்.

9. இருமலை அடக்குவதால், அதே இருமல் விருத்தியாவதுடன் சுவாசரோகம், இருதய வியாதிகள். க்ஷயம், விக்கல் ஆகியவையும் உண்டாகும்.

10. அபானவாயுவை அடக்குவதால் குன்மம், வயிற்றுவலி, சரீரவாட்டம், ஜடராக்கினிமந்தம், இருதயநோய் முதலானவைகள் சம்பவிக்கும்.

11. மலவிசர்க்கத்தைத் தடுத்தலால் சிரவேதனை, ஆசனத் துவாரத்தில் கடுப்பு, மாரடைப்பு ஆகிய வியாதிகள் உண்டாகும்.



12. மூத்திரத்தை அடக்குவதனால், மூத்திரமார்க்கத்தில் உண்டாகுங் கற்கள் போன்ற பதார்த்தங்களால் வியாதியும், மூத்திரப் பையிலும் ஆண்குறியிலும் தொடை யிடுக்குகளிலும் வேதனையும் உண்டாகும்.

13. சுக்கிலத்தைத் தடுப்பதனால் அஃதே அதிகமாகப் பொசிய ஆரம்பிக்கும்; குய்ய ஸ்தானத்தில் வேதனையும் வீக்கமுந் தோன்றும்; மூத்திர அடைப்பு சம்பவிக்கும்.

14. கண்ணீரைப் பெருகவிடாமல் தடுத்தால், கண்ணோய், தலைநோய், தலைச்சுற்று, பீநசம், இருதயநோய், குன்மம் ஆகிய இவ்வியாதிகள் உண்டாகும்.

# ஆராய்ந்தெடுத்த வைத்தியப் பழமொழிகள்

நமது செந்தமிழ் இலக்கிய நூல்களிலேயன்றி, வைத்திய நூல்களிலும் பல பழமொழிகள் காணப்படுகின்றன. பேரறிஞர் சிலரால் அப் பழமொழிகளுள் தமிழ் மக்கள் வாழ்க்கையின் பல துறைகளுக்கும் பொதுவானவைகளெல்லாஞ் செவ்விதின் தொகுக்கப்பட்டு, "பழமொழி அகராதி" எனவும், "பழமொழித் திரட்டு" எனவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவ்வாறாயினும், வைத்தியத்துறைக்குமட்டும் இன்றியமையாது வேண்டப்படுவனவாய எண்பத்துநான்கு பழமொழிகள்வரையில் வைத்திய நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்து, இவை தம்மை அகாவரிசைப்படுத்தி இங்குச் சேர்த்துள்ளோம். இவைகள் உவமை முதலான அலங்காரங்கள் அமையப்பெறாது இருப்பினும், நுண்மையும் சொற்சுருக்கமும் உடையனவாய், எளிதிற் பொருளை விளக்குகின்றன. இவ் அறிவுரைகள் ஒவ்வொன்றும் மருந்தாக உபயோகிக்கும் ஒவ்வொரு மூலிகையின் குணத்தையும், அம் மூலிகைகளைப்பற்றித் தலைமுறை தலைமுறையாய் வந்த அநுபவப் பயனையும் அறிவிக்குமாற்றைக் கண்டு கொள்க. நம் தமிழ் மக்கள் நோய்களையும், அவைகளுக்குச் செய்யும் சிகிச்சைகளையும் குறித்து உரையாடும் பொழுதும், எழுதும் பொழுதும் இப்பழமொழிகள் பயன்படுவனவாகும். இவைகளுக்கு எழுதப்பட்டுள்ள பொருளும் பெரும்பாலும் பொருத்தமுடையதென்று கருதுகின்றோம்.

1. அரிவையர் முலைப்பா லருந்த வூன்சித்தி.

**இதன் பொருள் :** மாதர்கள் முலைப்பாலை நாள்தோறும் அருந்திவரக்கூடுமாயின், தேகத்தில் வலுவுண்டாகும் (என்றவாறு).



2. அரவந் தீண்டிடில் அழுஞ்சிவேர்ப் பட்டையிடு.

**இ-ள் :** பாம்பு கடித்தவருக்கு அழுஞ்சிவேர்ப் பட்டையைக் காடிவார்த்தரைத்து, அக் காடியில் கலக்கிக் கொடுக்கின், அவ்விஷம் நீங்கும் (எ-று).

3. அழற்பித்த மாற்றும் பழத்தி விலந்தை.

**இ-ள் :** இலந்தைப் பழங்களைத் தின்றுவரின், அழற் பித்தமானது தணியும் (எ-று).

4. அறணைக் கடியை யாற்றுஞ் சிறுகுறிஞ்சான்.

**இ-ள் :** அறணை கடித்தால், சிறுகுறிஞ்சான் என்னும் இலையை அரைத்து, அக்கடிவாயிலில்பூசி, உள்ளுக்குஞ் சிறிது கொடுக்கின், அவ்விஷமானது நீங்கிவிடும் (எ-று).

5. இலந்தைக் கொழுந்தி லேகுங் கண்ணெரி.

**இ-ள் :** இலந்தைக் கொழுந்தை அரைத்துப் பசுப் பாலிற் குழப்பித் தலையில் அப்பிவைத்து முழுகிவருவதால் கண்ணெரிச்சல் நீங்கும் (எ-று).

6. இளம்பிறை கட்டக் கிளம்பிடுந் தோஷம்.

**இ-ள் :** அமாவாசி கழிந்தபின், திரிதிகை திதியின் நேரத்தில் மூன்றாம்பிறை தோன்றும்பொழுது, அப்பிறையைப் பார்த்து, முன்னமேயே அப்பிறையைப் போலத் தங்கத்தினால் அடிக்கப்பட்டுக் கத்தரித்துக் காது பற்ற வைத்துள்ள தகட்டைத் தோஷம் பிறந்துள்ள குழந்தைகள் கழுத்தில் கட்டிவிடின், அத் தோஷம் நீங்கிவிடும் (எ-று).

7. உத்தாமணிப் பாலொழிக்கும் புண்ணொடு சிரங்கு.

**இ-ள்:** புண், சிரங்கு, கால் கை வீக்கம் முதலியவைகளின் மேல் உத்தாமணிப் பாலைத் தடவிவரின், அவைகள் நீங்கிவிடும் (எ-று).

8. உயர்வாந்தி தீர நீருடன் கடுகரைத்திடு.

**இ-ள்:** மிகுந்த வாந்தியை நிறுத்த வேண்டுமாகில், கடுகைத் தண்ணீர்விட்டு அரைத்துச் சீலையில்தடவி, இடது பக்கத்து மார்பின் கீழே கடுகு பூசியபக்கம் மேற்பக்கமாகப் போடின் வாந்தி நிற்கும். எரிவு தொடங்கின், கடுகுச் சீலையை எடுத்துவிடல் வேண்டும் (எ-று).

9. ஊழி நேரிட்டா லுருக்கிடுஞ் சத்தை.

**இ-ள்:** வாந்திபேதி வியாதியானது சம்பவித்தால், தேகத்திலுள்ள சத்தை யுருக்கி இந்திரிய முதலியவற்றை வெளியில் விடுக்கும் (எ-று).

**குறிப்பு:**— "உரத்த விதியுளோர்க்கும் ஊனத்தைப் போக்கும் ஊழி" என்ற முதுமொழியும் உண்டு.

10. ஊதாரிப் பிள்ளைக்கு ஓமந்தான் கதி.

**இ-ள்:** உடற்கேடுற்ற பிள்ளைக்கு ஓமத்தைக் கொடுத்துவரின், அதன் உடல் திடமாகப் பெற்று, யாதொரு நோயுமின்றி, நீண்டகாலஞ் சீவித்திருக்கும் (எ-று.)

11. எந்த வீக்கத்திற்கும் எருக்கின்பா லடி.

**இ-ள்:** எருக்கின் பாலை எவ்வித வீக்கத்தின் மேலும், மற்றைய பக்கச் சூலை, சுளுக்கு, தேகநோக்காடு



என்ற அவைகளின் மேலும் தடவி, அதன் வேர் அருகிலுள்ள மண்ணை அவைகளின் மேலே போட்டுவரின், அவைகள் தீரும் (எ-று).

12. ஏந்திழைக் கீருள்ளி யேற்ற முலைப்பாலே.

**இ-ள்:** பாலில்லாத மாதர்களுக்கு 3 கழஞ்சு உள்ளிப்பூண்டை உடைத்துத் தோல் நீக்கி வறுத்து, அதனோடு பனங்கட்டியைச்சேர்த்து உள்ளுக்குக் கொடுத்துவரலாயின், அவர்களுக்குப் பாலானது அதிகமாகச் சுரக்கும் (எ-று).

13. ஒட்டிய புண்ணை யொடுக்கும் மல்லிகைப்பூ

**இ-ள்:** ஒட்டிய புண் எனப்படும் தொற்றுச் சிலந்தியின் மேல் மல்லிகைப் பூவை வைத்துக் கட்டின், அஃது ஆறிப் போகும் (எ-று).

14. ஓரிதழ்த் தாமரை உண்ணப் பெலனுண்டாம்.

**இ-ள்:** புருஷரத்தினம் என்று சொல்லப்படும் ஓரிதழ்த் தாமரையைக் காலையிற் பிடுங்கித் தின்றுவாலாயின், அது இந்திரியபுஷ்டி, ஆண்மை ஆகிய இவற்றைத் தரும் (எ-று).

15. கற்பூர வல்லியிற் கனிவாழை பற்பமாம்.

**இ-ள்:** கற்பூரவல்லியின் இரண்டு இலைகளை வாழைப் பழத்துள் பதித்து, பத்து எருவினால் புடம்போடில், அவ்வாழைப்பழம் பற்பமாகும் (எ-று).

16. கிராணிக் கழிச்சற்கு இடு மாதுளம் பிஞ்சு.

**இ-ள்:** கிராணிக் கழிச்சற்கு மாதுளம் பிஞ்சைச் சுட்டு அரைத்துத் தேனிற் குழப்பித் தின்றால், அது நிற்கும் (எ-று).

17. கீரைப்பூச்சிக்கு இடு மாமுருங்கைச் சாறு.

இ-ள்: கீரைப்பூச்சி வாதைக்கு முருங்கையிலைச் சாற்றை உப்புடன் சேர்த்துக் கொடுத்தால், அப் பூச்சிகள் மலத்தின் வழியாய் வெளிப்பட்டு வந்துவிடும் (எ-று).

18. கூறிய சிலந்திக்கு இடுக தேள்கொடுக்கிலை.

இ-ள்: சிலந்திக் கடிக்குத் தேள்கொடுக்கிலைச் சாற்றைப் பூசின், அவ் விஷமானது தீரும் (எ-று).

19. காமாலை சோகைக்குக் கையான்சா றேற்றிடு.

இ-ள்: கரிசலாங்கண்ணியென்று சொல்லப்படும் கையாந்தகரையிலையோடு கொஞ்சம் மிளகும் பூண்டும் வைத்தரைத்து, எலுமிச்சம்பழப் பிரமாணம் காலையில் உண்டுவரலால், பாண்டு காமாலை சோகை என்பன தீரும் (எ-று).

20. கொன்றைப் பட்டையிற் கோடி வியாதிபோம்.

இ-ள்: சரக்கொன்றைமரப் பட்டையின் சூரணத்தை உட்கொள்பவரிடமிருந்து பல வியாதிகள் அகன்றுவிடும் (எ-று).

21. கோழையை யிளக்குங் குப்பைமேனிச் சாறு.

இ-ள்: குப்பைமேனிச் சாற்றைக் குழந்தைகளுக்கு 15 துளிகள் வீதம் காலையில் கொடுத்துக்கொண்டு வந்தால், அது கபத்தை அறுத்துத் தள்ளும் (எ-று).

22. சன்னிக்கு வன்னி தாக்குங் கஸ்தூரி.

இ-ள்: சன்னி தோன்றியபொழுது, கஸ்தூரியைப் பிரயோகிப்பதனால் அது சூட்டை உண்டாக்கி, அந்தச் சன்னியைப் போக்கும் (எ-று).



23. சிறியாள் நங்கை கண்டறியான்,
சீறிய நாகங் கட்டறியான்.

இ-ள்: சிறியாள்நங்கை யென்னும் மூலிகையை யறியாதவன் சீறிடும் வெண்ணாகம் என்னும் உலோகத்தைக் கட்டும் வன்மையில்லாதவன் ஆவன் (எ-று).

**குறிப்பு.**— சீறிய நாகம் என்பதற்குச் சீறிவந்த நாகப் பாம்பு என்றும் பொருள் செய்யப்படும்.

24. சீரகந் தின்னச் சீரணம் யாவும்.

இ-ள்: அசீரணப்பட்டவர் கொஞ்சம் சீரகத்தைத் தின்பரேல், அது அவர்க்குச் சீரண சக்தியைத் தரும் (எ-று).

25. சூதத்திற் கெந்தி சேர்வுறின் மரணம்.

இ-ள்: ரசத்தில் கெந்தியைச் சேர்த்தரைப்பின், ரசமானது மாண்டுவிடும் (எ-று).

26. செம்முள்ளி தன்னில் நம்வெள்ளி நீறும்.

இ-ள்: வெள்ளித்தகட்டைச் செம்முள்ளி யிலையால் கவசஞ் செய்து கோழிப்புடமிடின் அது நீறுகும் (எ-று).

27. சேங்கொட்டை யண்ணன் சேதி தெரியாதா.

இ-ள்: சேங்கொட்டையின் பாலானது சிலருடைய தேகத்திற் பட்டவுடனே, தேகம் ஊதித் தொந்தரவு அடையும் (எ-று).

**குறிப்பு.**— அதற்குக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு போய்ப் புளியமரத்தைத் தழுவிச் கட்டியழுதால், அக் கொட்டையால் தேகத்தில் உண்டாய வீறு தணிந்திடும் என்பர்.

28. தண்ணீர் முட்டானைத் தழுவப் பால்சுரக்கும்.

**இ - ள் :** தண்ணீர்முட்டான் கிழங்கை மங்கையர் தம்முடைய மார்போடணைத்துத் தழுவிவரலால் அவர் தமக்கு முலைப்பால் சுரக்கும் (எ–று).

29. திப்பிலி தின்று திடமானாள் அப்பாத்தை.

**இ - ள் :** தமக்கையானவள் தான் பிரசவித்தவுடனே, திப்பிலியைத் தின்றல்லவா தேக திடமடைந்தாள் (எ–று).

30. தூதுவளையாற் சொல்வ தெல்லாம் அறும்.

**இ - ள் :** தூதுவளையின் இலை, பூ, காய், வேர், வற்றல் என்பனவற்றை உபயோகித்தால், மனிதரால் சொல்லப்படும் வியாதிகள் அனைத்துந் தீரும் (எ–று).

**குறிப்பு.**— "தூதூபத்திரி நூறுபத்துநோய் மாற்றிடும்" என்ற உலக வசனமும் உளது.

31. தெளியவே செப்பு நெருஞ்சிக்கு ஒப்பில்லை.

**இ - ள் :** செப்புநெருஞ்சியானது எல்லா வியாதிகளையும் நீக்கி இரத்த சுத்தி செய்வதால் அதற்கு வேறொன்றும் ஒப்பில்லை (எ–று).

32. தேற்றாங் கொட்டையிட்டுத் தேற்றுக மைந்தரை.

**இ - ள் :** தேற்றாங்கொட்டையைப் பாலில் உரைத்து ஒரு கடலைப் பிரமாணம் குழந்தைகளுக்குக் கொடுத்து வருமிடத்து, இரத்தம் சுத்தமாகி உடம்பு செழிப்புற்றிருக்கும் (எ–று),



33. தைப்பிறை காணின் தழைத்திடும் பூநீர்.

**இ - ள் :** பூநீரானது தைமாதம் மூன்றாம் பிறை நாள் முதற்கொண்டு எங்கும் ஜனித்துத் தழைக்கும் (எ–று).

34. தோகை மோக முறத்தொடு மயிர்மாணிக்கம்.

**இ - ள் :** மாதர்மேல் மோகமில்லாதவர்கள் மயிர்மாணிக்கத்தை உபயோகித்துவரலாகின், மோகமும் ஆண்மையும் உண்டாகும் (எ–று).

35. நிலப்பனை தன்னை நெய்யி லுண்ணின்
நண்ணிடுங் கர்ப்பம்.

**இ - ள் :** நிலப்பனைக்கிழங்கைச் சூரணஞ்செய்து வெருகடிப்பிரமாணம் நெய்யில் ஒரு மண்டலம் உண்டு வருவதாயின், அது தேகத்திலுள்ள சூட்டை ஆற்றிக் கர்ப்பத்தை உண்டாக்கும் (எ–று).

36. நுணாயிலைச் சாற்றில் கண்சூடு தணியும்.

**இ - ள் :** கண் சூடுகொண்ட பிள்ளைகட்கு நுணாயிலைச் சாற்றைப் புகட்டினால், அச்சூடு தணியும் (எ - று).

37. நெல்லியின் பேரை யல்லினிற் சொல்லாதே.

**இ - ள் :** நெல்லிக்கனியென்னுஞ் சொல்லை இராக்காலத்தில் சொல்லுதலாகாது (எ–று).

**குறிப்பு.**—இதனால் நெல்லிக்கனியை அக்காலத்திலே உண்ணுதல் கூடாதென்பது வற்புறுத்தப்பட்டதென்றறிக.

38. நைவினை யோர்க்கு நாளென்ப தில்லை.

இ-ள்: தீராத நோயாளிகட்கு மருந்தளிக்கவும், மற்றவைகளைச் செய்யவும் நாள், கிழமை, நக்ஷத்திரம் என்பவற்றைப் பார்ப்பது அவசியமன்று (எ-று).

39. நொந்த வுடம்பிற்கு வெந்த வமுதிடு.

இ-ள்: நொந்த வுடம்பையுடைய நோயாளிகளுக்கு நன்றாக வெந்த அமுதையே உண்ணும்படி இடவேண்டும் (எ-று).

40. பாகற்சாறு கைவிடப் பட்டது மருந்தீடு.

இ-ள்: வயிற்றில் நச்சுமருந்திருக்கில், பாகற்சாற்றை உள்ளங்கையில் விடுவதனால், அது உறைந்துவிடும். இல்லாவிடில், அது விட்டபடியே யிருக்கும் (எ-று).

41. பெருங்காயந் தின்று பெலமானாள் அப்பாத்தை.

இ-ள். பிரசவித்த அக்காளானவள் பெருங்காயந் தின்று பெலமடைந்தாள் (எ-று).

42. போத்துண்ணுப் பாலை மாற்றும் விஷங்களை.

இ-ள்: ஆடுதின்னுப்பாலையானது விஷப்பிராணிகளால் உண்டான நோயையும் அகற்றிடும் (எ-று).

43. போதைக்கு நல்லெண்ணெய் பையவே காதேற்றுக.

இ-ள்: கள்ளுச் சாராயம் குடித்துப் போதை அதிகரிக்கப் பெற்றவர்களுடைய இருகாதுகளிலும் சிறிது நல்லெண்ணெய் விட்டு அடைத்தால், போதை அகலும் (எ-று).

9152 c.c



குறிப்பு.— கண்களிலும் மூக்கிலும் அவ் வெண்ணெயை விடின் புத்தி தெளியும்.

44. மண்டூரந் தின்னக் கெண்ட னுவன்.

இ-ள்: மண்டூரத்தால் செய்யப்பட்ட செந்தூரத்தைத் தின்றவன் கெண்டன் (பலசாலி) ஆவன் (எ-று).

45. மீனிற்சுறு வெகு முலைப்பால் தரும்.

இ-ள்: சுறுமீனைப் பாலில்லாத மாதர்கள் உண்ணுவார்களாயின், அதிகப் பால் சுரக்கும் (எ-று).

46. முருங்கைப்பூ வுண்ண நொறுங்கும் மாமேகம்.

இ-ள்: முருங்கைப் பூவைச் சமைத்தாகிலும், அல்லது வேறெந்தவிதமாகிலும் உட்கொள்ளின், மகாமேகமானது தீரும் (எ-று).

47. மேகத்தை நீக்கும் மிகவே பறங்கிச் சக்கை.

இ-ள்: பறங்கிக் கிழங்கானது மேகத்தைப் பெரிதும் நிவர்த்தி செய்யும் (எ-று).

48. மைந்தரை வளர்க்கும் மணித் தக்காளி

இ-ள்: இளைஞர்கள் மணித்தக்காளியை உண்டுவரின், அது அவர்களை வளரச் செய்து பாதுகாக்கும் (எ-று).

49. வன்னியிலை யுண்ண மதுமேகந் தீரும்.

இ-ள்: வன்னியிலையை அரைத்து உட்கொண்டு வந்தால், மதுமேக மூத்திரநோய் தீரும் (எ-று).

50. விஷத்துக் கேற்றிடு விஷபத்தி சீரகம்.

**இ-ள்:** பாம்பின் விஷம் ஏறப்பெற்றவர்களுக்கு விஷபத்தியும் சீரகமும் சேர்த்து அரைத்த விழுதை உட்செலுத்தலாயின், அவ்விஷம் இறங்கும் (எ-று).

51. விடாத சுரத்துக்கிடு விட்டுணு கிராந்தி.

**இ-ள்:** மாறாத சுரத்துக்கு விட்டுணு கிராந்திக் கஷாயத்தைக் கொடுத்தால், அச் சுரம் நீங்கும் (எ-று).

52. வீரனைக் காண விலகிடும் வல்வினை.

**இ-ள்:** வீரம் என்ற பாஷாணத்தைப் பற்பமாக்கி உண்ணின், கர்ம ரோகங்களும் நீங்கிவிடும் (எ-று).

53. வேளையைத் தின்ன வேண்பிணி போமே.

**இ-ள்:** தயிர்வேளை என்னும் மூலிகையை உண்டு வரின், ஒழியவேண்டுமென்று விரும்பப்படுகின்ற பிணிக ளெல்லாம் ஒழிந்தே போகும் (எ-று.)

# வைத்தியப் பழமொழிகள்

## (வேறு)

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்.
2. அணியிழைதன் நோய்க்குத் தானே மருந்து.
3. ஆயிரம் பேரைக் கண்டவன் அரைப்பரிஹாரி.

**குறிப்பு.**— இப்பழமொழியானது, "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப் பரிஹாரி" என்றும், "ஆயிரம் வேரைக் கண்டவன் அரைப்பரிஹாரி" என்றும் வழங்கும்.

4. இடர்நாபி முறிய இடுநாவற் கொழுந்து
5. உடன் பிறந்தே கொல்லும் வியாதி.
6. கெந்தியே நாதம் விந்துவே சூதம்.
7. சுன்னத்தில் மஞ்சள் சூட்சமறியும்.
8. தீரா நோய்க்கிடு சிவனார் வேம்பு.
9. நத்தைச்சூரி எத்தைச் சொன்னாலுங் கேட்கும்.
10. நொறுங்கத் தின்றவன் நூறுவய திருப்பான்.
11. நோயற்ற வாழ்வே வாழ்வு.
12. நோயொன் றிருக்க மருந்தொன் றேரு.
13. நோய்கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு.
14. பத்து மிளகிருக்கப் பகைவன் வீடுண்ணலாம்.
15. பழம் புண்ணாளி பாதிப் பரிஹாரி.

25

16. புழைக்கடை மருந்து கவைக் காகாது.
17. பொன்னது வேண்டிற் பூவரசைப் பார்.
18. மட்டான போஜனம் மனதுக்கு மகிழ்ச்சி.
19. மருந்து கால் மதி முக்கால்.
20. மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
21. மிளகுளி உண்டவன் பிழைத்தல் அரிது.
22. மூலத்துக் காதி முன்சிசு ஹத்தி
23. மோரும் சோறும் முறிக்கும் வாளத்தை.
24. வாதங் கெட்டது வைத்தியம்.
25. வாதி மகன் வைத்தியன்.
26. வாதத்துக்கு மருந்துண்டு பிடிவாதத்துக்கு மருந்தில்லை.
27. விஷத்துக்கு மாற்று விஷம்.
28. வியாதிக்கு மருந்துண்டு விதிக்கு மருந்தில்லை.
29. வெள்ளி வேண்டிற் கள்ளியைப் பார்.
30. வைத்தியம் பொய்யானல் வாளத்தைப் பார்.
31. லங்கணம் பரம ஔஷதம்.

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 41 | Hydrogin | Hydrogen |
| 48 | கருவேலன் பற்பொடி | கருவேலம் பற்பொடி |
| 76 | மூலபீநசம் | மூளைப்பீநசம் |

# இந் நூலின்கண் எடுத்துக் கூறப்பட்டுள்ள நோய்கள் முதலியவற்றின் அகராதி


| | பக்க எண் |
|---|---|
| அண்டவாதம் | 84 |
| அண்டவாய்வு | 155 |
| அத்திவாரமான வீக்கம் | 115-6 |
| அருந்திய ஆகாரம் சீரணமாகுங்காலம் | 174 |
| அரையாப்பும் தொடைவாழைக் கட்டிகளும் | 129 |
| அறணைக்கடி | 8 |
| அறுபட்ட நரம்பு | 127 |
| ஆடும் பல் | 143 |
| ஆபத்துவேளையில் ஆரம்ப சிகிச்சைகள் | 168-70 |
| இருதயத்துடிப்பு | 148 |
| இருதயத்துக்கு வலுமை கொடுக்கும் பதார்த்தங்கள் | 172 |
| இருமல் வகைகள் | 158-9 |
| இலாகிரிபோதை | 151 |
| ஈரலுக்கு வலுமை கொடுக்கும் பதார்த்தங்கள் | 172 |
| ஈழை | 160 |
| உட்டண வாதம் | 83 |
| உண்ணுக்கு வளர்ச்சி | 88,147 |
| உண்ணும் உணவு | 173 |
| உணவில் உண்டாகும் வெறுப்பு | 152 |
| உதிரப்போக்கு | 111 |
| உப்பின் உபயோகங்கள் | 166-8 |

| | பக்க எண் |
|---|---|
| உவாந்திபேதி (கோதாரிக்கழிச்சல்) | 23 |
| எக்சிமா கருங்கிரந்தி | 138 |
| எலிக்கடி | 4 |
| ஒன்றுக்கொன்று குணத்தில் விரோதமான பொருள்கள் | 177-8 |
| ஓங்காளமும் விக்கலும் | 149 |
| ஓடு வாய்வு | 148 |
| ஓணான்கடி | 8 |
| கட்டிகள் | 117-9,124 |
| கணச்சூடு | 89-91 |
| கண்டக்கரப்பன் | 140 |
| கண்டசுத்தி | 171 |
| கண்டமாலை | 130-1 |
| கண்ணாடி, பீங்கான், ஆணிக்குத்து | 140-2 |
| கண்ணொளிக்கு வலுமை கொடுக்கும் பதார்த்தங்கள் | 171 |
| கபால இடிகள் | 60-2 |
| கமுக்கட்டில் வரும் விஷப்பரு | 133-4 |
| கல்லடைப்பு | 27 |
| கழிச்சலும் வாந்தியும் | 22 |
| கழுத்து வீக்கம் | 133 |
| காஞ்சோன்றி | 151 |
| காணாக்கடி | 6 |
| காதுநோய்கள் | 71-4 |
| கிருமி மார்பு ரோகம் | 89 |
| கிருமிரணங்கள் | 126 |
| குக்கல் அல்லது கக்குவான் | 91-3 |



| | பக்க எண் |
|---|---|
| குடற் கிருமிகள் | 85-7 |
| குடிக்குந் தண்ணீரளவு | 174 |
| குளிர்க்காய்ச்சல், மலேறியாக் காய்ச்சல் | 156 |
| குன்மவாய்வு | 160-1 |
| கூகைக்கட்டு | 132-3 |
| கைகால் வெடிப்புகள் | 128 |
| கொட்டாவி | 152 |
| கொள்ளிக்கரப்பன் | 139 |
| சன்னிக்கட்டு, சன்னி முள்ளு | 128-9,150 |
| சாரீரம் நன்ருவதற்கு | 164 |
| சிலந்திக்கட்டு | 124-5 |
| சில் விஷங்கள் | 9 |
| சீரண சக்தியைத்தரும் ஆகாரங்கள் | 165-6 |
| சுகபேதி | 161 |
| சுத்த ஜலத்தின் குணம் | 175 |
| செங்கண்மாரி | 153 |
| செருப்பாலுண்டாகும் புண் | 128 |
| சொறி சிரங்கு | 140 |
| தந்தரோகங்கள் (பல்வியாதிகள்) | 39–51 |
| தயிரை உபயோகிக்கவேண்டிய முறை | 178 |
| தலைப்பேன் | 152 |
| தலைமயிரைப்பற்றியவைகள் | 156–7 |
| தலையிடி வகைகள் | 52–56 |
| தலைமூளைக்கு வலுமைகொடுக்கும் பதார்த்தங்கள் | 171 |
| தலைப்புற்று | 134 |
| தலைச்சொடுகு | 135 |
| தாது விருத்தி | 163 |

| | பக்க எண் |
|---|---|
| தாது வலுமையைக் கொடுக்கும் பதார்த்தங்கள் | 172 |
| தாரா உண்ணிக்கடி | 7 |
| திப்பலி தின்னும் முறை | 173 |
| தீனிப்பைக்கு வலுமை கொடுக்கும் பதார்த்தங்கள் | 172 |
| தேகத் தடிப்பு | 139 |
| தேக வெளுப்பு | 164 |
| தேகப் பளபளப்பு | 165 |
| தேள், நண்டுவாய்க்காலி, தேனி, குளவி | 2-3 |
| தொண்டையைப்பற்றியவைகள் | 145-7 |
| நகத்தைப்பற்றியவைகள் | 111,131-2 |
| நயனரோகங்கள் ( கண்வியாதிகள் ) | 64-70,151 |
| நாய்க்கடி | 5-6 |
| நாரிப்பிடிப்பு | 154 |
| நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தைலம் | 148 |
| நீர்ச்சிரங்கு | 132 |
| நுளம்புக்கடி | 150 |
| நெருப்புச்சூடு, எண்ணெய்ச்சூடு முதலியன | 136-7 |
| நேத்திரபேதி | 163 |
| நொய்தான இடத்திலுண்டாகும் வீக்கம் | 115 |
| நோவுகள் | 111-3 |
| படையும் தேமலும் | 137 |
| பருக்கள் | 113-6 |
| பவுத்திரக் கட்டுகள் | 130 |
| பற்கிட்டு | 149 |
| பற்களுக்கு வலுமை கொடுக்கும் பதார்த்தங்கள் | 171 |





| | பக்க எண் |
|---|---|
| பாண்டு, காமாலை, சோகை | 155 |
| பாம்புக்கடி | 10-14 |
| பாலரோகங்கள் | 48,85-94,96,134,136 |
| பாலுண்ணி | 150 |
| பாலைக் கட்டியாக்கும் முறை | 176 |
| பித்தவெடிப்பு | 127 |
| பிரசவ வைத்தியம் | 107-9 |
| பீநசரோகங்கள் | 75-9,153 |
| புகைகளின் குணம் | 175 |
| புண்களைப்பற்றியவைகள் | 120-4 |
| புலிமுகச் சிலந்தி | 1 |
| புழுவெட்டு | 157 |
| பெண்களுக்கு உண்டாகும் ரோகங்கள் | 97-106,127 |
| பெருத்த தேகமும் சிறுத்த தேகமும் | 172 |
| மண்ணுணிப் பாம்புக்கடி | 7 |
| மயிர்க்[illegible]டி | 9 |
| மருந்துண்ணுங் காலம் | 176 |
| மலச்சிக்கல் | 151 |
| மலவாசலின் பக்கங்களிலுண்டாகும் கட்டிகள் | 125 |
| மாலைக்கண் | 70 |
| முகப்பரு | 152 |
| முட்சூலை | 142 |
| முள்ளு, ஈர்க்கு, சிராய் ஆகியவற்றின் குத்துகள் | 141-2 |
| மூக்குப்புண் | 126 |
| மூத்திரரோகங்கள் | 24-9,163 |
| மூலரோகங்கள் | 30-8,153 |

| | பக்க எண் |
|---|---|
| மூளைப்பேதி | 162 |
| மேகரணங்கள் | 126 |
| மொழி வீக்கம் | 84 |
| வயிற்றெரிவு | 151 |
| வயிற்றுளைவு | 15-22 |
| வாதரோகங்கள் முதலியன | 80-3 |
| வாயவியல் | 147-8 |
| விக்கல் ரோகம் | 144-5 |
| விதை வீக்கம் | 84 |
| வியர்வையாலுண்டாகும் வேர்க்குரு | 135 |
| விளாங்கனி, சுக்கு, கடுக்காய் ஆகியவற்றின் பலன் | 173 |
| வெட்டுக் காயங்கள் | 110-111 |
| வெயிலில் காய்தலின் பலன் | 175 |
| வேகங்களை அடக்குவதால் உண்டாகும் தீமைகள் | 179-81 |
| வைத்தியப் பழமொழிகள் | 182-194 |
| ருதுவடையாத பிள்ளைக்கு சிகிச்சை | 101 |
| ஜலதோஷம் | 57-9 |
| ஸ்நானஞ் செய்யும் முறைகள் | 175 |

9152 c.c